# விலக்ஷணாம்ருதம்



ஓம்

தத் ஸத்

# விலக்ஷணாம்ருதம்


*ஆசிரியர்*

டாக்டர் திருமதி **அனந்தகிருஷ்ணா**


ஸ்ரீ ஸ்வாமிகளின் 121ஆவது ஜெயந்தி
விழாவையொட்டி பிரசுரிக்கப்பட்டது.

**27-12-2015, ஞாயிற்றுக்கிழமை**


*வெளியீடு*

**யோக ப்ரயாகா**

12/16, டானியல் தெரு,
ஆதம்பாக்கம், சென்னை - 600 088.
தொலைபேசி : 2245 0119 கைபேசி : 92821 04459

முதற் பதிப்பு : டிசம்பர், 2015

ஒளியச்சு & அச்சிட்டோர்
பரணி கிராபிக்ஸ்
இராயப்பேட்டை, சென்னை – 600 014.
தொலைபேசி : 2813 1102

# அணிந்துரை

பரம காருண்யமூர்த்தியாகிய இறைவன், ஜீவர்களின் அறியாமையாலும் அஞ்ஞானத்தாலும், இருளில் மூழ்கி தவிப்பதை, தன் பரம காருண்யத்தால் அரிய மகான்களை, பூலோகத்தில் ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமானுஜர் முதற் கொண்டு ஸ்ரீ விலக்ஷணானந்தர் வரையிலும் தோன்ற செய்தார்.

இன்னும் இப்பவும் திருமதி டாக்டர் அம்மா வரையிலும் அநேக வேத வேதாந்த தத்துவங்களை பரிபக்குவம் உள்ள ஆன்ம நேயர்களுக்கு ஏற்றவாறு, போதித்தும் வந்தார்கள்; போதித்துக் கொண்டும் இருக்கிறார்கள்!

அந்த நிலையில் அம்மா அவர்கள் ஸ்ரீ விலக்ஷணாம்ருதம் எனும் பெருமை பொறுந்திய பொக்கிஷத்தை தொகுத்து வழங்கியுள்ளார்கள். பெரும் பாக்கியசாலியாகிய அம்மா அவர்கள், சற்குரு ஸ்ரீ விலக்ஷணானந்த குரு மகராஜை தரிசித்தும், அவரோட பேசியும், அவருக்கு தொண்டுகள் செய்தும், அவரிடத்தில் அருளாசியை பெற்றும், அன்று முதல் இன்று வரையிலும், குரு சேவையில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டதும் அல்லாது, மற்றவர்களையும், பிரம்ம ஞானத்தை அடைய, சுவாமிகள் அருளிய எண்ணற்ற நூல்களை மறு பதிப்பு செய்தும், வருடாவருடம் குரு பூஜா வைபவமும் மாதந் தோறும் பாதுகார்ச்சனையும் தமது இல்லத்தில் செய்து வருவ திலேயே தனது குரு பக்தியை நாம் தெரிந்து கொள்ளலாம். ஞானத்தை அடைய வேண்டுமானால் நல்ல குரு அமைய வேண்டும் என்று பெரியோர்கள் கூறுவ துண்டு. அதுபோல் பிரம்ம சொருபமான சற்குரு ஸ்ரீ விலக்ஷணானந்தரை குருவாக அடைந்த அம்மா அவர்கள் அன்று முதற் கொண்டு இன்றுவரை தன் ஆன்மீக அனுபவங் களை அப்படியே நேரில் கண்டு அனுபவிப்பதுபோல் இந்நூல் தோன்றுகிறது. சுவாமிகள் எங்கெல்லாம் சென்று சொற்பொழிவு செய்தார்கள்

எனும் பத்திரிக்கைகளையும் இதில் வெளியிட்டு உள்ளார்கள். அரிய பொக்கிஷமாகும் சுவாமிகளுக்கு சேவை செய்த பாக்யசாலிகளாகிய அநேக சீடர்களை பற்றியும் வெளியிட்டுள்ளார்கள். சுவாமிகளின் விலக்ஷணானந்த போதம், ஞான ரகஸ்யம் மிகவும் முக்கியமானது. இந்த இரண்டு நூல்களை இருமுறை படித்து விட்டால் போதும் பரமானந்தம் கிடைத்துவிடும். குரு அருள் கிடைத்தால் மறுபிறப்பு இல்லை என்பது ஆன்றோர்கள் வாக்கு. அதற்கு ஏற்றாற்போல் அம்மா அவர்கள் (ஆனந்தோ பிரஹ்மேதி வ்யஜனாத்) என்ற வேத வாக்கிற்கு தகுந்தார்போல் பிரம்ம ஞானியாகிவிட்டதாலேயோ என்னமோ நமக்கு இத்தனை ஞானநூல்கள் கிடைக்கப் பெறுகின்றன.

விலக்ஷணாம்ருதம் நூலை கொடுத்து இதில் உள்ளதைப் படித்து அணிந்துரை அளிக்க வேண்டுமென்று அடியேனையும் ஒரு பொருட்டாக எண்ணிய அம்மா அவர்களுக்கு என்ன கைமாறு செய்ய முடியும்.

இந்நூலைப் படிக்கின்ற பொழுதே சுவாமிகளுடன் நாமும் இருப்பதாகவே தோன்றுகிறது. அம்ருதம் அருந்திய ஆநந்தம் நிச்சயம் இந்நூல் படிப்பவர்களுக்கும் கிடைக்கின்றது. அம்மா அவர்கள் போன் செய்து நூலை படித்து விட்டீர்களா? என்ன தோன்றுகிறது? என்று கேட்டார்கள். அப்பொழுது என் மனம் உருகியவாறு இன்றைய நாள் சற்குரு கடாக்ஷத்தில் மூழ்கி இருந்த பொன்னான நாளாகும் என்று கூறினேன். ஆன்மநேயர்கள் இந்நூலை நன்கு படித்து குருவருளையும் திருவருளையும் அடைய வேண்டுகிறேன்.

தங்களன்புள்ள,<br>
வேணும் சற்குருநாதன் துணை<br>
**ஜோதி. முருகாச்சாரியார்**<br>
ஸ்ரீ காளிகாம்பாள் ஆலய அர்ச்சகர்<br>
பேரிப்பேட்டை, வேலூர் - 4

ஓம் ஸ்ரீ குருப்யோ நம :

# என்னுரை

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸத்குருவின் 121ஆம் வருட ஜயந்தி விழாவையொட்டி உங்களை சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். 'விலக்ஷணாம்ருதம்' என்ற இந்த புத்தகம் எழுத நேர்ந்ததை உங்களிடம் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

பிறப்பெடுத்த ஒவ்வொரு மனிதனும் நிரந்தரமான ஆனந்தத்தை தேடியே வாழ்க்கை பயணம் மேற் கொள்கிறான். அவ்வாறு பயணிக்கையில் தோற்ற மயக்கமுடைய இந்த உலகின் சுக துக்கங்களில் அடிபட்டு சிக்கித் தவிக்கின்றான். இந்த மாயச் சூழலிலிருந்து விடுபட்டு உண்மையான ஆன்ம தரிசனமும் ஞானானந்தத்தினையும் பெற வழிகாட்டியாக ஒரு ஸத்குருவினுடைய அணுக்கமும் அனுபவங்களுமே அவனுக்கு துணை செய்யும். நம் புனித பாரத தேசத்தில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல மகான்களைப் பற்றிய வரலாறும், அவருடனான பக்தர்களின் அனுபவங்களும் ஒரு ஸத்ஸரிதமாக எழுதப்பட்டால் இப்போது மட்டுமல்லாது வரப்போகும் தலைமுறையினருக்கும் ஒரு கலங்கரை விளக்காக இருக்கும் என்பது திண்ணம்.

எக்காலமாயினும் தர்மத்தின் வழியினை நமக்குணர்த்த உதவுவது பரமாத்மாவின் மூச்சுக்காற்றாகிய வேதமே. அதைப்போல் கடந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து, உபதேசித்து, நம்மை நமக்கறிவித்த நம் ஸத்குரு ஸ்ரீ விலக்ஷணானந்தரோடு மிகக் குறைந்த காலமாயினும் அந்த மூன்று வருட காலத்தையும் மூன்று யுகங்களாக இன்றுவரை என்னுள் அணுவளவும் நீங்காது அசையாது உறைந்து நிற்கும் எண்ணங்களை வரப்போகும் சந்ததியினருக்கு குழந்தை மருத்துவர் என்ற தொழில் முறையிலும் இன்று காணும்

இளைய தலைமுறையினர் அனைவரும் என் செல்வங்களே என்ற அக்கறையினாலும், கடமையினாலும், ஸ்ரீ விலக்ஷணானந்த மார்க்கத்தை கையிலெடுத்து அதனில் பயணிக்க இச்சிறிய நூலை உங்களிடம் சமர்ப்பிப்பதில் பெரும் நிம்மதி அடைகின்றேன். குரு ஸேவையாகவே இதனை கருதுகின்றேன்.

ஸ்ரீ விலக்ஷணானந்தர் என்ற நல்ல குருநாதர் தெரிவித்திருப்பது என்னவெனில் கடவுள் என்பவர் எந்த கட்டுக்குள்ளும் அடங்காதவர் என்பதும் அது புரிந்த பின் நாம் காணும் எல்லா உயிர்களிடமும் எவ்வித பேதமுமின்றி அன்பு செலுத்துவதுமேயாகும். இதுவே உண்மையான முக்தியாகும். இது இப்பிறவியிலேயே நாம் அடையக்கூடிய ஒன்றாகும். இந்நூலை முதன் முதலில் படிக்கையில் ஒரு அரிய பெரிய மகானை தனிப்பட்ட முறையில் சிறுமியாக நான் கண்ட அதிசயம், இனம் புரியா பக்தி கலந்த ஒழுக்கவுணர்வு, பின் அவருடைய சீடர்கள், பக்தர்கள் என தன் வாழ்க்கையை பகவான் மற்றும் குரு ஸேவையில் அர்ப்பணித்த உத்தமமான அன்பர்கள் என, அஸ்திவாரமாக ஆரம்பித்து பின் அவை எப்படி மெல்ல மெல்ல காலப்போக்கில் ஓர் ஆலயமாக என் உள்ளத்தில் பூசலார் நாயனாரின் செய்கைக்கொப்ப உருப்பெற்று இதய பீடத்தில் ஸ்ரீ ஸத்குரு விலக்ஷணானந்த பரமாத்மாஜீ சிம்மாசனமிட்டு அமர்ந்திருக்கும் அம் மகிழ்ச்சியினை உங்களுடன் பகிர்ந்து கொள்ளவே இச்சிறு பிரயத்தனம். ஏதோ ஒரு கதையாகவேனும் படிப்பதில் தொடங்கினாலும் எங்கோ, யாருக்கோ, எப்படியோ, எப்போதோ ஒரு பொறி தட்டினால் அது அவர்களை சரியான ஞான பாதையில் இட்டுச் செல்வது மட்டுமின்றி அவர்களே அதனை மேலும் தொடர வழிவகுக்கும் உந்து சக்தியாகவும் மாறிவிடுவர் என்ற பூரண நம்பிக்கையில் இப்புத்தகத்தை ஒரு குழந்தையாக உங்கள் கரங்களில் தவழ விடுகின்றேன். அது உங்களுடனேயே இருந்து, ஸ்ரீ சத்குருநாதரைப் பற்றிய என்னுடைய சிறிய ஆயின் சீரிய அனுபவத்தினை நினைவு படுத்தும் ஆலய மணியாக ரீங்காரமிட்டுக் கொண்டே இருக்கட்டும்.



இப்புத்தகம் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற் பகுதி ஸ்ரீ ஸ்வாமிகளுடனான சந்திப்பு, அனுபவங்களை கொண்டது. அவருடனான நேரடி அனுபவங்கள் பக்தியின் விதைகளாக என்னுள் விதைக்கப்பட்டாலும் ஸ்ரீ ஸ்வாமிகளின் அத்யந்த பக்தர்களுடன் பழகியதால், அது தழைத்தோங்கியது. எவ்வளவோ புராணங்களும். உபநிஷத்துக்களும் எடுத்துரைக் கின்ற ஆன்ம தரிசனத்தை நேரடியாக அவருடைய பக்தர்கள் தம் தம் வாழ்வில் கடைப்பிடித்த அதிசயங்கள் பிரமிக்க வைப்பதாகும். ஸ்ரீ விலக்ஷணானந்த வைரத்தின் ஒவ்வொரு பட்டை தீட்டிய பக்கங்களும் ஒவ்வொரு பக்தரின் பண்பு களால் ஜ்வலிக்கின்றது. அவருடைய பக்தர்களைப்பற்றி நானறிந்த விஷயங்களைக் கூறுவதே இரண்டாம் பகுதியாகும்.

அன்று தொடங்கி இன்று வரை நான் சந்தித்த பக்தர்களை இரண்டு வகையாக கொள்ளலாம். முதலாவதாக ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தி அடையுமுன் அவருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டவர்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடனான இவர்களின் இனிய அனுபவங்களும் தன்னலமற்ற ஸேவை மனப்பான்மை யும் அன்று சிறுமியாக நான் கண்டு வியந்ததை எடுத்தியம்ப விரும்புகின்றேன். இரண்டாவதாக ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தி அடைந்த பிறகு சில பக்தர்கள் நேரடி தொடர்பு இல்லை யெனினும், அவருடைய அருமை பெருமைகளை அறிந்து, உபதேசங்களை உணர்ந்து ஆன்ம முன்னேற்றத்தினை குறிக்கோளாகக் கொண்டு இன்றளவும் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் சூக்ஷமமான தொடர்பு நிலையில் உள்ளவர்கள். அவர்களில் சிலரை நானும் மற்றையோரை திரு. அய்யாசாமி அவர்களும் விவரிப்பது சிறந்தது.

நான் மேற்கொண்ட இம்முயற்சியை என்னுடன் உணர்ந்து பகிர்ந்து கொண்ட என் அருமை மகள் திருமதி இந்திரா பாலாஜியின் உறுதுணையை நான் மறுக்க இயலாது.

இந்த என் அனுபவங்களை ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமியின் அன்பர்களுக்கும் என் அத்தை திருமதி அனந்த லக்ஷ்மிக்கும் பெற்றோருக்கும் என் எளிய அன்பு காணிக்கை யாக அர்ப்பணிக்கின்றேன்.

டாக்டர் திருமதி **அனந்தகிருஷ்ணா**



**பாகம் 1**



# என் அனுபவங்கள்


**1942, ஜூலை**
**'D' BLOCK**
**"கிருஷ்ண விலாஸ்"**
**வேங்கடரங்கப்பிள்ளைத் தெரு**

அப்போது நான் லேடி வெலிங்டன் பள்ளியில் ஆறாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். திருவல்லிகேணி, வேங்கடரங்கபிள்ளைத் தெருவில், கிருஷ்ண விலாஸ் என்றழைக்கப்பட்ட வீட்டில் குடியிருந்தோம். அக்காலத்தைய பெரிய வீடுகளின் அமைப்பின்படி எங்கள் குடியிருப்பின் பின்புறம் நான்கு பிரிவுகளாகக் கட்டப்பட்ட வீடுகளின் கடைசி பிரிவான 'D' BLOCK என்ற பகுதியில் ஸ்ரீ ஸ்வாமிகள் 1942ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிறிது காலம் தங்கியிருந்தார்.




வேங்கடரங்கப் பிள்ளைத் தெரு






'D' BLOCK வெளிப்புறத் தோற்றம்

**முதல் சந்திப்பு**

அன்று மாலை எங்கள் இல்லத்தின் பக்கவாட்டில் அமைந்திருக்கும் மாடிக்கு செல்லக்கூடிய படிக்கட்டில் வெகுளியாக, தன்னிச்சையாக கீழ்படியில் நின்று கொண்டும் விளையாடிக் கொண்டும் இருந்த என்னை மாடியிலிருந்து, "சற்று மேலே பார் குழந்தாய்" என்று அழைத்த குரலால் முதன்முதலில் ஈர்க்கப்பட்டேன். திகைத்து மேலே நோக்கியபோது நெடிய உருவமாய் கருணையே வடிவாய் ஒளிப்பிழம்பாய் விளங்கியவர் பிறகு அவர் இருப்பிடத்திற்கு என்னை வரவும் கட்டளையிட்டார். அன்று தொடங்கிய அந்த அழைப்புதான் அடுத்து மூன்று வருடங்களும் அவருடைய ஜீவிய பரியந்தம் வரையில் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் ஈடுபாடு கொள்ள வைக்கும் பக்தியாக நிலைபெற்றது. வாழ்க்கையின் பால்ய பருவத்தில் கீழ்ப்படிக்கட்டுகளில் நின்று அலைந்து கொண்டிருந்த என்னை மேலே நோக்கும் பார்வையையும், ஆன்மீக வாழ்க்கையின் தொடக்கத்தையும் ஆரம்பித்து ஞான விளக்கேற்றியவர் ஸ்ரீ ஸ்வாமிகள்.



“சற்று மேலே பார் குழந்தாய்”





பொது மாடிப் படி

## பூஜை க்ரமம்

முதல் சந்திப்பிற்கு பிறகு ஸ்ரீ ஸ்வாமிகளை திரும்பவும் பார்க்கவேண்டும் என்ற உந்துதல் என்னுள் இருந்து கொண்டேயிருந்தது. எங்களுடன் இருந்த என் அத்தைப் பாட்டியுடன் மாலையில் ஸ்ரீ ஸ்வாமிகளின் இருப்பிடத்திற்கு வந்து விடுவோம். தினமும் மாலையில் ஸ்ரீ வேங்கடேஸ்வரர் பூஜை மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பாத பூஜையும் நடைபெறும்.


அங்கு நடந்த பூஜாக்ரமம் பின்வருமாறு :

மாலை 6.30 மணியளவில் பூஜை தொடங்கப்படும். ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷம் மற்றும் கவச பாராயணத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் தொடங்குவார். நின்று கொண்டும், உலவிக் கொண்டும் அவர் முன்னின்று சொல்ல, அமர்ந்திருக்கும் மற்ற பக்தர்கள் அதனை வழி மொழிவர். பிறகு அவரின் பூஜா மூர்த்தியாகிய ஸ்ரீ வேங்கடேஸ்வர விக்ரஹத்திற்கு ஸ்ரீ விலக்ஷணானந்தரின் அஷ்டோத்திரம் வாசிக்கப்பட்டு மலர்கள் சமர்ப்பிக்கப்படும். இது ஸ்ரீ ஸ்வாமிகளுக்கும், ஸ்ரீ வேங்கடேஸ்வரருக்கும் உள்ள ஐக்கிய தன்மையை புலப்படுத்துவதொன்று.

பின்பு ஸ்ரீ ஸ்வாமிகள் கை வைத்த சாய்வு நாற்காலியில் கம்பீரமாக அமர்ந்து கொள்ள பக்தர்கள் மலர்களை மாலையாகவும், சரமாகவும், உதிரியாகவும் அவரது மலர்ப்பாதங்களுக்கு அவரவர்களுக்குத் தெரிந்த வகையில் உள்ளன்போடு சமர்ப்பணம் செய்வார்கள். அவ்வப்போதும் விசேஷ நாட்களிலும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு விமரிசையாக பாத பூஜை அபிஷேக கிரமமாகவும் நடைபெறுவதுண்டு. பூஜைகளின் பூர்த்தியாக தப்பாமல் ஸ்ரீ ஸ்வாமிகள் பல்வேறு தலைப்புகளில் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். யோக வாஸிஷ்டம், கைவல்ய நவநீதம், ஸ்ரீமத் பகவத்கீதை, பாரதம், வேதாந்த குறிப்புகள், தாயுமானவர், பட்டினத்தார் மற்றும் வள்ளலார் போன்ற



அருளாளர்களின் பாடல் கருத்துக்கள் இடம் பெறும். பிறகு அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கப்படும். ஸ்ரீ ஸ்வாமிகள் விபூதி பிரசாதத்துடன் ஸ்ரீ வேங்கடேஸ்வரர் ப்ரத்யக்ஷமான படம் அச்சிட்ட பிரதியையும் அனைவருக்கும் விநியோகிப்பர். வெளியூரிலிருந்து வரும் பக்தர்களுக்கு தவறாமல் உணவு பிரசாதமாக வழங்கப்படும். ஸ்ரீ ஸ்வாமிகள் விபூதியணியும் முறை வித்தியாசமானது. சைவ, வைணவ ஒற்றுமையை வலியுறுத்துவதுபோல விபூதியை ஊர்த்துவமுகமாக நெற்றியில் அணிந்து கொள்வார்.



ஸ்ரீ வேங்கடேஸ்வரர் தரிசனம் அளித்த படத்தின் பிரதி

## புலால் உணவு பழங்களாக மாறியது


'டி' பிளாக்கில் ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கியிருந்த பொழுது நடந்த ஒரு சம்பவம் தவிர வேறொன்றும் நினைவிலில்லை. ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தர் ஒருவர் வேற்று மதத்தைச் சார்ந்த ஓரன்பரை அழைத்து வந்தார். அப்புதியவர் தன் கையில் ஸ்ரீ ஸ்வாமிகளுக்காக ஒரு தட்டில் காணிக்கையை மூடி எடுத்து வந்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் அவரை அந்த மூடியைத் திறந்து அனைவருக்கும் விநியோகிக்கும்படி கூற, அவர் அதிர்ச்சி யடைந்து ஸ்ரீ ஸ்வாமிகளைப் பார்க்க, 'பரவாயில்லை. நீங்கள் கொண்டுவந்ததை அனைவருக்கும் கொடுங்கள்' என திரும்பவும் கூற, அவர் வேறு வழியில்லாமல் மூடியைத் திறக்க அதிலிருந்த பழங்களைப் பார்த்து அவர் மேலும் அதிர்ச்சியடைந்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் தன்னை மன்னிக்கும் படி கூற, ஸ்ரீ ஸ்வாமிகளும் அவரை மன்னித்து தன்னுடைய பக்தராக ஏற்றுக் கொண்டார்.

வந்திருந்த வேற்று மதத்தவர் ஸ்ரீ ஸ்வாமிகளைச் சோதிக்க தட்டு நிறைய மாமிசத்தை வைத்து அதனை யாரும் பார்க்காமலிருக்கும் பொருட்டு அதனை மூடியிட்டு மூடி ஸ்ரீ ஸ்வாமிகளிடம் வழங்கினார். ஆனால், அதிலிருந்த மாமிசங்கள் அனைத்தும் பழங்களாக மாறியிருந்ததைக் கண்டு, தன்னுடைய தவறினை உணர்ந்து ஸ்ரீ ஸ்வாமிகளிடம் சரணடைந்தார். தன்னை சோதிக்க வந்தவரையும் நல்வழியில் திருப்ப ஸ்ரீ ஸ்வாமிகள் புலாலை பழங்களாக மாற்றிய நிகழ்ச்சி என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

## வஸந்த பங்களாவில் பாத பூஜை

'டி' பிளாக்கில் இருந்து பின்னர் சிறிது நாட்களுக்கு எதிரில் உள்ள வஸந்த பங்களாவில் தங்கினார். இங்கு 1942ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு நடந்த பாத பூஜை மகோத்ஸவத்தை நானும் என்




ஓம்.

தத். ஓ ஸத்.

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ பத்மாவதி ஸமேத ஸ்ரீநிவாஸ வேங்கடேஸ்வர பரப்பிரஹ்மணே நம:

ஸ்ரீ விலக்ஷணாநந்த சபா சங்கத்தாரால்

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்கள்

# மஹா பாதபூஜா மஹோற்சவம்.

எதார்த்த ஆசாரியர்.

அழுகிதொறு மினைக்குமன்னை அறிவினை தேடியேரிடி
விழுகிதொறு மெருக்குமப்பன் விளையாகும் பொழுதிற்றேமுன்
தொழுகிதொறுங் காக்குந்தெய்வம் சொந்தமா யெடுப்பார்க்கெல்லாம்
குழகீதை யிப்படியுலாவும் குருநாதன் வாழிவாழி.

எதார்த்த பக்த ஜனங்களே, சகோதர சகோதரிகளே!

நாளது சித்திரபாநு வருஷம் ஆவணி மாதம் 21 தேதி (6-9-'42) ஞாயிற்றுக்கிழமை பகல் 2-மணி முதல் 3-30 மணிவரை ஸ்ரீ விலக்ஷணாநந்த சபா சங்கத்தாரால் ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்களுக்கு சாஸ்திரோக்தமாகப் பாதபூஜை நடைபெறுகிறது. 4-மணி முதல் 5-மணி வரை பரமாத்மாஜீ உபந்நியாஸமும் செய்வார்கள். அனைவரும் விஜயம் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு,

ஸ்ரீ விலக்ஷணாநந்த சங்கத்தார் சென்னை.

...கிற இடம்:—
49, வசந்த பங்களா வெங்கட்டரங்கம் பிள்ளை தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீ பாரதி பிரஸ், ...., சென்னை.

வசந்த பங்களா - பாத பூஜை அழைப்பிதழ்



தற்போது வசந்த பங்களா வெளிப்புறத் தோற்றம்



வசந்த பங்களா கழுகுப் பார்வை



குடும்பத்தாரும் தரிசிக்கும் பாக்கியம் கிட்டப் பெற்றோம். இவ்வைபவத்தினை நடத்தியவர்கள் சென்னையைச் சேர்ந்த ஸ்ரீ விலக்ஷணானந்த சங்கத்தினர். வந்திருக்கும் அனைத்து அன்பர்களுக்கும் மதிய விருந்து அளிக்கப்பட்டு சுமார் 2 மணியளவில் நிகழ்ச்சி தொடங்கப்பட்டது. இரண்டு மணி நேரம் கிரமமாக எல்லாவித திரவியங்களையும் கொண்டு வந்து சாஸ்திர சம்பிரதாயப்படி வேத மந்திரங்கள் முழங்க ஸ்ரீ ஸ்வாமி களுக்கு விமரிசையாக பாத பூஜை சங்கத்தினரால் செய்யப் பட்டது. பிறகு நான்கு மணியிலிருந்து ஆறு மணி வரையில் முதலில் பக்தர்கள் மற்றும் அறிஞர்கள் பலவித பக்தி தலைப்பு களில் தமது சொந்த ஆன்மீக அனுபவங்களைப் பற்றியும் குருவின் பெருமையைப் பற்றியும் சொற்பொழி வாற்றினார்கள்.

ஸ்ரீ விலக்ஷணானந்த சபா என்ற இயக்கத்தைப்பற்றியும், அவ்வங்கத்தினர் எவ்வாறு ஸ்ரீ ஸ்வாமிகளை பரமாத்மாவின் அவதாரமாக வணங்கி வந்ததையும், இவ்வுலகம் உய்வடைய தர்மத்தின் நெறியை கடைப்பிடிக்க, பிறவிப் பெருங்கடலை கடக்க எவ்வளவு தீவிரமாகவும், ஈடுபாட்டுடனும் ஸ்ரீ ஸ்வாமிகளின் உபதேசங்களை தாங்கள் பின்பற்றுவதோடல்லா மல் அதனை பிரச்சாரம் செய்வதையும் தங்களின் தலையாய கடமையாக கருதி வந்தார்கள் என்பதற்கு கீழ்க்காணும் அறிக்கையே ஓர் சான்றாகும்.

*ஓம் தத் ஸத்*

*ஸ்ரீ விலக்ஷணானந்த பக்தசபா*

*சென்னை*

*ஆத்ம சகோதர சகோதரிகளுக்கு ஓர் விண்ணப்பம்*

*அப்ராகிருத வைகுண்டபதியாகிய ஸ்ரீ பரவாசுதவர் வைகுண்டத்தையும் திருப்பாற்கடலையும் துறந்து ஜீவர்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டு அநேக யுக காலங்களாய் திருவேங்கட பருவதத்தில் ஸ்ரீ வேங்கடேஸ்வர எம்பெருமானாகவும் ஸ்ரீநிவாஸப்*

பெருமானாகவும் தோன்றி எல்லா ஜீவக் குழந்தைகளையும் ரட்சித்து வருகிறார். ஸ்ரீ வேங்கடேஸ்வரக் கடவுள் யுகங்கள் தோறும் தர்மத்திற்குப் பங்கமேற்பட்டு அதர்மம் எப்போது உச்ச ஸ்திதியை யடைகிறதோ அப்போது அந்தந்தக் காலத்திற்குத் தக்கவாறு உலகில் அவதரித்து அதர்மத்தை ஹதம் செய்து தர்மத்தை ஸ்தாபித்துப் பக்தர்களை ரட்சித்து வருகிறார்.

இப்போது இந்தக் கலியுகத்தில் தர்மமென்பதே யில்லாமல் பொய், களவு, சூது, கொலை, பரஸ்திரீ கமனம், பசுவதை முதலிய இன்னும் அளவிடக் கூடாத அகிர்த்யங்கள் நடக்கிறது. பகவானுடைய நாமத்தை உச்சரிப்பவர்கூட அருமையாய்ப் போய் விட்டது. உலகில் பகவத் பக்தி குறைந்து பாபங்கள் மேலிட்டு ஜனங்கள் கபடம், வஞ்சகம், நானென்கிற அஹம்பாவம் இவை களையுடையவர்களாய் ஒற்றுமையின்றிப் பகவத் தியானமின்றி அகிர்த்யங்களை மேன்மேலுஞ் செய்து பாபங்களைப் பெருகச் செய்வதால் உலகம் சீர்குலைந்து தாறுமாறாகக் கிடக்கிறது. பாபிஷ்டர்கள் தலையெடுத்தாடுகிறார்கள். சாதுக்களும் ஞானிகளும் வாடுகிறார்கள்.

உலகம் இப்படிச் சீர்குலைந்து பரிதவிக்கும் போது ஸ்ரீமந் நாராயணமூர்த்தி வைகுண்டத்திலிருப்பாரா? திருப்பாற்கடலில் யோக நித்திரையிலிருக்க முடியுமா? திருவேங்கட பருவதத்தில் மௌனமாயிருக்க வொட்டுமா? காருண்யம் நிறைந்த பரம்பொருளாதலால் பக்தர்கள் வாட ஒருபோதும் பொறுத்திருக்க மாட்டார்.

ஜோதிர்மயமாய் விளங்கும் ஸ்ரீ வேங்கடேஸ்வர பகவான் இந்தக் கலியுகத்தில் இப்போதுள்ள கால தேச வர்த்தமானங்களுக் கேற்றவாறு ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாவாய் அவதாரம் செய்து பக்தர்களைக் கார்த்து அஞ்ஞான இருளையகற்றி ஞான பக்தி உபதேசம் செய்து லக்ஷக்கணக்கான ஜனங்கள் ஜீவன் முக்தர்களாவதற்குண்டான ஞான ஜெபம், தபம், பாராயணம்,



அப்பியாசம், தியானம் ஸமாதி முதலிய தத்துவங்களை உபதேசித்து ஜீவக் குழந்தைகளைக் கார்த்து ரட்சித்து வருகிறார். அவரது அபார வைபவங்களையும் லீலா விபூதிகளையும் நேரில் கண்டு அவரது கருணைக்குப் பாத்திரமான அந்தரங்க பக்தர்களுக்குத் தெரிய வருமேயன்றி அவரது அவதார ரஹஸ்யங்களை மற்றவர்களால் அறிய முடியாது. ஸ்காந்த புராணம் ஸனத்குமார ஸம்ஹிதையில் பதினேழு ஸ்லோகங்களால் பரமாத்மாவின் அவதார ரகஸ்யங்கள் கூறப்பட்டிருக்கின்றன. பரமாத்மாஜீ பரத கண்டம் முழுமையும் சுற்றுப் பிராயணம் செய்து ஆங்காங்குள்ள ஜீவக் குழந்தைகளுக்கு ஜாதி மத பேதமின்றி உபதேசம் செய்து ரட்சித்து வருகிறார். திக்கற்று நாதனற்றுப் பரதவிக்கும் குழந்தைகளுக்கெல்லாம் கதிமோட்சமளித்து அவர்கள் மனதை ஜெகத் காரண வஸ்துவாகிய ஸ்ரீநிவாஸ வேங்கடேஸ்வர எம்பெருமானிடம் லயமடையும்படி செய்து உடல் நாமல்ல உள்ளத்தில் விளங்கும் ஆத்ம ஜோதிதான் நாமென்பதை விளக்கிப் பிரஹ்ம நிஷ்டையை உபதேசித்து, அவர்களுக்குத் தன்மயமான பக்தி ரஸத்தைப் புகட்டி ஞானோபதேசஞ் செய்து சர்வ ஆசாபாசங்களையும் நீக்கி உலகைத் துறந்த தவமணிகளாக்கி ரட்சித்து வருகிறார்.

தன்னை முழுவதும் நம்பிய ஒவ்வொரு ஜீவக் குழந்தைகளுக்கும் உள்ளத்திற் றோன்றி அவர்கள் பக்குவத்திற்குத் தகுந்தவாறு ஸ்ரீ வேங்கடேஸ்வர பகவானாகவும் திருப்பாற்கடலிற் பள்ளி கொண்ட க்ஷீராப்தி நாதனாகவும் ஆலிலைக் கிருஷ்ணனாக வும் பரம பதத்தில் விளங்கும் பரவாசு தேவனாகவும் ஜோதி ஸ்வ ரூபத்துடன் காட்சியளித்திருக்கிறார். தான் ஸ்ரீ வேங்கடேஸ்வர எம்பெருமானென்பதை அந்தரங்க பக்த குழந்தைகளுக்கு அணுவணுவாக விளக்கிக் காட்டி, அற்புதமான காட்சியளித்து, அவர்கள் மனதை வேறு எங்கும் செல்லவிடாது கார்த்துப் பக்தி மார்க்கத்தி லீடுபடும்படி செய்திருக்கிறார். இன்னும் அவரது அற்புத மஹத்துவங்களை அவரவர்களே நேரிற் கண்டு அறிந்து கொள்ள வேண்டுமே யன்றிச் சொல்ல வேண்டுமென்று ஆரம்பித்தால்

எவ்வளவு யுகங்கள் வேண்டுமானாலும் பகவான் மஹத்துவங்களைச் சொல்லி முடித்து விட்டோமென்று திருப்தியடைய முடியாது. இவ்வளவு கருணையுடன் நம்மைக் கார்த்து ரக்ஷிக்கும் நமது குருநாதராகிய ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாவிற்கு நாம் செய்ய வேண்டியதென்ன நமது கடமையாது என்பதை யறிய வேண்டும். உலகில் அவருக்கு எதுவும் லக்ஷியமில்லை.

துர்நாற்றம் பிடித்த இந்த மாம்ஸ உடலை நானென்று நினையாமல், ஆண், பெண் என்கிற பேத புத்தியை யொழித்து நாம் வேறு ஆத்மா வேறெண்றெண்ணாமல் எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவிற்குச் சொந்தமென்பதை உறுதியாய் நினைத்து எங்கும் வியாபித்திருக்கும் பரவாசு தேவனே சர்வ ஜீவர்கள் உள்ளத்திலும் விளங்கிக் கார்த்து ரட்சித்து வருகிறார் என்பதைத் திடமாய் நம்பி நானென்பதை யொழித்து உடல், உள்ளம், ஆவி, பொருள் அனைத்தையும் பரமாத்மாவிற்குத் தியாகம் செய்துவிட வேண்டும். உலகில் வேண்டுவது, பரமாத்ம சற்குரு நாதனின் திருவடித் தாமரைகள் தானென்பதை உங்கள் நெஞ்சில் பதிய வைத்து முழு முதற் கடவுளாகிய நமது பரமாத்மாவின் திருவடித் தாமரைகளில் சரணமடைந்து விட்டோமானால் அப்பாரமார்த்தீகப் பரம் பொருள் நம்மை ரக்ஷித்தே தீருவார். ஜென்மம் கடைத்தேறுவதற்கு நாம் செய்ய வேண்டியது இது ஒன்றுதான்.

1. நமது கடமை என்னவென்றால், நமது பரமாத்ம சற்குரு நாதரின் ஆக்ஞைக்குக் கீழ்ப்படிந்து அதன்படி தவறாது நடப்பது, அவரது பாத கைங்கரியம் செய்வது, அன்னாருடைய மூல மந்திர ஜெபம் செய்வதுடன் அவரது திருவடிகளையும் உருவத்தையும் ஹிருதயத்தில் தியானம் செய்வது.

2. நம்மைக் கருணையுடன் கார்த்து ரக்ஷிக்கும் பரமாத்மா தெய்வசிகாமணியாகிய நமது பரம சற்குருநாதரின் மஹத்துவங்களை உலக முழுதும் பிரகாசிக்கும்படி செய்து அவரது பெயரால் ஒவ்வொரு ஊரில் பக்த சபா ஏற்படுத்தி உலக முழுவதும் பிரசாரம் செய்து எல்லாக் குழந்தைகளையும் ஒன்று சேர்ப்பதுதான் பக்தர்கள் செய்ய வேண்டிய முதற் கடமையாகும்.



3. நாம் நமது கடமைகளை விடாமுயற்சியுடன் செய்து நமது சற்குருநாதரின் உத்தரவுப்படி நடந்து கொண்டு அன்னவரைப் போற்றி வணங்கித் துதிசெய்து வந்தோமானால் இகலோகத்திலும் பரலோகத்திலும் நாம் க்ஷேமமடைவதுடன் ஜீவன் முக்தர்களாகிப் பிறவிப் பெருங்கடலைத் தாண்டி அப்ராகிருத வைகுண்டபதியாகிய நமது திவ்ய பரமாத்ம சற்குரு நாதரின் பாதாரவிந்தங்களை என்னாளும் பிரியவே மாட்டோம்.

நமக்கு வேண்டுவது சற்குருநாதரின் திருவடித் தாமரைகள் ஒன்றுதான். வேறு எதையும் கருதாமல் பக்தர்கள் இதிலுள்ள பக்தி வாக்கியங்களைக் கவனித்து சிரத்தையுடனும் பக்தியுடனும் அனுஷ்டித்து நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

அகில பரமாத்ம விலக்ஷணானந்த பக்த சபா காரியதரிசிகள்

சென்னை

பிறகு சிகரம் வைத்ததுபோல ஸ்ரீ ஸ்வாமிகள் தனது கம்பீரமான மதுர வசனங்களால் ஸ்ரீ வேங்கடேஸ்வர மஹாத்மியம் என்ற தலைப்பில் அருளுரையாற்றி மக்களின் காதில் தேனைப் பாய்ச்சியது இன்று வரை மனதில் தித்திக்கின்றது. அந்த இனிய நினைவின் எதிர்மறையாய் ஸ்ரீ ஸ்வாமிகள் திருவல்லிக்கேணி பதிகத்தால் போற்றிப் புகழ்ந்த ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாள் ஒவ்வொரு வருடமும் வஸந்தோத்ஸவத்தின் பொருட்டு ஏழு நாட்கள் எழுந்தருளியிருந்து ஸேவை ஸாதித்த இந்த வஸந்த பங்களாவின் இன்றையை நிலையைக் காணும்போது காலத்தின் கோலத்தினை நன்குணர முடிக்கின்றது. மங்கள ஆரத்தி மற்றும் விபூதி ப்ரஸாதம் வழங்குதலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## 1943 பிப்ரவரி
## ஆரிமுத்து ஆச்சாரி தெரு

ஒரு ஸன்னியாசிக்குரிய லக்ஷணத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஓரிடத்தில் தங்காது பல்வேறு இடங்களுக்கு சென்று வருவார். அவ்வாறாக 1943ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருவல்லிக்கேணியில் எங்கள் இல்லத்தின் அருகிலிருக்கும் ஆரி முத்தாச்சாரி தெருவிலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருந்தார். இந்த இரண்டாம் சந்திப்பின் போதுதான் பல்வேறு அனுபவங் களுடன் அவருடைய அணுக்கத் தொண்டர்களையும் பக்தர் களையும் கண்ணுறும் அபூர்வ வாய்ப்பு ஏற்பட்டது. ஸ்ரீ ஸ்வாமி களின் அந்தரங்க ஊழியரான திரு. இராமானுஜம், அரிய பக்தர்களான திரு. பாஷ்யம், திரு. சிவராமையா, திருமதி சுந்தரியம்மா, திருமதி ருக்மணிபாய், திருமதி ஜெயம்மா, திருமதி ருக்மணியம்மா போன்றவர்களின் குரு பக்தியும் சேவை மனப்பான்மையும், ஆராதனை முறைகளையும் நுட்பமாக, தனித்தனியாக ஆராய்ந்தறிய முடிந்தது.




ஆரிமுத்து ஆச்சாரி தெரு



## விஸ்வரூப தரிசனம்

தினந்தோறும் காலை 5.30 மணிக்கு எங்கள் இல்லத்திலிருந்து குருநாதரின் பரிவாரங்களுக்குத் தேவையான கறந்த பாலினை எடுத்துக் கொண்டு நானும் என் தமக்கையும் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசித்துவிட்டு வருவது வழக்கமாக இருந்தது. துணையாக திரு. இராமானுஜம் எங்களுடன் வருவார். ஸ்ரீ ஸ்வாமிகளை நமஸ்கரித்தவுடன் எங்களுக்கு விபூதி ப்ரஸாதம் அளித்து ஆசீர்வதிப்பார். பரீட்சை சமயங்களில் எங்களை ஊக்குவிக்கும் முகமாக, "உங்களின் பேனா முனையில் நின்று நானே பரீட்சை எழுதுகிறேன்" என்று கூறி எங்களை அனுப்பி வைப்பார். அதில் எங்களுக்கு கட்டுக்கடங்கா மகிழ்ச்சியும் தன்னம்பிக்கையும் ஏற்படும்.

## மாலை நேர பூஜை

சிறுமியாக இருந்த போதிலும் பள்ளியை விட்டு வந்தவுடன் கை, கால்களைச் சுத்தம் செய்தபின் விரைவாக வீட்டுப் பாடங்களை முடித்துக் கொண்டு தாயைக் கண்ட கன்றினை ஒப்ப ஸ்ரீ ஸ்வாமிகளின் இருப்பிடம் நோக்கி உற்சாகத்தோடு விரைவேன். காந்த சக்தியைப் போன்ற அவரது தீட்சண்யம் அனைவரையும் வசீகரித்ததைப்போல் அறியாப் பருவமாயினும் நானும் அவர்பால் ஈர்க்கப்பட்டேன். புரிந்தும் புரியாத நிலையிலும் அன்று ஏற்பட்ட ஸத்ஸங்கம் இப்போதுள்ள ஸ்ரீ விலக்ஷணானந்த ஸத் ஸங்கம் அமைவதற் கும் இயங்குவதற்கும் அஸ்திவாரமாக இருந்தது புலனா கின்றது. இதில் என் மொத்த குடும்பமும் இணைந்ததனால் ஸ்ரீ ஸ்வாமிகளுடனான பக்தி மேலும் ஊக்குவிக்கப்பட்டது. அவ்வாறு அங்கு நான் கண்ட மறக்க முடியாத ரசமான அனுபவங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகின்றேன்.

## திரு. திருமலை அய்யங்கார் - அவனன்றி ஓரணுவும் அசையாது

ஒருநாள் திரு. திருமலை அய்யங்கார் என்னும் அன்பர் முதன்முறையாக ஸ்ரீ ஸ்வாமிகளை சந்திக்க வந்தார். தான் திருவல்லிக்கேணி தமிழ் சங்க காரியதரிசி என்று அறிமுகப் படுத்திக் கொண்டதோடு தன்னைக் குறித்து பெருமையாக கட்டுரைகள், கவி, பாடல்கள் இயற்றும் திறன் படைத்தவ ரென்றும் மற்றும் க்ஷண நேரத்தில் நினைத்தவுடன் எழுதும் வல்லமை உள்ளதாகவும் கூறிக் கொண்டார். இதைச் செவியுற்ற ஸ்ரீ ஸ்வாமிகள் புன்முறுவலோடு, ஒரு தாளை எடுத்து, அதில் ஒரு செய்யுளின் ஈற்றடியாக, "பதுமாசனி இருதாள் மலர் பணிவோம் வினையறவே" என்று எழுதி, தான் கீழே சென்று வருவதற்கு இரண்டு மணி நேரமாகும் என்றும் அதற்குள் அந்த செய்யுளைப் பூர்த்தி செய்து விடுமாறும் கூறினார். இரண்டு மணி நேரம், இரண்டு நாட்கள், மேலும் இரண்டு வாரங்களாகியும் அதனை பூர்த்தி செய்ய இயலாத வராய் திரு. திருமலை அய்யங்கார் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் சரணாகதி செய்து தன் அகந்தையை உணர்ந்ததாகக் கூறி மன்னிப்பு கோரினார். ஸ்ரீ ஸ்வாமிகளும் கருணையோடு அத்தாளை அவரிடமிருந்து பெற்று ஒரு நொடியில் செய்யுளை அற்புதமாக பூர்த்தி செய்தார். இந்நிகழ்ச்சி, செய்யும் செயல் எல்லாம் அவனே. அவனன்றி ஓர் அணுவும் அசையாதென்னும் பெரும் பாடத்தை போதித்தது.

## பற்றற்றத் துறவி

இரண்டாவது சம்பவமாக குறிப்பிட முற்படுவது, ஆன்ம வழியில் பயணிக்கும் அன்பர்களுக்கு ஸ்ரீ குருநாதரை அவரின் ஸ்தூல உருவத்தில் மட்டுமல்லாது பார்க்கும் அனைத்திலும் காண வேண்டிய தத்துவத்தினையும் மற்றும் அவரின் பற்றற்ற தன்மையையும் விளக்கும் முகமாக அமைந்த



தாகும். லேடி வெலிங்டன் பள்ளியில் ஆரம்ப பள்ளி ஆசிரியை யாக பணிபுரிந்த திருமதி ருக்மணி பாய் என்பவர் ஸ்ரீ ஸ்வாமி களின் அத்யந்த சிஷ்யையாவார். அவர் தனிப்பட்ட முறையில் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி பல புத்தகங்களும், பாடல்களும் இயற்றியுள்ளார். ஒருமுறை ஸ்ரீ ஸ்வாமிகளின் பாத பூஜையின் பொருட்டு விசேஷமாக தயாரிக்கப்பட்ட ஒரு பெரிய வெள்ளி தாம்பாளத்தை தருவித்து அதில் தன் குருநாதருக்கு அற்புத மாக பாத பூஜையைச் செய்தார். தனி நபராக வாழ்ந்த அவர் அதனை அங்கேயே விட்டு சென்று மறுமுறை அதனை பூஜையின் பொருட்டு வினவியபோது அதனைக் காணாததால் அதிர்ச்சியுற்றார். தன் குருவிற்கென ஆசையுடன் வாங்கிய பொருள் காணாமற் போனதில் மிக்க வருத்தமடைந்து ஸ்ரீ ஸ்வாமிகளை வினவ, அவர், "அது இருக்க வேண்டிய இடத்தில் இருக்கின்றது" என்று மறுமொழிந்தார். அதன் பின்னணியை அறிந்த நான் மனதிற்குள் ஆச்சரியமடைந் தேன். ஏனெனில், மறுநாளே தன் மகளின் திருமண நிச்சயம் பற்றியும் மேலும் அவரின் பணமுடையையும் கூற வந்த ஓர் ஏழை பிராமணரிடம் அந்த தாம்பாளத்தினை ஸ்ரீ ஸ்வாமிகள் ஒப்படைத்ததை நான் நேரில் கண்ணுற்றேன்.

பிற்பாடு இந்நிகழ்ச்சியை நினைக்குந்தோறும் எவ்வாறு ஸ்ரீ ஸ்வாமிகள் ஒருவர் தன் குருவை ஸ்தூல சரீரத்தில் மட்டும் காணாது எல்லா ஆன்மாவிலும் பார்க்க வேண்டிய அவசியத்தை பாடமாக போதித்ததை உணர முடிந்தது.

## நாம ஸ்மரணம்

பகவந் நாம ஸ்மரணை எவ்வாறு தம் உணர்வோடு, ஸ்வாஸத்தோடு மூச்சோடு மூச்சுக் காற்றாக கலந்திருக்க வேண்டுமென்பதை எடுத்துக்காட்டிய மற்றொரு சம்பவம்.

பெரம்பூரிலிருந்து திரு. திருமலை அய்யங்கார் என்ற பக்தர் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு கைங்கர்யம் செய்யும் ஆவலின்

பொருட்டு தனது குடும்பத்துடன் இரண்டு, மூன்று நாட்கள் ஆரி முத்தாச்சாரி தெருவிற்கு வந்து தங்குவதுண்டு. ஸ்ரீ ஸ்வாமிகளின் அணுக்கத் தொண்டராகவும், மெய்காப்பாளராக வும் விளங்கிய திரு. இராமானுஜம் என்பவர் அடக்கத்திற்கும் பணிபிற்கும் சுயநலமின்மைக்கும் எடுத்துக்காட்டாவார். இவர் ஸ்ரீ ஸ்வாமிகள் மற்றும் எவர் தன்னை அழைத்தாலும் உடனே 'சிவா' என்ற பதிலோடு அங்கே ஆஜராகி தொண்டு புரியும் வழக்கமுடையவர்.

ஒரு சமயம் திரு. திருமலை அய்யங்கார் இவரது வழக்கத் தினை சிறிது நையாண்டியாக மற்வர்களிடம் அளவளாவி இருந்திருக்க வேண்டும். எதிலும் அந்தர்யாமியாக விளங்கும் ஸ்ரீ ஸ்வாமிகள் திரு. அய்யங்காரை கூப்பிட்டு, "என்ன திருமலை அய்யங்கார்! இந்த இராமானுஜத்தைப் பார்த்தீர்களா? எதற்கும் எப்போதும் 'சிவா' என்ற ஒரே பதிலையே சொல்லிக் கொண்டு இருக்கிறாரே. ஒரு போட்டி வைத்துக் கொள்வோமா? நீங்கள் இங்கு தங்கப் போகும் இரண்டு நாட்களிலும் நான் உங்களை கூப்பிடும் போது 'நாராயணா' என்று சொல்லிப் பாருங்களேன், என்ன!" என்றார்.

இரண்டு முறை விளித்தவுடன் நினைவாக 'நாராயணா' என்ற திருமலை அய்யங்கார் மூன்றாம் முறை ஸ்ரீ ஸ்வாமிகள் கூப்பிட்டக் குரலுக்கு 'இதோ வருகிறேன்' என்ற பதிலளித்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் கீழே இருந்த அவரை அழைத்து அளித்த விளக்கத்தினை என்னென்பது. "பார்த்தீர்களா! எத்தனை முறை யார் கூப்பிட்டாலும் இராமானுஜத்தின் ஒரே பதில் 'சிவா'. ஆயின் நீங்கள் கவனமாக இருந்தும் மூன்றாம் முறையே 'நாராயணா' என்ற நாமம் தப்பி விட்டது. இதற்கு காரணம் விளங்கியதா? 'சிவா' என்ற நாமம் அவரின் ஊனிலும், உயிரிலும், ஆன்மாவிலும் ஊறியது. ஆயின் உங்களுக்கு 'நாராயணா' என்ற சொல் ஏட்டு சுரைக்காய். ஆதலால் அது உங்களிடம் பதியவில்லை என்றார்.



## ப்ரஹ்ம ராக்ஷஸின் முக்தி

நம் கண்ணுக்குப் புலப்படாத பூத, பைசாச, ராக்ஷஸம் போன்ற அமானுஷ்ய சக்திகளையும் கருணையோடு சாந்த முறச் செய்து முக்தியடையச் செய்த சம்பவம் ஒன்று குறிப்பிடத்தக்கது. இதில் நேரடியாக சம்பந்தப்பட்ட திருமதி இந்திரா என்ற பெண்மணியின் வாழ்க்கை அனுபவத்தினை ஸ்ரீ ஸ்வாமிகளின் வாயிலாகவே அறிய நேர்ந்தது. திருமதி இந்திரா திருமணம் முடித்த பின்னர் அவருடைய கணவரிடத் தில் மிகவும் முரட்டுத்தனமாகவும், இயற்கைக்கு மாறாக வித்தியாசமான முறையிலும் நடந்து கொண்டதால் கலக்க மடைந்த பெற்றோர்கள் அப்பெண்மணியை ஸ்ரீ ஸ்வாமி களிடம் அழைத்து வந்தார்கள். அப்பெண்ணை ஆட்கொண்டி ருந்த துர்சக்தியான ஒரு ப்ரஹ்ம ராக்ஷஸை அடையாளம் கண்ட ஸ்ரீ ஸ்வாமிகள் அதனுடன் சூட்சுமமாக தொடர்பு கொண்டு அதனை வெளியேறவும் கட்டளையிட்டார். அதற்கு பணிந்த அந்த ப்ரஹ்ம ராக்ஷஸ் தன்னை, அதாவது அப் பெண்ணை நதி தீரத்திலோ, மலையினருகிலோ அழைத்துச் சென்றால் விலகி விடுவதாகவும் அதற்கு அடையாளமாக மலையுச்சியிலிருந்து ஒரு பெரிய பாறையை உருட்டி விடுவதாகவும் கூறிற்று.

ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் பக்தர்கள் நடைபயணமாக மேற்கொள்ளும் திருப்பதி குமார தாரா யாத்திரையின் போது அப்பெண்ணையும் அழைத்து வரச் சொல்ல அங்கேயே அந்த ப்ரஹ்ம ராக்ஷஸும் அப்பெண்ணை விட்டு விலகி விமோசனமும் அடைந்தது. அதன் அடையாள மாக அனைவரும் பார்த்து அதிசயிக்கும்படியாக ஒரு பெரிய பாறை உருண்டு ஸ்ரீ ஸ்வாமிகளின் கருணைக்கு அத்தாட்சி யாக நின்றது.

## ஸோஹம் தியானம்

'யோக பிரயாகா' என்ற யோகா மற்றும் தியான பயிற்சி மையம் இன்றும் இயங்கிக் கொண்டிருப்பதற்கான அடித்தள மாக ஸ்ரீ ஸ்வாமிகள் எனக்கு 'ஸோஹம்' என்ற தியானப் பயிற்சி யினை இங்குதான் தொடங்கி வைத்தார். நான் மாலை நேரங் களில் அங்கு செல்லும்போது என்னை உட்கார வைத்து மூச்சுப் பயிற்சியான பிராணயாமத்தையும், நிர்குணோபாசனையான "ஸோ ஹம்" அதுவே நான் என்ற தியானப் பயிற்சியையும் கற்றுக் கொடுத்தார். அதை இன்றளவும் எனக்குக் கிடைத்த பெரும்பேறாகக் கருதி அவர் மலர்தாள் பணிகின்றேன்.

## குமாரதாரா யாத்திரை

1943ஆம் வருடம் சித்திரை மாதம் குமாரதாரா யாத்திரைக்கு என் தந்தையார் திரு. அனந்த சுப்ரமணிய ஐயரும் எனது இளைய சகோதரர் திரு. அனந்தராமனும் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் செல்லும் பாக்கியம் கிட்டப் பெற்றார்கள். இந்த யாத்திரையின் விவரம் 8 வயதான அறியா பருவத்தில் இருந்த திரு. அனந்தராமன் வாயிலாக கீழே விவரிக்கப்படுகிறது.



குமாரதாரா யாத்திரையின்போது
ஸ்ரீ ஸ்வாமிஜி



## சுவாமிஜியுடன் சிறுவனான நான்



திரு. ஏ. அனந்தராமன்

## குமாரதாரா பயணம் பற்றிய பேச்சு

ஒரு சமயம் பக்தர்கள் பலரும் சுவாமிஜியிடம் அவர் தவமியற்றிய குமாரதாராவிற்குச் செல்ல வேண்டுமென்று விருப்பம் தெரிவித்தனர். அதுகேட்ட சுவாமிஜி, "உங்களைப் போலவே இன்னும் பலரும் இதுபற்றிக் கேட்டுள்ளனர். அவர்களுக்குக் கடிதம் எழுதி அவர்களின் கருத்தையும் அறிந்து கொண்ட பிறகு குமாரதாரா பயணம் பற்றி திட்டமிட முடியும்" என்று கூறிவிட்டார்.

சுவாமிஜி கடிதம் எழுதியதன் பேரில் தஞ்சாவூர், திருச்சி, குணசீலம் போன்ற சங்கங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். அவர்களில் முக்கியமாக குறிப்பிடத்தக்கவர்கள் உறையூர் இராமசாமியும் பண்ருட்டி இராமசாமியும் ஆவர். இவர்களில் பண்ருட்டி இராமசாமி என்பவர் பெரிய தனவந்தர். பர்மா ஷெல் ஏஜெண்ட். உறையூர் இராமசாமி மூக்கில் அறுவை சிகிச்சை செய்திருந்ததால் அவர் பேசுவது வேடிக்கையாக இருக்கும்.

சுவாமிஜி குழந்தைகள்கூடயிருக்கும் போது உறையூர் இராமசாமியுடன் பேசுவார்; இராமசாமி பேசுவது கேட்டு நாங்கள் எல்லோரும் சிரிப்போம்.

இதற்கிடையில் குமாரதாரா பயணம்பற்றி முடிவெடுக்கப் பட்டது. சுவாமிஜி, குமாரதாராவிற்கு வர விருப்பமுள்ளவர் களின் பெயர் பட்டியலைக் குடும்ப வாரியாகத் தயாரிக்க சொன்னார். சுமார் 70 பெயர்கள் இருந்தன. ஆனால், அதில் என் பெயர் இல்லாதால் நான் கோபமுற்றேன்.

அப்பொழுது பண்ருட்டி இராமசாமி, "எனக்கு தொழிலில் நிறைய இலாபம் வந்திருக்கிறது. எனவே, நான்தான் யாத்திரைக்கு பணம் கொடுப்பேன்'' என்றார். ஆனால் சுவாமிஜி அவரிடம், "நான் கூறுவதற்கு மட்டும் பணம் கொடு போதும்" என்றார்.

**குமாரதாரா செல்லும் முன் எங்கள் வீட்டில்**

மே மாதம் ஒரு வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில் சுவாமிஜி திருப்பதியும் குமாரதாராவும் செல்ல முடிவெடுத்தார். புறப்படுவதற்கு முன் என்னைவிட 2 வயது அதிகமுள்ள ஒரு பையனுடன் எங்கள் தாத்தாவைப் பார்க்க வந்தார். என் தகப்பனார் குமாரதாரா செல்வதற்கு தயாராக இருந்தார். நான் சுவாமிஜியைப் கோபமாகப் பார்த்துக் கொண்டு நின்றிருந் தேன். ஆனால் ஒருவருக்கும் தெரியாமல் ஒரு சிறு பையில் எனது துணிகளை எடுத்து வைத்திருந்தேன்.

சுவாமிஜி வீட்டைவிட்டுப் போகும்போது, "நீ என்ன செய்யப் போகிறாய்'' என என்னைப் பார்த்துக் கேட்க, "நான் உன்னுடைய ஃபிரண்ட். நானும் உன்னுடன் வருவேன்'' என்றேன். அதைக் கேட்டு எல்லோரும் சிரித்தனர்.

சுவாமிஜி சிரித்துக் கொண்டே, "காரில் போய் கிருஷ்ண சாமி பக்கத்தில் உட்கார்'' என்றார். அதற்காகவே காத்திருந்த நான் என் துணிப்பையுடன் ஓடிச் சென்று காரில் ஏறி கிருஷ்ணசாமி அருகில் உட்கார்ந்து கொண்டேன்.



**சென்ட்ரல் ஸ்டேஷன் சம்பவம்**

பாம்பே எக்ஸ்பிரசில் சுவாமிஜிக்கு முன்பதிவு செய்திருந்த இடத்தில் இரண்டு வெளிநாட்டு மிலிட்டரி ஆபீசர்கள் உட்கார்ந்திருந்தனர். அதைப் பார்த்து சிலர் மிலிட்டரி போலிசிடம் சொல்லி அவர்களை வெளியேற்ற வேண்டுமென்றனர். ஆனால் சுவாமிஜி அப்படி செய்ய வேண்டாம் என்று கூறி தடுத்து விட்டார். இதற்கிடையில் சிவராமையா அந்த மிலிட்டரி ஆபிசர்களிடம் சென்று, "அவர் எங்கள் மதகுரு" என்றார். உடனே அவர்கள் தங்கள் கையி லிருந்த சிகரெட்டை கீழே போட்டுவிட்டு எழுந்து நின்றனர்.

சுவாமிஜி அவர்களுக்கு காபி கொடுக்க சொன்னார். அவர்கள் சுவாமிஜிக்கு பிரட் கொடுத்தனர். ரேணிகுண்டா வரை சுவாமிஜி அவர்களுடன் பயணம் செய்தார். வழியில் சுவாமிஜி திருவள்ளூரில் இறங்கி எங்கள் எல்லோருக்கும் இட்லி, காபி வாங்கிக் கொடுத்தார்.

**கீழ் திருப்பதியில் சுவாமிஜி**

ரேணிகுண்டாவிலிருந்து கீழ் திருப்பதி அடைந்தோம். அங்கு சத்திரத்தில் பெரிய இடம் வழங்கப்பட்டது. பலர் சுவாமிஜியை வந்து பார்த்தனர். எல்லோருக்கும் அந்தந்த நேரத்திற்குக் காபி, டிபன் வழங்கப்பட்டது.

அன்று மாலை 55 வயதிருக்கும் ஒரு வசதி படைத்தவ ரும், ஒரு கண்ணை இழந்தவருமான ஒரு புகைப்பட கலைஞர் சுவாமிஜியைப் பார்க்க வந்தார். அவரைப் பார்த்த நான் சுவாமிஜியிடம், "ஏன் இவருக்கு ஒரு கண் இல்லை" என்று கேட்டேன். அதற்கு சுவாமிஜி, "நான் இவரிடம் போட்டோ

எடுக்கும்போது காமிராவில் ஒரு வெளிச்சம் வரும். அதைப் பார்க்க வேண்டாம் என்று கூறியும் அவர் அந்த வெளிச்சத்தைப் பார்த்ததால் ஒரு கண்ணை இழந்தார்" என்று கூறினார். அந்த போட்டோகிராபரும், "அது உண்மைதான்" என்று கூறினார்.

**மேல் திருப்பதி பயணம்**

உத்தேசமாக ஒரு ஞாயிற்றுக்கிழமை நடந்து மலையேறி மேல் திருப்பதி சென்றடைந்தோம். சுவாமிஜி சில இடங்களில் டோலியிலும் சில இடங்களில் எங்களுடன் நடந்தும் வந்தார். அவர் நடந்து வந்த பொழுதெல்லாம் நானும் கிருஷ்ணசாமியும் அவருக்கு விசிறி வீசிக் கொண்டு சென்றோம். அன்றிரவு மேல் திருப்பதியில் நல்ல சாப்பாடு வழங்கப்பட்டது.

**குமாரதாரா பயணம்**

அடுத்த நாள் காலை குமாரதாராவிற்குப் பயணப் பட்டோம். வழியில் பாபநாசத்தில் இட்லி, காபி சாப்பிட்டோம். பிறகு, காட்டு வழியாக நடத்து சனக, சனந்தன, சனாதன, சனத்குமார குகையை அடைந்தோம். சுவாமிஜி, "இங்குதான் தவம் செய்தேன்" என்று கூறினார். அது மிகவும் பயங்கரமான தும் ஆபத்தானதுமான இடமாக இருந்தது. அங்கு பலவித விஷ ஜந்துக்கள் இருப்பதைக் கண்டு நாங்கள் மிகவும் பயந்தோம்.

பிறகு அங்கிருந்து புறப்பட்டு இடதுபுறம் திரும்பி, வெள்ளை மிளகு, மாதுளை, கொய்யா, அழகான பூச்செடிகள் என கண்ணுக்கினிய மரம் செடி கொடிகள் நிறைந்த இயற்கைச் சூழலை ரசித்தபடியே மயிலாடு பாறை சென்றடைந்தோம். அது சுமார் 200 பேர் உட்காரக் கூடிய பெரிய சமதளமான ஒரே பாறையாகும். அதில் நாங்கள் 80 பேர் உட்கார்ந்தோம். மயிலாடு பாறைக்கு எதிரில் ஒரு பெரிய மலை இருந்தது.



அம்மலையின் ஒரு பகுதியில் சுவாமிஜி, தீக்குச்சியைக் கொளுத்திப் போட்டார். உடனே, 3, 4 கரடிகள் ஒரேயடியாகக் கத்திக் கூச்சலிட்டப்படி நாலாப்பக்கமும் ஓடின. அது மிகவும் பயங்கரமானதாகவும் ரசிக்கக் கூடியதாகவுமான காட்சியாக இருந்தது.

மயிலாடும் பாறைக்கு முன்னால் புலி பிடிக்கும் இடத்தை சுவாமிஜி காட்டினார். பிறகு மயிலாடும் பாறையி லிருந்து ஒரு பர்லாங் நேராக நடந்து வலதுபுறம் திரும்பி நாரத தீர்த்தத்தை அடைந்தோம். நாரத தீர்த்தத்தில் இருந்த கூர்மை யான சிறுசிறு பாறாங்கற்கள் கால்களைக் காயப்படுத்தின. ஆனால், சிறிது தூரம் நடந்தபிறகு சமமான கூழாங்கற்கள் அந்த வெட்டுக்காயங்களை குணப்படுத்தின.

**குமாரதாரா அடைதல்**

நாரத தீர்த்தத்தின் முடிவில் சிறிது செங்குத்தான பாறைகளில் ஏறி குமாரதாரா பள்ளத்தாக்கின் மேல் பகுதியை அடைந்தோம். 'ஹோ' என்ற பெருஞ்சத்தத்துடன் அருவி விழுந்து பயங்கரமான உணர்வை ஏற்படுத்திக் கொண்டி ருந்தது. சுற்றிலும் மலைகள். மலைகளில் வெயில்படுவதால் மலை பளபளவென்று ஜொலித்துக் கொண்டிருந்தது.

சுவாமிஜி ஒவ்வொருவரையும் பள்ளத்தாக்கில் உதவி செய்து குமாரதாரா குகைக்கு அழைத்துச்சென்றார். நானும் கிருஷ்ணசாமியும் மலையிலிருந்து சருக்கிக் கொண்டே வந்து குகையை அடைந்தோம். அதற்குள் நாங்கள் வேகமாக சறுக்கி வருவதைப் பார்த்த சுவாமிஜி, ஓடிவந்து எங்களைப் பிடித்துக் கொண்டார்.

அன்று மாலை, எல்லோருக்கும் டீயும் உப்புமாவும் இரவு பொங்கல், கத்திரிக்காய் கொச்சும் வழங்கப்பட்டது.

## மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு

சுவாமிஜியைப் பார்த்தவுடன் 4, 5 பேர் வந்து மலையின் மேலிருந்த மரங்களை வெட்டிச் சாய்த்து குகைக்கு முன்னால் தீ மூட்டினர். "இரவில் தீயைப் பார்த்தால் மிருகங்கள் வராது. அதற்காகவே இந்த ஏற்பாடு" என்று சுவாமிஜி கூறினார்.

மறுநாள் எல்லோருக்கும் இட்லி, காபி வழங்கப்பட்டது. பிறகு 2 கல் தச்சர்கள் வரவழைக்கப்பட்டனர். அங்குள்ள பாறையில் அந்த வருடத்தைக் குறிப்பிட்டு அங்கு வந்திருந்த எல்லோருடைய பெயர்களையும் குடும்ப வாரியாகச் செதுக்கச் சொன்னார் சுவாமிஜி.

குமாரதாராவில் பலவித அழகான கூழாங்கற்கள் இருந்தன. நானும் கிருஷ்ணசாமியும் அக்கற்களை இரண்டு மூட்டையாக கட்டிக் கொண்டோம். சுவாமிஜி ஒவ்வொரு கூழாங்கல்லையும் பார்த்து எங்களைப் பாராட்டினார். ஆனால் அதனை கொண்டு வர முடியவில்லை.

அன்றே குமாரதாராவிலிருந்து மேல் திருப்பதி அடைந்தோம். எப்பொழுதும்போல் நானும் கிருஷ்ணசாமியும் சுவாமிஜிக்கு விசிறிக் கொண்டு வந்தோம். சுவாமிஜியும் எங்களுக்குப் பல கதைகள் சொல்லிக் கொண்டே வந்தார்.

## மேல் திருப்பதி கோயில்

சிறப்பு தரிசனம் சுவாமிஜியால் எங்களுக்குக் கிடைத்தது. ஸ்ரீ வேங்கடேச பெருமாளின் எல்லா நகைகளையும் எடுக்கச் சொல்லி அதைப் பற்றி எங்களுக்கு விரிவாக கூறினார். எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகப் பிரசாதம் வழங்கப் பட்டது. பிறகு, நானும் என் தகப்பனாரும் சென்னைக்குப் புறப்பட்டோம். வழியில் மைசூர் மகாராஜா சத்திரத்தில் எங்களுக்கு சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்திருந்தார் சுவாமிஜி.



ஒரு சிறுபிள்ளையின் பார்வையில் ஒரு பரமாத்மாவின் யாத்திரை விவரங்களின் நேர்முக வர்ணனையைத் தொடர்ந்து மற்றொரு அன்பர் தமது குமாரதாரா யாத்திரை அனுபவங்களை ஓர் அறிக்கையில் அச்சிட்டு வெளியிட்டதை வாசகர்களின் பார்வைக்கு வெளியிடுகிறோம்.

ஓம்

தத் ஸத்

*பக்தர்களே,*

*ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ அவர்கள் நூற்றுக்கணக் கான பக்தாளுடன்*

*நாளது விக்கிரம வருஷம், ஆவணி மாதம், 23ஆம் தேதி (7-9-1940) சனிக்கிழமை காலை, பம்பாய் எக்ஸ்பிரசில் திருப்பதிக்குப் புறப்பட்டு அன்றும் மறுநாளும் கீழ்த்திருப்பதியில் தங்கி கபில தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம், நரசிம்ம தீர்த்தம், பீம தீர்த்தம், பத்மசரஸ், துல்ய தீர்த்தம் முதலியவைகளில் ஸ்நானம் செய்து திருச்சானூர் ஸ்ரீ மஹாலக்ஷ்மீதேவி பத்மாவதி சேவை செய்து ஸ்வர்ணமுகி நதியில் நீராடி (9-9-1940) திங்கட்கிழமை காலை 4 மணிக்குத் திருவேங்கிட பர்வதம் ஏறி திருமலை விஜயமாகி சன்னதியில் இரண்டுநாள் தங்கி கோகர்பம், பாண்டவ தீர்த்தம், வராக தீர்த்தம், சசீகர தீர்த்தம், அஸ்தி தீர்த்தம், ஜாபால தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம், சேக்ஷ தீர்த்தம், நாரத தீர்த்தம் முதலியவைகளில் ஸ்னானம் பண்ணி ஸ்வாமி புஷ்கரணி (திருக்கோனேரி) தீர்த்தத்தமாடி (11-9-1940) புதன்கிழமை அதிகாலையில் ஸ்ரீ குமாரதார தீர்த்ததுக்குச் சென்று அன்றிரவு அங்கு தங்கி மறுநாள் குருவாரம் காலை புறப்பட்டு சனகசனந்த சநாதன சனத்குமார தீர்த்தம் பாபநாசம் ஆகாச சங்கை முதலிய தீர்த்த ஸ்நானமாடி ஹத்தீராம்பாவாஜீ சமாதி தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீனிவாசன் சன்னதிக்கு வந்துவிட்டு மதறாஸ் வந்து விடுகிறார்கள். பல ஜில்லாக்களிலிருந்தும் நூற்றுக்கணக்காகப் பக்தர்கள் வருகிறார்கள். ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷோபநிஷத் ஸ்ரீ வேங்கடேஸ்வர கவசோபநிஷத் இவைகளை உபதேச மூலமாக பரமாத்மாஜீயிடம் பெற்றுக் கொண்டவர்கள் உபநிஷத் சஹிதம் திருமலைக்கும் குமாரதாராவுக்கும் பரமாத்மாஜீயுடன் அவஸ்யம் வரவேண்டியது. உபநிஷத் உபதேசமில்லாதவர்களும் வரலாம்.*

பரமாத்மாஜீ

ஓம்

தத் ஸத்

ஸ்ரீ மஹாலக்ஷ்மீ பத்மாவதி சமேத ஸ்ரீநிவாஸ வேங்கடேஸ்வர பரப்பிரஹ்மணே நம :

ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ அவர்கள்

முன்னரே பத்திரிகைகளில் அறிவித்திருந்தபடி தமது சிஷ்யர்கள் சகிதம் 7-9-1940 சனிக்கிழமை காலை மதராஸ் சென்ட்ரல் ஸ்டேஷனில் பம்பாய் எக்ஸ்பிரசில் திருப்பதிக்குப் புறப்பட்டு வழியில் அரக்கோணம், திருத்தணி, புத்தூர், நகரி முதலிய ஸ்டேஷன்களில் வந்து சேர்ந்த பக்தர்களையும் சேர்த்துக் கொண்டு ரேணிகுண்டா ஜங்ஷன் வந்தார்கள். அங்கு ஸ்டேஷன் மாஸ்டர் தனி ரெயில் வண்டித் தொடர் திருப்பதிக்குச் செல்ல ஏற்பாடு செய்திருந்தார். அவ்வூர் ஸ்ரீமான் வீரப்பிரஹ்மம் நாயுடு ஸ்வாமிகளைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

திருப்பதி ஸ்டேஷன் வந்ததும் உள்ளூர்ப் பிரமுகர்களும் பக்தர்களும் வரவேற்கக் கீழிறங்கி ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும் மேல்மாயில் ஸ்ரீ விலக்ஷணானந்த சபா பக்தர்கள் 50 பேரும் சபாப் பெயர் கொண்ட பெரிய கொடிகளுடன் ஒவ்வொருவர் சிரசிலும் வெண்ணிறக் குல்லாய்களும் அதில் 9 சக்தி கொண்ட ஓங்காரப் பிறையும் சபையின் நாமமுங் கொண்ட தலைக் குல்லாயுடனும் பஜனைக் கோஷ்டியுடனும் ஸ்வாமிகளை வரவேற்று ரோஜா மாலையிட்டு ஆராதனை செய்து கற்பூர ஹாரத்தி செய்து நமஸ்கரித்தனர். இந்த 50 பேர்களில், 7 பேர் திருப்பாணாழ்வார் நந்தனார் ஜாதியைச் சேர்ந்த ஆதித்திராவிடர்களென்பது குறிப்பிடத்தகுந்தது.

ஸ்வாமீஜீ தமது கூட்டத்துடன் வேதாந்த பஜனையோடு ரெயில்வே ஸ்டேஷனுக்கருகிலுள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானப் பெரிய புதுச் சத்திரத்திற்குச் சென்று ஸ்வாமிகளுக்காக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் தங்கி அன்று பகல் முழுவதும் பல உள்ளூர்ப் பிரமுகர்களுக்கும் பக்தர்களுக்கும் பல வெளி ஜில்லா சிஷ்யர்களுக்கும் தரிசனம் அளித்தார்கள். அன்று மாலை 6.30 மணி முதல் 8 மணி வரை பெரிய கூட்டமத்தியில் ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷோபநிஷத் ஸ்ரீ வேங்கடேஸ்வர கவசோபநிஷத்



இவைகளை ஸ்வாமீஜீ முன் சொல்ல அனைவரும் அத்தியாயனம் செய்தார்கள்.

அவ்வூர் 9 மாதமாக மழையில்லாத தால் திருப்பதி ஜனங்களின் வேண்டுகோளின்மீது அன்றிரவு 2 மணி முதல் 5 மணி வரை அபார மழை பெய்தது. மறுநாட் காலை 5 மணிக்கு ஸ்வாமீஜீ அவர்கள் 200 பக்தர்களுடனும் திருப்பதி பக்தாளுடனும் பாதசாரியாகப் பாலாஜீ உபநிஷத் அத்தியயனத்துடனும் ஸ்ரீ வேங்கடேஸ்வர திரயோதசாக்ஷரீ உச்சாரணத்துடனும் சென்று கபில தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம், துல்ய தீர்த்தம், பிரம்ம தீர்த்தம், ருத்ர தீர்த்தம் முதலியவைகளில் ஸ்நானம் செய்து கபிலேஸ்வரர், நம்மாழ்வார் தரிசனமும் செய்து திரும்பினர். அன்று மாலை 6 மணிக்கு நரசிம்ம தீர்த்தம் புரோக்ஷணம் செய்து கொண்டு ஸ்ரீ கோவிந்தராஜர், ஸ்ரீராமர் தரிசனம் செய்து கொண்டபின் உபநிஷத் பாராயணம் நடந்தன.

சென்னை நகரினின்றும் வெளியிலுள்ள பல ஜில்லாக்களிலிருந்தும் நூற்றுக்கணக்கான சிஷ்யர்கள் வந்திருந்தார்கள். மறுநாள், 9-9-40 இரவு 3 மணிக்கு ஸ்வாமீஜீயுடன் சகலரும் புறப்பட்டுத் திருவேங்கட பருவதம் அலீபிரி சென்று சக்கிலிதாஸ் ஸ்ரீநிவாஸ தரிசனம் செய்த பாதரக்ஷை மண்டபம் தரிசனம் செய்து கொண்டு கூட வந்த 7 ஆதித்திராவிடர்களை அவ்விடத்திலிருக்கும்படி செய்து 1. சேஷாசலம் 2. சிம்ஹாசலம் 3. விருஷபாசலம் 4. கருடாசலம் 5. கனகாசலம் 6. அஞ்சனாசலம் 7. வெங்கடாசலம் இவ்வேழு பருவதங்களையும் பாலாஜீ உபநிஷத் மூலமந்திர சஹிதம் மெதுவாக நடந்து அங்கங்குள்ள தெய்வீக மானுஷீக வைபவங்களைத் தரிசித்துக் கொண்டும் அவரவர் பூர்வினையினாலும் க்ஷுபாதையினாலும் பக்தி மேலிட்டாலும் கூக்குரலிடுகிற கோவிந்தா என்ற சப்தத்தின் பிரவாகத்தைக் காதாற் கேட்டுக் கொண்டும், பற்பல வனத்தின் இயற்கைத் தோற்றங்களையும் ஆரண்ய விருட்ச மூலிகைகளையும் பார்த்துக் கொண்டும் திருவேங்கட பர்வதத்திலுள்ள சகல வஸ்துக்களும் ஸ்ரீநிவாஸ சொரூபமென்ற திடபாவனையோடு கூட ஆறாவது மலையிலுள்ள முழங்கால் முறித்தான் என்ற இடத்திலுள்ள ஸ்ரீ பாஷ்யகாரர் தரிசனம் செய்து கொண்டு திருமலை க்ஷேத்திரம் சென்று ஸ்வாமிகளுக்கும் அவரவர்களுக்கும் அமைக்கப்பட்டிருந்த இடங்களிற்றங்கி

ஸ்வாமி புஷ்கரணி ஸ்நானம் செய்தனர். பலர் தங்கள் தங்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தினர்.

அன்று மாலை ஸ்வாமீஜீ தமது கூட்டத்துடன் மேல்மாயில் பக்த கோஷ்டிகள் ஓங்காரக் குல்லாயுடனும் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூல மந்திர உச்சாரணத்துடன் வலமாகப் பாலாஜீ ஸ்ரீநிவாஸன் திருச்சன்னிதி வந்து வேங்கட தேவராஜர் கிரிதரதாஸ மஹாராஜர், தொண்டைமான் சக்கிரவர்த்தி ஆகாச மஹாராஜர் முதலியவர்களின் உருவச்சிலையைத் தரிசித்துக் கொண்டு 2ஆவது பிரகாரப் பிரதக்ஷணம் செய்து விரஜா நதி, அனந்தாழ்வான் புஷ்ப கைங்கரியம் செய்த இடம் புஷ்பபுஷ்கரணி தரிசனம் செய்து கொண்டு முதல் பிராகாரப் பிரதக்ஷணம் செய்து பாலாஜி இருப்பிடத்திற்கு நிருதி திக்கில் அமைந்துள்ள கல்யாண வுத்ஸவ மண்டபத்தில் வீற்றிருந்து ஸ்வாமீஜீ முன் சொல்ல அனைவரும் உபநிஷத் படனமும் பாலாஜீ மூல மந்திர உச்சாரணமும் நடைபெற்றன. இவைகளைத் தேவஸ்தான அதிகாரிகளும் வெளியிலிருந்து வந்துள்ள பக்த ஜனங்களும் பார்த்து ஆச்சரியமடைந்தனர்.

இரவு 8 மணிக்குத் தேவஸ்தான அதிகாரிகள் ஸ்வாமீஜீயிடம் சம்பாஷணை செய்து ஸ்வாமீஜீயுடன் கூடவந்த சகலருக்கும் ஸ்பெஷலாகவும் தனித்தனியாகவும் ஸ்ரீநிவாஸ வேங்கடேஸ்வர பாலாஜீ சேவை செய்து வைத்தும் அர்ச்சகர்கள் விசேஷ மரியாதையுடன் மூல விக்கிரகத்திலுள்ள சகல விவரங்களையும் சொல்லிக் காட்டி ஆகாச மஹாராஜன் கிரீடம் வலது மார்பிலுள்ள மஹாலக்ஷ்மீ இடது மார்பிலுள்ள பத்மாவதி திருமேனியிலுள்ள நாகாபரணம், 1008 சாளக்கிராமமும், 1008 மஹா மந்திரங்களும் கொண்ட பெரிய ஹாரம், 1008 மஹாலக்ஷ்மி உருவங்கொண்ட பெரிய ஸ்வர்ண மாலையும், வலது காற் பெருவிரலிலுள்ள கங்கோற்பத்தி ஸ்தானத்தையும் ஆதிசங்கரரால் ஸ்தாபிதம் செய்யப்பட்ட தனகலாய எந்திரத்தையும் சாஸ்திரோக்த மாக எடுத்துக் காட்டினார்கள். 10-9-40 காலை கோகர்பம், பாண்டவ தீர்த்தம், வைகுண்ட தீர்த்தம் முதலியவைகளுக்குச் சிலர் சென்று வந்தனர்.

அன்று மாலையும் வலமாக தமது பக்த ஞானக்கூட்டத்தாருடன் கல்யாண மண்டபம் சென்று உபநிஷத் படனம் நடந்ததன் பின் ஏகாந்தமாக ஸ்ரீநிவாஸப்பெருமான் சேவை செய்து கொண்டு



மீண்டும் கல்யாண மண்டபம் சென்ற பின் தேவஸ்தான அதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்க ஸ்வாமீஜீயுடன் வந்திருக்கப்பட்ட சகலருக்குமாக பாலாஜீக்கு நைவேத்தியம் செய்த மூன்று அண்டாப் பிரசாதங்களையும் விநியோகம் செய்தனர். இவ்விரண்டு நாளும் ஆதிவராகப் பெருமான் தெரிசனம் செய்தபின் ஸ்ரீநிவாஸர் தரிசனம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீநிவாஸமூர்த்தி ஆதிவராகப் பெருமானுக்கு எழுதிக் கொடுத்த சாசனத்தையும் வராகஸ்வாமி ஆலய அர்ச்சகர் எடுத்துக் காட்டினார். 11-9-40 காலை 5 மணிக்கு ஸ்வாமீஜீயுடன் 300 சிஷ்யர்கள் உபநிஷத் கோஷம் ஸ்ரீ வேங்கடேஸ்வர மூல மந்திர ஜெபம் இவைகளுடன் குமாரதாரா தீர்த்தத்திற்குப் புறப்பட்டு மத்தியில் ஹத்திராம் பாவாஜீக்கு ஸ்ரீநிவாஸனம் தரிசனம் கொடுத்த இடம், பாவாஜீ தபஸ் செய்த இடம், சமாதி ஸ்தானம், பாபநாச தீர்த்தம் இவைகளைத் தரிசனம் செய்து கொண்டு பரமாத்மாஜீ 1923 வருஷம், தபஸ் செய்த சனக சனந்த சநாதன சனத் குமார தீர்த்தத்திற்கு அனைவருஞ் சென்று புரோக்ஷணம் செய்து கொண்டு ஸ்வாமீஜீ தபஸ் செய்த இடம் குகை முதலியவைகளையும் அதன் அமைப்பு முதலிய வைபவங்களையும் தரிசனம் செய்து கொண்டு குமாரதாரா தீர்த்தத்திற்குச் செல்லும் வழியிலுள்ள பயங்கரமான ஆரண்யங்

**சனக, சனந்தன, சனாதன, சனத்குமார தீர்த்த யாத்திரை - 2001**




**குகையின் வெளிப்புறம்**



குகையின் உட்புறத் தோற்றம்

களையும் பெரிய பர்வதங்களையும் நீர்த்தாரைகளையும் அருவி களையும் பெரிய வியாக்கிரமங்கள் தங்கக் கூடிய இடங் களையும் பார்த்துக் கொண்டு நாரத தீர்த்தத்தில் புரோக்ஷணம் செய்து கொண்டு புலி கரடி கண்டரங்கி முதலிய பயங்கரமான மிருகங்கள் சஞ்சரிக்கிற குமாரதாரா வனத்துட் பிரவேசித்துக் கஷ்டமான வழி களையெல்லாந் தாண்டிக் காலை 9 மணிக்குக் குமாரதாரா வந்தனர். ஆங்காங்குள்ள ஆச்சரியக் காட்சியைப் பார்த்த அனை வரும் மெய்மறந்து ஆனந்த பரவசமானார்கள். அங்கு நான்கு பக்கமும் நான்கு மலை ஆகாயத்தை அளாவியும் மேல் பாகத்தில் உயரத்திலிருந்து வெகு வேகமாக வந்து விழுகிற குமாரதாரா அருவியும் அதன் ஓங்கார ஓசையும் சுமார் 5000 ஜனங்களுக்கு மேல் ஏககாலத்தில் தங்கக்கூடிய ஒட்டில்லாத விசாலமான பெரிய பாறையும், அதன் தென்புறம் உத்தர திசையை நோக்கி 500 ஜனங்கள் மழைக்கு நனையாமல் தங்கக் கூடியதும் ஸ்வாமீஜீ அடிக்கடி தபஸ் செய்து வருவதுமாகிய விஸ்வாமித்திர ஆஸ்ரமக் குகையும் அதன் மேற்புரம் பாரத்வாஜ ஆஸ்ரமம் அதன் மேல்புறம் கௌதம ஆஸ்ரமம் அதன் மத்தியில் குமாரதாரா தீர்த்தம் வடமேற்கு மூலையில் வசிஷ்ட ஆஸ்ரமம் அதன் கிழக்கே கண்ணுவாஸ்ரமம் அதன் கிழக்கு வியாசாஸ்ரமும் அமைந்துள்ளது. இவை தாண்டிய தும் நாரத தீர்த்தத்தின் நீர் வீழ்ச்சியும் அதன் சமீபத்தில் இரட்டை





ஸ்ரீ ஸ்வாமிகள் தபஸ் செய்த இடங்களின் அமைப்பு

ஏணி வழியாகப் படியேறித் திருமலை செல்லும் பாதையும் கீழ் பாகத்தில் குமாரதாரா தீர்த்தம் பாய்கிற ஓடையும் அங்குள்ள இருண்ட சோலையினழகும் பற்பல கற்பாறைகளும் மடுக்களும் வெகு ரமணீயமாக இருந்தன.

அன்று பகல் 12 மணிக்குள் சகலரும் குமாரதாரா தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து முடிந்ததும் தீர்த்தத்தினெதிரிலுள்ள விஸ்தார மான பெரிய பாறை மைதானத்தில் அனைவரும் அமர்ந்து ஸ்ரீ வேங்கடேஸ்வர உபநிஷத் ஸ்வாமீஜீ சொல்ல அனைவரும் பின் அத்தியயனம் செய்தபின் மேல்மாயில் பக்தர்களால் பரமாத்மா ஜீக்குச் சாஸ்திரோக்தமாகப் பாத பூஜை செய்யப்பட்டன. அதன் பின், நமஸ்கரித்து அனைவரும் ஆசீர்வாதம் பெற்றனர். அங்கு 20 சிஷ்யர்களுக்கு பாலாஜீ உபநிஷத் உபதேச மூலமாக வழங்கப் பட்டன.

அங்கு வந்திருந்த 300 பேர்களுக்கும் ஸ்ரீ வைஷ்ணவப் பிராம்மணர்களால் தயாரிக்கப்பட்ட போஜனம் அளிக்கப்பட்டன. அன்று மாலை 6 மணிக்கு உபநிஷத் பாராயணம் செய்ததன்பின் குமாரதாராவில் எவரெவர்கள் எந்தெந்த சங்கல்பம் செய்கிறார் களோ அது அது சித்திக்குமாதலால் அவரவர்களும் ஞான மோக்ஷ சித்தி பிரஹ்ம ஞான அபிவிருத்தி, அனித்தியத்தில் வெறுப்பு, மோக்ஷ

இச்சை, இகலோக க்ஷேமம், சரீர ஆரோக்கியம், துக்கமில்லாத சுகம் இவைகளைத் திடமாகச் சங்கல்பிக்கும்படி அனைவருக்கும் எச்சரிக்கை செய்தும் அன்றிரவு அந்தக் குகையிலும் மற்ற இடங்களிலும் அனைவரும் கழித்து, மறுநாட்காலை 6 மணிக்குக் குமாரதாராவை விட்டுப் புறப்பட்டுப் பாபநாச தீர்த்த ஸ்நானம் செய்து ஹத்திராம் பாவாஜீ சமாதி தரிசனம் செய்து கொண்டு ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் திருச்சன்னிதி வந்தார்கள்.

12-9-40 மாலையும் பரமாத்மாஜீ தமது கூட்டத்தாருடன் ஆலயம் சென்று விதிப்படி பிரதக்ஷணம் செய்து கல்யாண மண்டபத்தில் உபநிஷத் அத்தியயனம் செய்தபின் ஸ்ரீநிவாஸப் பெருமான் ஏகாந்த சேவை செய்து கொண்டு மறுநாள் வெள்ளிக்கிழமை ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் திருமஞ்சனத்திற்குக் கூட்டத்துடன் சென்று திருமஞ்சன தரிசனம் செய்து கொண்டு அன்று மாலையும் வழக்கம்போல் வலம் வந்து பாலாஜீ தரிசனம் செய்து கொண்டு 14-9-40 சனிக்கிழமை காலை ஸ்ரீநிவாஸ வேங்கடேஸ்வர பாலாஜீ சன்னிதியில் சென்று விடை பெற்றுக் கொண்டு ஸ்வாமீஜீ சகல பக்தர்கள் சகிதம் கீழ்த் திருப்பதிக்கு வந்தார்கள்.

பல ஜில்லாப் பக்தர்களெல்லாம் பாலாஜீ தரிசனமும் பரமாத்மாஜீ தரிசனமும் ஏக காலத்தில் கிடைத்த அபூர்வக் காட்சியைப் பற்றி ஆச்சரியமாகப் பேசிக் கொண்டார்கள். சென்னை நகரிலிருந்தும் பற்பல ஜில்லாக்களிலிருந்தும் வந்திருந்த சிஷ்யர்கள் அனைவரும் பரமாத்மாஜீயிடம் ஆசீர்வாதமும் விடையும் பெற்றுக் கொண்டு அவரவர்கள் இருப்பிடங்களுக்குச் சென்றார்கள். ஸ்வாமீஜீயுடன் பாலாஜீ தரிசனம் செய்தும் குமார தாராவுக்கும் விஜயம் செய்த பரமாத்மாஜீ சகோதரர் ஸ்ரீமான் டி.ஆர். நாராயணய்யங்கார் வேண்டுகோளின்மீது, ஸ்வாமீஜீ பூர்வாஸ்ரமத்திலுள்ள சகலருடைய பெயர்களையும் குமாரதாராக் குகைக்கருகே செதுக்கப்பட்டன. இந்த யாத்திரையிலும் பரமாத்மாஜீயுடன் வந்த எல்லோருடைய பெயர்களையும் குமாரதாரா கற்களில் செதுக்கப்பட்டன.

ஸ்வாமீஜீ 1928, 1931, 1939 வருஷங்களில் தபஸ் செய்யப் போகும்போது வந்தவர்கள் பெயர்களும் செதுக்கப்பட்டிருந்தவை அப்படியேயிருக்கின்றன கீழ்த்திருப்பதியில் 50 பக்தர் களுக்கு



உபநிஷத் பாராயணம் உபதேச மூலமாக வழங்கப்பட்டன. பெரிய சைஸ் உள்ள ஸ்ரீ கிருஷ்ண துளசிக்கட்டை, ஸ்ரீராம துளசிக் கட்டை ஆரண்ய துளசிக்கட்டை, சந்தனக்கட்டை இவைகள் தயார் செய்து ஸ்வாமீஜீ கொண்டு போயிருந்ததைத் தகுந்த வேலையாட்களைக் கொண்டு கடையச் செய்து எதிரிலேயே துவாரமிட்டு 108 மணிகள் கொண்ட மாலையாகக் கட்டவும் திருப்பதி சிஷ்ய பக்தர்களுடன் சம்பாஷிப்பதற்காகவுமாக, மூன்று நாளிருந்து 17-9-40 மாலை திருப்பதி பக்தர்கள் வழியனுப்ப மதறாஸ் வந்து சேர்ந்தார்கள்.

10-9-40, செவ்வாய்க்கிழமை மாலை 7 மணிக்கு திருமலை பாலாஜீ ஆலய கல்யாண மண்டபத்தில் பரமாத்மாஜீ உபநிஷத் பாராயணமும் உபந்நியாசமும் செய்து கொண்டிருந்த தருணத்தில் ஹைதராபாத் சமஸ்தானத்திலிருந்து யாத்திரையாக வந்திருந்த க்ஷத்திரிய ஜாதிப் பெண் சாவித்திரி என்ற நாமமுடையவள் ஸ்வாமீஜீ அருகில் உட்கார்ந்து விசேஷ பக்தி சிரத்தையுடன் சம்பாஷித்தும், தன் பிதா மாதாக்களையும் அழைத்து வந்து பரமாத்மாஜீ தரிசனம் செய்து வைத்தும், மறுநாள் மாதா பிதாக் களுடன் தானும் ஸ்வாமீஜீயுடன் குமாரதாராவுக்கு வந்தும் மீண்டும் திரும்பி திருமலை வந்தும் பரமாத்மாஜியிடம் வந்து சம்பாஷித்ததும் அனைவருக்கும் ஆச்சரியத்தையும் ஆனந்தத்தையும் அளித்தது.

தேவஸ்தான அதிகாரிகள் கீழ் திருப்பதியிலும் திருமலையிலும் பரமாத்மாஜீக்கும் உடன் வந்த சகலருக்கும் தங்குவதற்கு வசதியான இடங்களும் பாலாஜீ தரிசனம் கஷ்டமில்லாமல் அமைதியாகச் சேவை கிடைக்கும்படி செய்திருந்த ஏற்பாடுகளும் அர்ச்சகர்கள் அவசரமில்லாமல் சகல விபரங்களையும் எடுத்துக் காட்டிச் சேவை செய்து வைத்ததும் மெச்சத் தகுந்தது.


ஓம் தத் ஸத்

ஓம் நமோ பகவதே வேங்கடேசாய. ஸ்ரீ வேங்கடேசாய மங்களம்

இப்படிக்கு

நேரில் சென்று கூட இருந்தனுபவித்த பக்தன்

**மேற்கூறிய பக்தர்களின் அனுபவத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமிகள் குமாரதாரா யாத்திரையை எத்துணை ஈடுபாட்டுடனும், உறுதியுடனும் உலகம் உய்வதற்காக மேற் கொண்டார் என்பது தெள்ளென விளங்குகிறது.**



ஸ்ரீ ஸ்வாமிகள் பயன்படுத்திய மாலைகள்



**தென்னாட்டு சுற்றுப் பயணம்**

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் தெற்கே பல ஊர்களுக்கு சென்று பிரச்சாரம் மேற் கொண்டதை தொடரும் இந்த அறிக்கையின் மூலம் யூகிக்க முடிகின்றது.

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ

சுற்றுப்பிரயாண விபரம்.

ஸ்ரீ பரமாத்மஜீ நாளது தாரண-ஷு ஆவணி-மீ கக-உ (26—8—1944) சனிக்கிழமை பிற்பகலில் அலகரை கோடியாம்பாளையம் மணமேட்டை விட்டுப் புறப்பட்டு லாலாப்பேட்டை, குளித்தலை, திருச்சினுப்பள்ளி, பெருவளநல்லூர், காரை, தஞ்சாவூர், நாகப்பட்டணம், திருவாலூர், கும்பகோணம், சிதம்பரம், பண்ருட்டி, பாண்டிச்சேரி, மடுக்கரை, விழுப்புரம், திண்டிவனம், திருக்கோவிலூர், மேல்மாயில், சித்தூர், கீழ்த்திருப்பதி, (கோவிந்தராஜன்பட்டணம்) திருப்பதிமலை, நாராயணகிரி, குமாரதாரை இவ்விடங்களுக்குச்சென்று கடைசியாக சென்னப்பட்டணம் (மதராஸ்) விஜயமாவார்.

பரமாத்மாஜீ.

கஉ—எ—கஅ. ரூ.ஈக. 29—7—1944.

ஸ்ரீ சாரதாம்பிகா பிரஸ், முசிரி.

இந்த தென்னாட்டு பிரச்சார சுற்றுப்பயணத்தில் அவர் உபன்யாசம் செய்த விவரங்கள் அடங்கிய சில அரிய பத்திரிகைகளை வெளியிடுகிறோம். இதிலிருந்து ஸ்ரீ

ஸ்வாமிகளின் சக்தி வாய்ந்த பேச்சாற்றலையும் ஆழ்ந்த கருத்துக்களையும் தெய்வீக ஆகர்ஷண தன்மையையும் தர்ம வழியில் ஈடுபாடு கொள்ளும் பல நூற்றுக்கணக்கான பக்தர் களை ஈர்த்ததை அறிந்து கொள்ள முடிகின்றது.

ஓம்.

தத் ஸத்

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்கள்
குணமங்கல விஜயம்.

ஓங்காரவடிவாகி ஒருபொருளாயுட் பொருளாய்
ஆங்காரமற்றொளிரு மாண்டவனருட் ஜோதி
தேங்காதுமன மடங்கிநித்திக்கு மனுபவமே
பூங்காவிகுணமங் கலத்தோடே புரிவீரே.

அன்பிற் சிறந்த

ஆத்ம சகோதர சகோதரிகளே!

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்கள் நாளது சுபானு ஸ்ரீ தைமீ 28உ (10-2-1944) குருவாரம், காராமணிக்குப்பம், குணமங்கலம் விஜயம் செய்கிறார்கள். அன்று மாலை அவ்வூர் ஸ்ரீ திருவருட் பிரகாச ஷண்முக சபையில் உபந்நியாஸம் செய்வார்கள். அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம். இப்படிக்கு

திருவருட்பிரகாச ஷண்முக சபையார்,
காராமணிக்குப்பம, குணமங்கலம்.

சரஸ்வதி பிரஸ், திருப்பாதிரிப்புலியூர்.



ஓம்.

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜி
நெல்லிக்குப்பம் விஜயம்.
உபந்நியாஸஅழைப்புப்பத்திரிகை.

முல்லை முதலைம்பூவைச் சரத்தா லெய்த
மூதறிவு கொண்டவனை யருவமாக்கி
எல்லையிலா தாக்குவித்த யீசன்போல
இலங்குகின்ற அருட்சோதி ராமலிங்கம்
சொல்லிய சபைச்சார்பில் பரமாத்மாஜீ
துரியதுரியாதீத ஞானவார்த்தை
நெல்லி நகரிடையே நின்றியம்புவர்தம்
செம்மொழியா மமுதருந்த சேருவீரே

உண்மை ததும்பும் உத்தம சீலர்களே!

சகோதரிகளே! சகோதரர்களே!

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்கள்

நாளது சுபானு ஸ்ரீ பங்குனிமீ 18உ (31-3-44) வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு நெல்லிக்குப்பம் ஸ்ரீ திரௌபதியம்மன் ஆலயத்திற்கருகிலுள்ள ஸ்ரீ அருட்பிரகாசர் சன்மார்க்க சபையின் ஆதரவில் உபந்நியாசம் செய்வார்கள். அனைவரும் விஜயம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

ஸ்ரீ அருட்பிரகாசர் சன்மார்க்க சபையார்,
ரெட்டியார் வீதி, நெல்லிக்குப்பம்.

ஸ்ரீ விஜயா பிரஸ், நெல்லிக்குப்பம்.

ஓம்:

தத்: ஸத்:

# அதீதானந்த அற்புதக் காக்ஷி வைபவம்.

அன்பார்ந்த முமுக்ஷுக்களே, பக்தர்களே, ஆத்ம சகோதர சகோதரிகளே!
பிரம்ம ஸ்ரீ பரமாத்மாஜீ அவர்கள் சந்நிதானத் தலைமையின் கீழ்
திருச்சி ஜில்லா அலகரை கோடியாம்பாளையத்தில்

## கொளக்குடி பௌர்ணமை சபா.

நிகழும் தாரண-ஹு ஆடி-மீ 19-உ (3—8—1944) குருவாரம் இரவு 9-மணிக்கு மேல் ஆரம்பமாயிற்று. அவ்விதத் தெய்வீக வைபவத்துக்குச் சேலம் ஜில்லா பரமத்தியிலுள்ள ஸ்ரீ தத்தாத்திரேய பரம்பரை இராமானந்த சாது சங்க சபாத் தலைவர் அன்பர்கள் பல வெளியூர் பௌர்ணமை சபா மெம்பர்கள், வெளி ஜில்லா ஜனங்கள் ஏனைய உத்தம மகா ஜனங்கள், பிராம்மணர்கள் ஆண் பெண் உள்பட சுமார் (1000) ஆயிரம் பேர் வரை கூடியிருந்தனர்.

ஸ்ரீ பரமாத்மாஜீ தலைமையில் சபா நடந்த காக்ஷியும் அமைப்பும் ஸ்ரீ வைகுண்டம், கைலாஸம், தேவலோகம் போல் பிரகாசித்தது. அச்சமயம் ஆகாயத்தில் மேக சலனத்தால் இடி குமுறி மழை பொழிய ஆரம்பித்து விட்டது. உடனே ஷை கொளக்குடி சபைத் தலைவர் ஸ்ரீமான் விஸ்வவெங்கடாஜல ரெட்டியாரவர்கள் மனக் கலக்கங்கொண்டு அன்பர்கள் மழையில் நனைந்தால் பௌர்ணமை சபா பூஜை குறிப்பிட்ட முறைப்படி நடப்பதற்கு இடையூறாகு மென்று நினைத்து ஸ்ரீ பகவான் பரமாத்மாஜீ அவர்களிடம் முறையிட்டுக் கொண்டார்.

உடனே ஸ்ரீ பரமாத்மாஜீ அவர்கள் ஷை ரெட்டியாரவர்களிடம் அவஸரமாக முன் பின் யோசியாமல் குறித்த காரியம் விக்கினமின்றிப் பூர்த்தியாகும்வரை மழைபொழியாதிருக்க வேண்டிக்கொண்ட கருத்தடங்கிய பாசுரமொன்றியற்றிக் கொடுத்து, நிறைந்த சபையின் கண்ணே, ஷை பரமத்தி சபா அன்பர் பரசுராமர் என்ற ஞானானந்தரிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னார். ஷை ரெட்டியார் அவர்கள் சொல்லியவுடனே அடியிற்கண்ட பாசுரத்தை வாசித்த பிறகு மழை நின்றுவிட்டது. குறித்தபடி பூஜாமந்திரப்படன பாராயண கீர்த்தன சமாதி சம்பாஷணை உபந்யாஸம் ஒய்வு சத்துவ ஆகாரவிருத்தி முதலியன பூர்த்தியான வுடனே ஸ்ரீ பரமாத்மாஜீ சபையின் கண்ணே அக்ரகண்யராய் மேடைமீதமர்ந்த



[ [illegible] ]

ஷை ஞானானந்தரை நோக்கி ஸ்ரீ வேங்கடேஸ்வர தேவரின் [illegible] தத்துவ வைபவம் எப்படியிருக்கிறதென்று கேட்டார். இந்த இடத்தில் ஸ்ரீ பரமாத்மாஜீ திருவாய் மலர்ந்தருளிய செய்யுளை மறு முறையும் வாசிக்கப்பட்டது.

அது வருமாறு

வேங்கடதேவபீசா வீழ்மழை யிலாது செய்யும்
தாங்கரு மடியார் கூட்டம் தத்துவ முனிவர் [illegible]
ஏங்கிடவிலாது செய்வாய் இம்மழை யோடச் [illegible]
பூங்கனி மொழியாள் மார்பா புகன்றன னேற் [illegible] வாயே.

ஸ்ரீ பரமாத்மாஜீ ஷை ஞானானந்தரை ஷை சபையின் கண்ணே [illegible] கேட்டபோது ஷை சன்னிதான முன்பாகச் சபையை நோக்கி ஷை ஞானானந்தர் சொல்லிக்கொண்ட சாரங்களடங்கிய பாடல்கள் வருமாறு

காலிமே லிடையரெல்லாங் கனபொங்க லிட்டபோது
ஆலிலையமரு மாயோன் அடர்மழை பொழியச்செய்தநன்
காலிமே லிடையரெல்லாங் கலங்கிடக் கண்டகண்ணன்
மேல்குடையாகமேரு மலைதனைப் பிடித்தானப்போ.
கோட்டமில் மதிநாளி [illegible] கோடியாம்பாளையத்தில்
வாட்டமி லன்பர்கூட வன்மழை வந்தபோது
பாட்டினால் பரமாத்மாஜீ பகர்மழை நிங்கச்செய்தார்
வாட்டமி லன்பர்காள் நாம் வண்மையை யுணருவோமே.

ஞானானந்தர்.

உண்மைப் பக்தர்களே! உபந்நியாஸப் பிரியர்களே! உபாஸியர்களே!
உலகோர்களே! அன்பிற்குறிய சகோதர சகோதரிகளே!

ஸ்ரீ வேங்கடேஸ்வர ஸ்வரூப சக்தியே அவதார சரீரமாகத் தோன்றியுள்ள பிரும்மஸ்ரீ பரமாத்மாஜீ அவர்களின் மறைத்துவ வைபவம் உலகெலாம் உணர்ந்து உய்யும்பொருட்டு கருணைகொண்டு தூண்டப்பட்ட ஷை பரமத்தி சபையின் அன்பருள் ஒருவரான பிரம்மஸ்ரீ வெங்கட்டராமய்யரவர்கள் விருப்பத்திற்கிணங்கி எழுதவேண்டிய கடமை மகிமையாப்பியமுள்ள சரீரபாணி க்ரியத்திற்கு அமைந்திருக்கிறது.

ஆத்மதான ஞானவூழியம்.

இப்படிக்கு,
ஞானானந்தர்,
ஆசானருளிய பெயர்.

ஸ்ரீ தத்தாத்திரேய பரம்பரை
[illegible] இராமானந்த சாதுசங்க சபை,
பரமத்தி, சேலம் ஜில்லா.

ஓம் தத் ஸத். 5—8—1944.

ஸ்ரீ [illegible] பிரஸ், முசிறி.

சிதம்பரம், ஸ்ரீ நந்தனர் கல்விக் கழகம்

நான்காவது ஆண்டு

## மத வார விழா அழைப்பு.

சிந்தனை ஞான சக்தி சீரிய துரிய யோகம்
புந்தியிற் பூரண ஜோதி புகன்றிடும் பரமாசார்யன்
வந்தித வேங்கடேச மாதவன் வைபவத்தை
நந்தனர் மடத்திற் சுவாமி நவிலுவர் நாடுவீரே.

பாரதநாட்டு சகோதர சகோதரிகளே! பக்தர்களே!!

நிகழும் தாரணஹு புரட்டாசிமீ 19உ (4-10-'44) புதன்கிழமை மாலை 7-மணிக்கு

சிதம்பரம் ஓமக்குளம், ஸ்ரீ நந்தனர் பாடசாலையில்

"மத வார விழா" ஆரம்பிக்கப்படும்.

ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ அவர்கள்

அக்கிராசனம் வகிப்பதோடு,

"ஸ்ரீ வேங்கடேஸ்வரர் மஹாத்மியம்"

என்னும் பொருள்பற்றி அரிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

சில வித்துவான்கள் அரிய சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

டி விழாவை சிதம்பரம் ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸர்,

**மகா-ா-ா-ஸ்ரீ S. வெங்கட்டராமய்யர் B.A. அவர்கள்**

அன்புடன் திறந்துவைப்பதாக இசைந்துள்ளார்.

சமயப் பற்றுதலுடைய அனைவரும் வரும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம்,
3—10—'44

A. S. சகஜானந்தா, M. L. A.,
நந்தனர் மடம்.

ஜோதி பிரஸ், சிதம்பரம்.



சிதம்பரம்

ஸ்ரீ நந்தனர் கல்விக்கழகம்

நான்காவது ஆண்டு

## மதவார விழா அழைப்பு

இரண்டாம் நாள்.

நிகழும் தாரணஹு புரட்டாசிமீ 20உ (5—10—'44)

வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு

சிதம்பரம் ஓமகுளம் நந்தனர் பாடசாலையில்

ஸ்ரீலஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ

அவர்கள் தலைமையில் நடைபெறும்.

ஸ்ரீ பரமாத்மாஜீ அவர்கள்

இராமாயண இரகசியங்களைப்பற்றியும்,

ஸ்ரீமான் C. N. தண்டபாணிப் பிள்ளை அவர்கள்

"சிவஞானபோதம்" என்னும் பொருள்பற்றியும்

சொற்பொழிவாற்றுவார்கள்.

மற்றும் அநேகரும் சொற்பொழிவாற்றுவார்கள்.

அன்பர்கள் அனைவரும் வரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிதம்பரம்.
5—10—'44

A. S. சகஜானந்தம், M. L. A.
நந்தனர் மடம்.

ஜோதி பிரஸ், சிதம்பரம்.

## திருப்பதி விஜயம்

சுற்றுப் பிராயண அறிக்கையின் பிரகாரம் ஸ்ரீ ஸ்வாமிகள் திருப்பதியில் முகாமிட்டிருந்த சமயம் 1945 ஜனவரி மாதம் இன்ப அதிர்ச்சியாக ஒரு தபால் கிடைக்கப் பெற்றோம். அதில் ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் குடும்பத்தினரை திருப்பதிக்கு வருமாறு அன்பு கட்டளையிட்டு அதற்குத் தேவையான பயணக் கட்டணத்தையும் அனுப்பியிருந்தார்.

முதல் தவணையாக நானும் என் தமக்கையும் என் அத்தையுடன் பொங்கல் விடுமுறையில் திருப்பதிக்குச் சென்றோம். அங்கு ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் குமாரதாராவில் ப்ரத்யக்ஷமானதை புகைப்படமெடுத்த போட்டோகிராபரையும் மற்றும் திரு. பாவாடை என்ற ஜோசியரையும் சந்திக்க நேர்ந்தது. அப்புகைப்படக்காரருடன் அளவளாவிக் கொண்டிருந்த சமயம் சில அரிய புகைப்படங் களை காண்பித்தார். அதில் ஒன்று அவ்வருட ஸ்ரீ ஸ்வாமி களின் 51ஆவது ஜெயந்தி விழாவின் வைபவத்தையொட்டி எடுக்கப்பட்டது. அதுவே அவரது ஜீவிய பர்யந்தத்தில் கடைசி ஜெயந்தி விழாவாக அமைந்தது. திருப்பதியில் தான் தங்கி யிருந்த வீட்டுப் படிகளின் முன்பு ஒற்றை மாலையும் குல்லா யும் அணிந்து திவ்விய சிரசின் மேல் நித்திய மல்லிகை புஷ்பித்த கொடிகள் சாமரம் வீச அவர்தம் வலது புறம் வேயப் பட்ட பந்தலின் தூண் காணப்பட என் கண் முன் அக்காட்சி இன்றும் நிழலாடுகிறது. அப்புகைப்படம் இங்கே பிரசுரிக்கப் பட்டுள்ளது.

பிறகு என் பெற்றோரும் சகோதரர்களும் திருப்பதி சென்று ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசித்தனர்.





## 1945, ஏப்ரல்
## வேங்கடரங்கப் பிள்ளைத் தெரு
## எங்கள் இல்லத்திற்கு ஸ்வாமிகளின் வருகை

1945 வருடம் ஏப்ரல் மாத இறுதியில் ஸ்ரீ ஸ்வாமிகள் திரு. இராமானுஜம் என்ற அணுக்கத் தொண்டரின் மூலம் எங்களுக்கு ஒரு கடிதம் கொடுத்தனுப்பினார். அதில் கண்ட ஒரே வாக்கியம், "நான் உங்கள் இல்லத்தில் வந்து தங்க போகிறேன்". இதனைக் கண்ணுற்ற எனது தந்தையார் ஸ்ரீ ஸ்வாமிகளையும் அவரது பரிவாரங்களையும் சிறிய எளிய எங்கள் இல்லத்தில் எவ்வாறு தகுந்த முறையில் கௌரவமாக உபசரிப்பது என்று தடுமாறினார். ஆயின் திரு. இராமானுஜம் 'இது சிவாவின் ஆக்ஞை. இதில் உங்களுக்கு ஏன் பொறுப்பு. எல்லாம் ஸ்ரீ குருநாதரின் செயல்'' எனக் கூறிவிட்டு புன்முறுவலுடன் சென்று விட்டார்.

இதற்கு சரியாக ஒரு வாரம் கழித்து, ஸ்ரீ ஸ்வாமிகள் அனுப்பிய மற்றொரு துண்டு சீட்டில், "மனமிருந்தால் மார்க்க முண்டு - பரமாத்மாஜீ" என்று எழுதியிருந்தது. சுமார் இரண்டு



ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கியிருந்த வீட்டின் இன்றைய தோற்றம்






இல்லத்தின் தோற்றம்



அம்மாவின் சமையலறை

மணி நேரத்திற்குள்ளாக ஒரு மோட்டார் வாகனத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள் தனது பரிவாரங்களுடன் எங்களது இல்லத் திற்கு திடீர் பிரவேசம் செய்தார். ஸ்ரீ ஸ்வாமிகளின் வருகை எங்கள் எல்லோர் வாழ்க்கையிலும் மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு திருப்பு முனையாக அமைந்தது என்பதனை அப்போது நாங்கள் சிறிதளவும் உணரவில்லை.

## இல்லம் ஆலயமானது

ஸ்ரீ ஸ்வாமிகளை எவ்வாறு வரவேற்பது, உபசரிப்பது, தங்க வைப்பது என்பதை செய்வதறியாது நாங்கள் திகைத்த போது திரு. இராமானுஜம் எங்கள் வீட்டின் மாடிப் பகுதியை ஸ்ரீ ஸ்வாமிகள் தங்குவதற்கேற்றவாறு வெகு விரைவில் திறம்பட அமைத்தார். தேவையான இடத்தில் ப்ரத்யேகமான முறையில் காவி துணியினால் தடுப்புகள் வைத்தார். ஸ்ரீ ஸ்வாமிகளின் பொருட்கள் வெளியில் தெரியாதவாறு கிடைத்த சிறிய இடத்திலும் கச்சிதமாகவும், நேர்த்தியாகவும் காஷாய திரை சீலைகளால் மூடி அடுக்கினார்.

ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லத்தின் மாடியில் தங்கிய போது எனது குடும்பத்தார்கள் எட்டு பேரும் ஒரு சிறிது



தாத்தாவின் அறை (இன்று)




பாதிப்பும், பிரச்னையும் இன்றி கீழேயுள்ள ஒரு சிறிய அறையும், சமையலறையும் கொண்ட இடத்தில் மகிழ்வோடு நிம்மதியாக தங்கியிருந்தோம். மாடியில் இருந்த மூன்று அறை களில் முன்னதாக இருந்ததில் வந்திருக்கும் பக்தர்கள் உட்கார்ந்து தரிசிக்கவும், அதைத் தொடர்ந்த அடுத்த அறையில் ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களுடன் அளவளாவுவதற்கும், பூஜைகள் நடத்துவதற்கும் மற்றும் அதையொட்டிய மற்றோர் அறையில் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கான பிரத்யேக உபயோகத்திற்கு மாக ஒதுக்கப்பட்டது.




ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களுக்கு தரிசனம் அளித்த அறை (இன்று)

ஸ்ரீ ஸ்வாமிகள் எப்போதும் இருகைகள் கொண்ட ஒரு சாய்வு நாற்காலியை உபயோகிப்பது வழக்கம். அக்கைகள் விரிக்கவும், சேர்க்கவும் வல்ல அமைப்புள்ளதாகும். அது அவர் எழுதுவதற்கும் மற்றும் அன்றாட உபன்யாசத்தின்போது இடையிடையே இசைக்கப்படும் பாடல்களின் பொருட்டு ஸ்ருதி மீட்ட உபயோகிக்கும் ஆர்மோனியத்தை வைப்பதற் கும் ஏதுவாக அமைந்தது. இந்த பழமையான, அரிய சாய்வு



ஸ்ரீ ஸ்வாமிகளின் பிரத்யேக அறை (இன்று)



ஸ்ரீ ஸ்வாமிகள் பயன்படுத்திய பெட்டி மற்றும் ஆர்மோனியம்





ஸ்ரீ ஸ்வாமிகள் அமரும் சாய்வு நாற்காலி


நாற்காலியை இன்றும் மேல்மாயில் ஆசிரமத்தில் காணலாம்.



பக்தர்கள் அமரும் இடம் (இன்று)



ஸ்ரீ ஸ்வாமிகள் பயன்படுத்திய தண்டம்



ஸ்ரீ ஸ்வாமிகளின் குல்லாய்



நாற்காலியையொட்டி பக்கவாட்டில் ஒரு சிறு மேஜையில் அவருக்குத் தேவையான பேனா, நோட்டுப் புத்தகங்கள், கடிகாரம், திருவோடு, கமண்டலம், தண்டம் போன்றவைகள் காணப்படும். ஸ்ரீ ஸ்வாமிகளிடம் இரு வகையான கமண்டலங்கள் இருந்தன. ஒன்று பொதுவாக எங்கும் காணப்படும் அமைப்புடையது. மற்றொன்று பஞ்ச லோகத்தினால் செய்யப்பட்டது. நான் எங்கேயுமே பார்த்திராத மிகவும் நூதனமான வேலைப்பாடமைந்த இயற்கை காட்சிகளை சித்தரிக்கும் வகையில் அதீத ப்ரகாசத்துடன்ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு இணையாக போட்டிப் போட்டு ஜ்வலித்துக் கொண்டிருந்தது.

சற்றுத் தள்ளி சுவற்றினை ஒட்டினாற்போல் மற்றோர் உயரமான தனி மேஜையில் ஸ்ரீ வேங்கடேஸ்வர விக்ரஹம் புஷ்ப அலங்காரத்துடன் வைக்கப்பட்டிருக்கும்.

வந்த அன்றே என்னை கவனித்த ஸ்ரீ ஸ்வாமிகள் நான் உடல் நலன் குன்றி காணப்பட்டதாகவும், கையைப்பிடித்து கணச்சூடாக இருக்கும் என்றும் கூறினார். பிறகு, இராமானுஜத்தின் மூலம் சில மூலிகைகளை தருவித்து அதனை சூர்ணமாக செய்து அவர் பொறுப்பில் ஒரு மண்டலம் என்னை உட்கொள்ளச் செய்தார். இதுநாள் முதல் தொடர்ந்து எழுபது நாட்கள் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்து அதனை ஒரு ஆலயமாக மாற்றி எங்கள் இதயத்தில் ஞான தீபமேற்றி வைத்தார் ஸ்ரீ ஸ்வாமிகள்.


### அன்றாட நிகழ்ச்சிகள்

தன்னுடைய உயரிய நிலையை வெளிக்காட்டாதவராக மக்களோடு மக்களாய் பாமரராய் எளிதாக கலந்து பழகியவர் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள்.

காலை 7.30 மணிக்கு அவர் தனித்தனியே பக்தர்களை நேரில் கண்டு அளவளாவும் தரிசன நேரம் ஆரம்பமாகும்.



ஸ்ரீ ஸ்வாமிகள் பயன்படுத்திய கமண்டலம்



ஸ்ரீ ஸ்வாமிகள் பயன்படுத்திய திருவோடு





ஸ்ரீ ஸ்வாமிகள் பூஜித்த ஸ்ரீ வேங்கடேஸ்வர விக்ரஹம்

இச்சந்திப்பு மதியம் 12.30 மணி வரை நீடிக்கும். வந்திருக்கும் அனைத்து அன்பர்களின் தேவைக்கு ஏற்றவாறு என் தாயார் தாக சாந்தியோ, காலை நேரமாகில் சிற்றுண்டியோ, மதிய நேரத்தில் உணவோ அளித்து உபசரித்து அனுப்புவார்கள். அன்றாட கிரமமாகிய ஸ்ரீ அதர்வசீர்ஷ கவச பாராயணமும், ஸ்ரீ வேங்கடேஸ்வர விக்ரஹ ஆராதனையும், ஸ்ரீ விலக்ஷணானந்த அஷ்டோத்திரம் மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பாத ஸேவையும், பூர்த்தியாக ஸ்ரீ வேங்கடேஸ்வரர் மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு மங்கள ஆரத்தியும் காண்பிக்கப்படும். தொடர்ந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் பல்வேறு தலைப்புகளில் உபன்யாசமும், பக்தர்களின் சந்தேகம் தெளிவிப்பது போன்ற நிகழ்ச்சிகள் இரவு 10.30 மணி வரை நடைபெறும். இரவு நேர உணவு உபசரிப்பு இரவு 8 மணியிலிருந்து ஆரம்பித்து நிகழ்ச்சி நிறைவுபெறும் வரை தொடரும். எளிய வருவாய் ஈட்டிய எங்கள் குடும்பம் எவ்வாறு இத்துணை பெரிய பொறுப்புகளை சமாளித்தது என்றால் அது குருவின் அருளே என்பது திண்ணம்.

நம்மிடையே சகஜமாக ஸ்ரீ ஸ்வாமிகள் வாழ்ந்தாலும் மானிடருக்கு உரியதாகிய சில அடிப்படை தேவைகளும், உபாதைகளையும் அவரிடம் நாங்கள் கவனித்ததேயில்லை என்பது குறிப்பிடத்தக்கதொன்று. அதனுடைய சூட்சுமம் அறியவொண்ணாதது. சாதாரண மனிதரைப்போல் உணவு உட்கொண்டதில்லை, தண்ணீரும் அருந்தியதில்லை. இயற்கை அழைப்புகளும் இதில் அடங்கியவை. ஒரு தினத்தில் இருவேளையும் அதிகபட்சமாக அரை கோப்பை வாதுமை, கற்கண்டு கலந்த பால் மட்டுமே அருந்துவார். மதிய உணவிற்கு அவர் உட்காரும் மணையின் முன் இலையில் அன்று சமைத்த எல்லா பதார்த்தங்களும், அன்னத்துடன் நெய்யோ அல்லது வெண்ணையுடனும், சர்க்கரை மற்றும் வாழைப்பழ துண்டுகளுடன் பரிமாறப்படும். ஸ்ரீ ஸ்வாமிகள் பக்தர்களின் திருப்திக்காக மணையில் அமர்ந்து ஒரு



வாழைப்பழத்துண்டுடன் சிறிது அன்னம், நெய் மற்றும் சர்க்கரை கலந்து ஒரே ஒரு தேக்கரண்டி எடுத்துண்பார். பிறகு இலையில் பரிமாறப்பட்ட அனைத்து வகைகளையும் கலந்து பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டுவிடும்.

இரவு அனைவரும் விடைபெற்று சென்றவுடன் தினந் தோறும் நடந்த ஒரு நிகழ்ச்சி குரு பக்தியின் ஆழத்தை காண்பிப்பதொன்று. செல்வத்தின் உச்சத்தில் திளைத்த திரு. சிவராமையாவிற்கும் ஏதுமே இல்லாத திரு. இராமானு ஜத்திற்கும் நிலவிய நட்பு ஆன்மீகமானது. சொல்லில் வருணிக்க முடியா ஆச்சரியமானது; அற்புதமானது. இரவு 11 மணியளவில் எங்கள் வீட்டு வாயிலின் வெளியே உள்ள நடைபாதையை இராமானுஜம் அவர்கள் சுத்தமாக பெருக்கி ஒரு கோரைப் பாயை விரிப்பார், கையையே தலையணையாக வைத்து இருவரும் அருகருகாக படுத்துக் கொண்டு தூங்கா மல் ஸ்ரீ ஸ்வாமிகள் பற்றியும் அவரது பெருமைகளைப்பற்றி யும் மட்டுமே மனமுருகி மகிழ்ந்து அளவளாவுவர். உடலள வில் ஏற்பட்ட அசதியால் தன்னை மறந்தால் மட்டுமே தூங்குவார்கள்.

எங்களுடன் தங்கியிருந்த 70 நாட்களும் ஸ்ரீ ஸ்வாமிகள் ஆஸ்துமாவின் அவதியினால் மாடி ஏற முடியாத எனது அத்தை திருமதி அனந்தலக்ஷ்மி அவர்களை கீழே இறங்கி வந்து பார்த்து, விபூதி ப்ரஸாதம் அளித்து சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுச் சென்ற கருணையை இன்றளவும் மறக்க இயலாது. எனது அத்தையின் ஆன்மீக நிலையினை விளக்குமுகமாக நடந்த ஒரு சம்பவமும் நினைவு கூறலாம்.

**வினோத காட்சி**

ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லத்திலிருந்து தான் எப்போது கிளம்பப் போகிறோம் என்பதைப் பற்றி எந்த அறிவிப்பையும் கூறவில்லை. அவர் புறப்படுவதற்கு ஒரு வாரம் முன்பாக என்

அத்தை காலை 5 மணியளவில் ஒரு அமானுஷ்யமான காட்சி யினைக் கண்டதாக ஸ்ரீ ஸ்வாமிகளின் வழக்கமான வருகை யின்போது தெரிவித்தார்கள். அது, தான் ஒரு வினோதமான காட்சியில் இந்திரன், அஷ்டதிக் பாலகர்கள் முதலிய தேவர்கள் சூழ ஸ்ரீ ஸ்வாமிகளின் இடம் நோக்கி செல்வதையும். அத்தை அவர்களை என்னவென்று விசாரிக்க, அதற்கு ஸ்ரீ ஸ்வாமிகள் திரும்பும் நேரம் வந்து விட்டதால் அவரை நினைவுறுத்தவே வந்ததாகவும் பதிலளித்தார்கள். அதன் பொருள் என்னவென ஸ்ரீ ஸ்வாமிகளை வினவியதற்கு சிரிப்பையே பதிலாக தந்து மழுப்பினார்.

ஜூலை மாதம் திடீரென்று சித்தர்களின் க்ஷணச் சித்தம், க்ஷணப் பித்தம் என்ற பழமொழியை ஒட்டி எங்கள் இல்லத்தி லிருந்து எந்தவித முன்னறிவிப்புமின்றி புறப்பட்டு விட்டார். கட்டை வண்டியில் ஏற்றிய சாமான்கள் கட்டிலிருந்து நழுவி விழுந்தபோது சகுனத் தடையோ என திரு. இராமானுஜம் ஐயுற துறவிக்கும் சகுனத்திற்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என தீரமாக மொழிந்து எங்கள் இல்லத்திலிருந்து கிளம்பினார். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பிருந்தா வனத்தை விட்டுச் சென்ற போது வ்ரஜ பூமி மக்கள் அடைந்த துன்பத்தினை அனுபவ பூர்வமாக நாங்களும் உணர்ந்தோம்.

## எங்கள் குடும்பமும் ஸ்ரீ ஸ்வாமிகளும்

இதனை இங்கு கொடுப்பதற்கான காரணம், எளிமையாக வும் சராசரி மனிதர்களாகவும் இருந்த எங்களை வாழ்வின் குறிக்கோளை உணர வைக்க எவ்வாறு அன்றாட சிறுசிறு செயல்களிலிருந்து பெரிய உண்மைகளை ஸ்ரீ ஸ்வாமிகள் புரிய வைத்தாரென்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ளவே. ஸ்ரீ ஸ்வாமிகளை தாங்களும் சூட்சுமமாக உணர்ந்து இறை நிலையில் கலக்கவே இந்த நிகழ்ச்சிகள் விவரிக்கப்படு கின்றன. ஏனெனில் உருவங்கள் வெறும் கூடு மட்டுமே.



உள்ளுறையும் ஆன்மாக்கள் அனைத்துமே பேதமின்றி ஒன்றுதான். ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் குடும்பத்தாரிடம் காண்பித்த கனிவும் அன்பும் அளவிட இயலாதது. அனைத்து அங்கத்தினரிடமும் தனித்தனியே அவர் காட்டிய பரிவு மற்றும் கருணையின் முக்கியத்துவம் பின்வரும் சம்பவங்களில் காணலாம்.

## எனது பாட்டனார்

1943-44 ஆண்டுகளில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஆரி முத்தாச்சாரி தெருவில் தங்கியிருந்தபோது வயோதிகம் மற்றும் நோயின் காரணமாக சென்று தரிசிக்க இயலாத நிலையில் இருந்த என் தந்தை வழிப்பாட்டனார் திரு. சிவசுப்ரமண்ய ஐயர் கேட்டுக் கொண்டபோதெல்லாம் ஸ்ரீ ஸ்வாமிகள் நேரில் வந்து பார்த்து விட்டு செல்வதுண்டு. இரவு அலுவல்களுக்குப் பிறகு சுமார் 10.30 மணியளவில் திரு. இராமானுஜம் லாந்தர் ஏந்தி வர நாங்களும் உடன்வர ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லம் வந்து பாட்டனாருடன் உட்கார்ந்து நலம் விசாரித்து. சற்று நேரம் பேசிவிட்டு செல்வார். அவ்வமயம் என் தாயார் நமது பண்பாட்டுக்கிணங்க ஸ்ரீ ஸ்வாமிகள் அருந்த பால் வழங்கு வது வழக்கம். வாழ்வின் அந்திம காலத்தில் இருந்த என் பாட்டனாருக்கு வலிய வந்து அளித்த பரமாத்ம தரிசனம் அவர் செய்த பாக்கியமே.

## என் அத்தை

அடுத்ததாக குறிப்பிடப்போவது என் வாழ்க்கையில் மிக முக்கியமானவர். சிறு வயதிலிருந்தே புராணங்கள், இதிகாசங்கள் மூலம் எங்களை ஆன்மீகப் பாதையில் நாட்டம் கொள்ளத் தூண்டியவர். அவரே எனது முதல் குருவாகிய எனது அத்தை திருமதி அனந்தலக்ஷ்மி அம்மாள். 1942களில் வெளியில் அதிகம் புழங்காத அவர் 1943 முதல் 1945 வரை



திருமதி அனந்தலக்ஷ்மி அம்மாள்

ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அளவிறந்த ஈடுபாடும், பக்தியும் கொண்டு அவரின் தனிப்பட்ட அருளையும் பெற்றவர். பல தலைமுறை களாக தேவி உபாஸகர்களின் வழியில் வந்ததால் ஸ்ரீ அம்பாளின் கடாட்சம் சியாமளையின் ரூபத்தில் அத்தைக்கு சித்தித்தது. இதனைப்போலவே ஸ்ரீ ஸ்வாமிகளும் சூட்சுமமாக என் அத்தையிடம் தொடர்பு கொள்வதும் உண்டு. எங்கள் இல்லத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளுக் கும் ஸ்ரீ ஸ்வாமிகள் அவரது ஜீவ சமாதியிலிருந்து அத்தை மூலமாக அனுக்ஞை அளித்து வந்தார். என் வாழ்க்கைத் துணை அமைந்ததும் அவர் கட்டளையின்பேரில்தான்.

தனிப்பட்ட முறையில் அவள் எங்கள் இல்லத்திலேயே வசித்த துறவியாவாள். அவள் இரவு தூங்காமல் தூங்குவது வழக்கம். வம்பு பேச்சு, அனாவசிய விஷயங்களில் நேரத்தை செலவிடாது எப்போதும் ஆன்ம விசாரத்திலேயே இருந்தாள்.

## என் பெற்றோர்

ஸ்ரீ ஸ்வாமிகளின் மாலை நேர பூஜையின் போது என் தாயும் தந்தையும் நிகழ்ச்சி ஆரம்பம் முதல் முடிவு வரை ஸ்ரீ





எனது தந்தையார்
திரு. அனந்தசுப்ரமண்ய ஐயர்



எனது தாயார்
திருமதி நாகலக்ஷ்மி அம்மாள்


ஸ்வாமிகளின் இருபுறமும் நின்றுகொண்டே விசிறியால் விசிறுவதை தங்களது தலையாயக் கடமையாகக் கொண்டனர்.

ஸ்ரீ ஸ்வாமிகள் என் தந்தையை நேருக்கு நேர் கண் களால் பார்ப்பதை தவிர்த்துவிடுவார். இருவரும் நெருங்கி பேசு வதும் பழகுவதும் இல்லை. இதற்கான காரணத்தை பிறகு என் அத்தையின் மூலம் அறிய நேர்ந்தது. ஸ்ரீ ஸ்வாமிகள், 'நான் அனந்தசுப்ரமண்ய ஐயரை நேராக கண் கொண்டு பார்த் தால் அக்ஷணமே அவர் துறவு பூண நேரிடும். ஆகையால், அது தவிர்க்கப்பட வேண்டியது' என்றாராம். ஆயினும் ஸ்ரீ ஸ்வாமிகளின் விதேக கைவல்யத்திற்குப் பிறகு இந்நிகழ்ச்சி உண்மையானது.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஆரி முத்தாச்சாரி தெருவில் இருந்த போது ஒருமுறை விடாமல் பெய்த மழையால் எங்கள் வீட்டி னருகில் உள்ள அயோத்தியா குப்பத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் ஜனங்கள் அவதியுறுவதைக் கண்டு மனமிளகி ஸ்ரீ ஸ்வாமிகளிடம் என் தாயார் அழுது புலம்பினார். என் தாயின் இரக்க மனதைப் புரிந்து கொண்ட ஸ்ரீ ஸ்வாமிகள் அவளின்

உண்மையான தன்னலமற்ற கோரிக்கையை நிறைவேற்றி வைக்க மழை நிற்கும் பொருட்டு ஒரு செய்யுளை உடனடியாக இயற்றிக் கொடுத்தார். அதை அவள் படிக்க சிறிது நேரத் திலேயே அதிசயிக்கும்படியாக மழையும் நின்றது. இதன் காரணமாக அவள் அளப்பறிய மகிழ்ச்சி அடைந்ததை இப்போதும் நினைவுகூற முடிகிறது.

தினந்தோறும் ஸ்ரீமத் பகவத் கீதை உபன்யாஸம் நடை பெற்றபோது என் தாயார் அதை பாராயணம் செய்வதற்கு ஸ்ரீ ஸ்வாமிகளிடம் விண்ணப்பிக்க அவர் அதை கைப் பிரதியாக எழுதிக் கொடுத்ததை நாம் 2009 ஆண்டு ஜெயந்தி விழாவில் 'பகவத்கீதை தாலாட்டு' என்ற புத்தகமாக வெளி யிட்டிருக்கிறோம்.



எனது தாயார் பூஜித்து வந்த ஸ்ரீ ஸ்வாமிகளின் தோல் பாதுகைகள்



## என் தமக்கை

1945ஆம் வருடம் சித்திரை மாதம் ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லத்தில் இருந்தபோது என் தமக்கை ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி பள்ளியிறுதி தேர்வில் முதல் மாணவியாக தேர்ச்சி பெற்ற போதிலும் குடும்ப சூழ்நிலை காரணமாக மேற் கொண்டு படிப்பை தொடர வழியில்லாததால் என் தந்தை அதைப் பற்றி யோசிக்காமல் இருந்தார். இதையறிந்த ஸ்ரீ ஸ்வாமிகள் என் தமக்கையின் பொருட்டு ஐம்பது பைசாவை இண்டர்மீடியட் படிப்பின் விண்ணப்பப் படிவத்திற்கும் மற்றும் ஐந்து ரூபாய்க்கு ஒரு பேனாவையும் வழங்கி எங்கள் இருவரின் மருத்துவ படிப்பிற்கும் அடிகோலினார்.



என் தமக்கை திருமதி அனந்தலக்ஷ்மி

## அடியேனிடம் அனுக்ரஹம்

ஸ்ரீ ஸ்வாமிகளிடம் சிறுமியாகவே என்னையறியாமல் நான் கொண்டிருந்த பக்தி கலந்த அன்பை வெளிக்கொணரும் வகையில் நடந்த ஒரு சம்பவம். ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லத்தில் தங்கியிருந்தபோது ஒருநாள் நான் புழக்கடை முற்றத்தை சுத்தம் செய்தபோது கால் வழுக்கி இடக்குமடக்

காக விழுந்து எழுந்திருக்க இயலாது தவித்தபோது சொல்லொணா வலியில் அழுது அரற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் ஒருவரே என்னை இக்கட்டிலிருந்து காப்பாற்ற வல்லவர் என்று குழந்தைக்குரிய பேதமையில் பிடிவாதம் பிடிக்க, அருளாளரும் அதற்கு மதிப்பு கொடுத்து கீழிறங்கி என்னை பெற்ற தந்தைபோல சமாதானம் செய்து ஆசுவாசப் படுத்தி இன்றுவரை என் மனதில் நீங்கா இடம் பிடிக்க அன்றே திருவுளம் கொண்டார்.

**என் இளைய சகோதரன்**

எனக்கடுத்த சகோதரன் அனந்தராமன். சிறுவயதில் சுட்டித் தனமும் ஆர்வமும், நிறைந்த சுமார் எட்டு வயது சிறு பையன். எந்தவிதமான சங்கோஜமும், தயக்கமுமின்றி குழந்தைகளுக்கே உரிய குறுகுறுப்போடு ஸ்ரீ ஸ்வாமிகளை கேள்விக் கணைகளால் துளைத்தெடுப்பான். இதனை வாசகர்கள் அவரின் குமாரதாரா யாத்திரையில் படித்திருப் பீர்கள். ஸ்ரீ ஸ்வாமிகளும் அதற்கு சளைக்காமல் சிறு பைய னென்று திரஸ்கரிக்காமல் பொறுமையுடன் பதிலளிப்பார். இனி திரு. அனந்தராமன் வாயிலாகவே அவரது சிறுவயது அனுபவங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

1942ஆம் ஆண்டு நான் 3வது வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஒருநாள் மாலை சுமார் 3.30 மணியளவில் வேங்கடரங்கன் பிள்ளை தெருவில் இருந்த எங்கள் வீட்டின் முன் ஒரு பெரிய டாக்சி வந்து நின்றது. அதில் விலக்ஷணானந்தர் என்று எழுதப்பட்டிருந்த ஒரு பெரிய டிரங்க் பெட்டி இருந்தது. அந்த டாக்சியிலிருந்து 5, 6 பேர் இறங்கி எங்கள் வீட்டிற்கு பக்கத்திலிருந்த நான்காவது வீடான 'டி' பிளாக்கிற்கு சென்றனர். 2, 3 நாட்கள் நான் உன்னிப்பாக கவனித்து வந்தேன். பலர் பலவித பழங்கள், பூக்கள், தின்பண்டங்கள் எல்லாம் எடுத்துக் கொண்டு 'டி' பிளாக்



கிற்குச் சென்றனர். நான் இதை என் அத்தை பாட்டியிடம் கூறினேன். நான்காவது நாள் மாலை சுமார் 5 மணி அளவில் காஷாயம் அணிந்த உயரமான ஒருவர் எங்கள் வீட்டுப் பகுதி யிலுள்ள மேல் மாடியில் நின்று கொண்டிருந்தார். நானும் என் அக்கா கிருஷ்ணாவும் அவரைப் பார்த்தோம். நான் அவரைப் பார்த்து, "நீ தானே சாமியார்" என்று ஒருமையில் கேட்டேன். அவரும் "ஆமாம்" என்றதுடன், "நீங்கள் வந்து என்னைப் பாருங்கள்" என்று அழைத்தார்.

ஒரு சனிக்கிழமை நான் என் அத்தைபாட்டியுடனும் அக்கா கிருஷ்ணாவுடனும் 'டி' பிளாக்கில் ஸ்வாமிஜியைச் சென்று பார்த்தோம். சுவாமிஜியின் முன்னால் பலவித பழங்கள் பூக்களுடன் லட்டு, மைசூர்பாகு, அல்வா போன்ற பல தின் பண்டங்கள் இருந்ததைப் பார்த்து எனக்கு ஒரே சந்தோஷ மானது.

சுவாமிஜி அங்கு வந்திருந்த எல்லோருக்கும் அவருடைய படமும், விபூதியும் வழங்கினார். நான் பேசாமல் இருந்தேன். அதைப் பார்த்த சுவாமிஜி, "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டார். நான் ஒன்றும் கூறவில்லை. ஆனால் சுவாமிஜி என் எண்ணத்தைப் புரிந்து கொண்டு "உனக்கு இதுதானே வேண்டும்" எனக் கூறி, நான் விரும்பிய ஒரு லட்டுவை எடுத்து என் கையில் கொடுத்து, "நாளைக்கு வருவாயா?" என்று கேட்டார். நான் அப்பொழுதும் பேச வில்லை. என் மனதைப் படித்து விட்ட அவர், "நாளைக்கும் லட்டு உண்டு" என்றார். உடனே நான், "நாளைக்கும் வருவேன்" என்றேன்.

சுவாமிஜிக்கு நான் விசிறி வீசுவேன். அவர் அதை மிகவும் ரசிப்பார். சில சமயம் விசிறி அவர்மேல் பலமாகப் பட்டுவிடுவதும் உண்டு. ஆனால் அவர் அதற்காகக் கோபப் படாமல் சிரித்துக் கொண்டேயிருப்பார். பலர் சுவாமிஜிக்கு மந்திரங்கள் சொல்லி பூஜை செய்தனர். எனக்கு ஒன்றும்

புரியவில்லை. ஆனால், பூஜை எப்போது முடியும்; லட்டு எப்போது வரும் என்று காத்திருப்பேன். எனக்கு லட்டுதான் முக்கியம். சுவாமிஜியுடன் நான் பரீட்சைப் பற்றி பேசுவேன். உடனே சுவாமிஜி, "பரீட்சைக்குப் போகுமுன் விபூதி வாங்கிச் செல்" என்று கூறுவார். நானும் பரிட்சைக்கு செல்லும் முன் சுவாமியிடம் சென்று விபூதி வாங்கிக் கொண்டு செல்வேன். என்னை அடிக்கடி விபூதி கொடுக்க அழைக்கும் போது, 'வாடா தாயாதி' என்று அழைப்பார். அவரும் பூர்வாஸ்ரமத்தில் கௌசிக கோத்திரமாகும்.

## ஆரிமுத்தாச்சாரி தெருவில் சுவாமி

சுவாமிஜியுடன் சடுகுடு போன்ற விளையாட்டுகள் பற்றியெல்லாம் பேசுவேன். அவரோடு தாயம் ஆடுவேன்; ஆனால் எப்பொழுதும் வெற்றி எனக்குத்தான். எனது பள்ளிக் கூடம் பற்றிக் கேட்பார். நான் பள்ளியில் படிக்கவில்லை என்று கூறுவேன். அது கேட்டு சுவாமிஜி சிரிப்பார். மாலை வேளை களில் நானும் சுவாமிஜியும் சுதேசமித்திரன் பத்திரிக்கை படிப் போம். சுவாமிஜி அதிலுள்ள முக்கியமான சில செய்திகளை யெல்லாம் சுருக்கமாகக் கூறி விளக்குவார்.

ஒருநாள் ஒரு பூனை சுவாமிஜியின் மேஜை மேலிருந்த கடிகாரத்தைக் கீழே தள்ளி உடைத்துவிட்டது. அடுத்த நாள் சுவாமிஜி ஒரு சாட்டை வாங்கிவரச் சொன்னார். நான்தான் அந்த சாட்டைக்கு இன்சார்ஜ். அதனால் அந்தப் பூனையைப் பலமுறை சாட்டையால் நான் அடித்தும் உள்ளேன்.

ஆரிமுத்தாச்சாரி தெருவில் இரவில் பெரிய பூஜை நடக்கும். முக்கியமாக வெள்ளிகிழமை போன்ற நாட்களில் இரவு 10 மணிவரைகூட பூஜை நடைபெறும். இரவு நேரம் அதிகமாவதால் பலருக்கு ஏற்படக் கூடிய அசௌகரியங் களைப் புரிந்து கொண்ட சுவாமிஜி பூஜையை 9 மணிக்குள் முடிக்க வேண்டுமென்று கூறினார்.



சுவாமிஜி ஆரிமுத்தாச்சாரி தெருவில் இருக்கும்போது தான் சிவராமையா என்ற மிகவும் படித்த பக்தரைப் பார்த்தேன். இவர்தான் சுவாமிஜிக்கு பூஜை செய்வார். பூஜையின் முடிவில் முதல் இனிப்பு பிரசாதம் எனக்குத்தான் கொடுக்கப்படும். இப்படியாக நானும் சுவாமிஜியும் நெருங்கிய நண்பர்களாகப் பழகி வந்தோம்.

## எங்கள் வீட்டில் (வி.ஆர். பிள்ளை தெரு) சுவாமிஜி

பலவித அசௌகரியங்களுக்கிடையில் சுவாமிஜி எங்கள் வீட்டில் சில காலம் தங்கியிருந்தார். எப்பொழுதும்போல இங்கும் பூஜை, உபநிஷத், விளையாட்டு, இனிப்பு எல்லாம் உண்டு.

## திருவள்ளூரில் ஸ்வாமிகள்

கடைசியாக நான் 6வது படிக்கும்போது காலாண்டு விடுமுறையில் நான் சுவாமிஜியுடன் இருந்தேன். அப்போது சுவாமிஜி எனக்கு முக்கியத்துவம் கொடுத்ததுடன் என்னிடம் தனிப்பட்ட அக்கறையும் கொண்டிருந்தார். சுவாமிஜிக்கு வருவோர் போவோர் பற்றி இராமானுஜம் என்பவர் செய்து கொண்டிருந்த கைங்கர்யத்தை நான் செய்தேன்.

சுவாமிஜி இயற்கை எய்திய பிறகு பெரம்பூர் செம்பியத் தில் சிவராமையா செய்த பூஜையில் நான் பங்கு கொண்டேன். அதுவே நான் பங்கு கொண்ட கடைசி பூஜையாகும்.


## சில முக்கிய சம்பவங்கள்

சுவாமிஜி எங்கள் வீட்டிற்கு வருவதற்கு முன் கீழ் திருப்பதியில் சில நாட்கள் இருந்தார். அப்பொழுது 'பாவாடை' என்ற ஒரு பக்தர் வந்தார். அவருக்கு ஜோதிடமும் தெரியும். பலவற்றைப்பற்றிக் கூறினார். முக்கியமாக சுவாமிஜியின் முடிவைப்பற்றி.

எனக்குச் சிறு வயதில் சரியாகப் பேச வராது; சுவாமிஜி பழனியிலிருந்து மூலிகைக் கலந்த பஞ்சாமிருதத்தை வரவழைத்து 48 நாட்கள் கொடுத்தார். சிறிது சிறிதாக எனது பேச்சில் முன்னேற்றம் தெரிந்தது.

நான் திருவள்ளூரில் இருக்கும்போது சுவாமிஜி ஒருநாள் காலையில், "நீ நன்றாக பேசுவாய்! நன்றாகப் படிப்பாய்!" என்றார். அவை என் வாழ்க்கையில் நடந்தேறியது.

**கடைக்குட்டி சகோதரன்**



திரு. ஆனந்தன்

என் கடைக்குட்டி சகோதரரான ஆனந்தனுக்கு அப்போது நான்கு வயது. ஸ்ரீ ஸ்வாமிகளுடனான அனுபவங் களை நினைத்தறிய முடியாவிட்டாலும் அவருடன் தாயக் கட்டம் விளையாடிய நிகழ்ச்சி மனதில் ஆழமாக பதிந்துள்ளது. தனக்கு சமமான தோழனாக அவரை விளையாட அழைத்த போது ஸ்ரீ ஸ்வாமிகள் அதற்கிணங்கி விளையாடி சிறு குழந்தையுடன் தோற்றதுபோல் நடித்து அவனை உற்சாகப் படுத்தியது கண்கொள்ளா காட்சியாகும். ஸ்ரீ வேங்கடேஸ



வரரின் அவதாரமான ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஆனந்தனுடன் தாயக் கட்டம் ஆடியது திருமலை ஆலய துவாரத்தில் நாம் காணும் சொக்கட்டான் சித்திரத்தை நினைவுப்படுத்துவதாக உள்ளது. இது அவன் அடைந்த பெரும் பேறே.

ஸ்ரீ ஸ்வாமிகளுடனான எங்கள் குடும்பத்தாரின் அனுபவம் கீழ்க்காணும் பாடலின் மூலம் நன்கு புலனாகும்.

*அழுந்தொரு மணைக்குமன்னை*
*அறிவிலா தோடியோடி*
*விழுந்தொறு மெடுக்குமப்பன்*
*விளையாடும் பொழுதிற்றோழன்*
*தொழுந்தொறுங் கார்க்குந்தெய்வம்*
*சொந்தமாயெடுப்போர்க் கெல்லாங்*
*குழந்தையிப் படியுலாவும்*
*குருநாதன் வாழி வாழி.*

## ஸ்ரீ ஸ்வாமிகளின் இறுதி தவம்

1945 வருடம் ஜூலை மாதம் ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கள் இல்லத்திலிருந்து கிளம்பி திருவள்ளூரில் தங்கியிருந்தார். 20-7-1945 அன்று ஸ்ரீ வீரராகவ பெருமாள் சந்நிதியின் முன் அமைந்த அகோபில மடத்தில் அவர் உபன்யாசம் செய்ததை யொட்டிய அழைப்பிதழை அடுத்தப் பக்கத்தில் காணலாம்.


இதற்கு பிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் தன் இறுதி தவத்தின் பொருட்டு குமாரதாராவிற்கு ஏகினார். இறுதி தவத்தின்போது ஸ்வாமிகளை நேரில் கண்டு தரிசிக்கும் பாக்கியம் பெற்ற ஸ்ரீ பாஷ்யத்திடம் தான் கடைசியாக எழுதிய பதினாறு பாசுரங் களை ஒப்புவித்தார். அதில் இரண்டு பாடல்கள்,

*ஆண்டவா ஸ்ரீனிவாஸா*
*அன்று ஏழ்மலைமேல் வாழும்*
*பூண்டமால் தேவிரூபா*
*புனிதனே எனது தேவே*
*மாண்டிடும் உலக ஆசை*
*மனத்தினை விட்டு ஏக*
*தாண்டவம் செய்வாய் உள்ளே*
*தற்பரானந்த வாழ்வே*

*குமாரதாரா வனத்திடையே*
*குறியாய் நினது திருவடியை*
*நமாதி யோகத்துள் நிறுத்தி*
*நாளே திங்கள் காலையிலே*
*உமாப தீசன் அயன் இந்திரன்*
*ஓரா மனதே கொண்டுனது*
*நமாதினிடையே செல்கிறேன்*
*நாதா பின்னோடு ரைவாயே.*

ஒரு மண்டலம் தவம் கூடியபின் ஸ்ரீ ஸ்வாமிகள் மீண்டும் திருவள்ளூர் திரும்பினார். செப்டம்பர் மாதம்





ஓம் :
ஸ்ரீராமஜெயம்,

**உபந்நியாஸ அழைப்புப் பத்திரிகை.**

*பரமாத்மாஜீ திருவள்ளூர்ப் பகவாலய முன்பாக*
*விரைவாய் வேங்கட வெம்பெருமான் விவித வைபவஞானமதைத்*
*தரமாயுரைப் பாரன்பர்களே ; தானே விஜய மாகிடுவீர்*
*கரையார் புதல்வன் காண்டிபன் காணு நின்ற கற்பகமே.*

சகோதரர்களே ! சகோதரிகளே ! அன்பர்களே !

**ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ.**

நாளது பார்த்திப வருஷம் ஆடி மீ 5உ (20—7—'45) வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி கோவிலுக்கு எதிரில் ஸ்ரீ அஹோபில மடத்தில், **ஸ்ரீ வெங்கடேஸ்வரவைபவம்** என்னும் விஷயமாய் உபந்யாஸம் செய் வார்கள். அனைவரும் விஜயம் செய்யவேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம் :
**திருவள்ளூர் பக்தர்கள்.**

'தமிழர்' அச்சகம், திருவள்ளூர்.

விடுமுறையின்போது நானும் என் அத்தையும் அவரை தரிசிக்கச் சென்றபோது பேரதிர்ச்சிக்கு உள்ளானோம். ஒளி பொருந்திய காந்ததேகம் கருத்து இளைத்து களை குன்றி உருமாறியிருந்தது. கண்டா நாதத்தினை ஒத்த அவரது கணீரென்ற குரல் மெலிந்து நலிவடைந்து இருந்தது. ஸ்ரீ ஸ்வாமிகள் ஆசீர்வதிக்கும் முகமாய் என் கைகளைத் தொட்ட போது அது தணலாய் கொதித்தது. சாதாரணமாக சிறிது நேரம் அளவளாவிவிட்டு உள்ளே சென்று விட்டார்.

**திரு. இராமானுஜத்தின் மறைவு**

திருவள்ளூரில் அவ்வீட்டுத் திண்ணையில் தன் நினை வற்று படுத்த படுக்கையாக திரு. இராமானுஜம் அடுத்த அதிர்ச்சியை அளித்தார். எத்தனை முறை அழைத்தும் எந்தவித சலனமும் இன்றி இருந்தவர், மதியம் ஸ்ரீ ஸ்வாமிகள் கீழிறங்கி அவர் பக்கத்தில் அமர்ந்து, 'இராமானுஜம்' என அழைக்க அக்ஷணமே தன்னையுமறியாமல் தீனமான குரலில் 'சிவா' என பதிலுறுத்தார். ஸ்ரீ ஸ்வாமிகள் பின் தன் திருக் கை யினால் அவர் வாயில் சிறிது பாலை வார்க்க அது தன்னிச்சை யாக உள் இறங்கியதை கண்டோம். ஸ்ரீ ஸ்வாமி களின் சிசுரூஷையை பெற்ற திரு. இராமானுஜம் இவ்வுலக வாழ்க்கையை 29.10.1945 அன்று நீத்து இறைவனோடு இணையற கலக்க ஸ்ரீ ஸ்வாமிகளாலேயே வழியனுப்பப் பட்டார்.

**ஸ்ரீ ஸ்வாமிகள் மஹா சமாதி**

எவ்வுள் என்று வினவிய ஸ்ரீமந் நாராயணனை இவ்வுள் என்று தன் இருப்பிடத்திலேயே இருத்திக் கொண்டார் சாலிஹோத்திர முனிவர். ஸ்ரீமந் வேங்கடேஸ்வரரின் அவதார அம்சமாகிய ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளும் தம் ஜீவனை சமாதி நிலையில் நிறுத்திய ஸ்தலம் திரு இவ்வூளூராகிய



திருவள்ளூர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுள்ளாகிய அனைத்து பக்தர்கள் உள்ளும் கலந்து நிற்கின்றார் என்பதே சத்தியம்.

1945 வருடம் நவம்பர் மாதம் 16ஆம் தேதி திருவள்ளூரிலிருந்து காலை 5 மணிக்கு தொலைபேசியில் வந்த தகவல் எங்களை நிலைகுலைய வைத்தது. அது ஸ்ரீ ஸ்வாமிகள் உலகத் தொடர்பு அற்றுப் போன நிலையில் படுத்திருந்ததைக் கண்டு அங்குள்ளவர்கள் கவலையுற்று தெரிவித்தார்கள். என் தந்தையும், திரு. சிவராம ஐயாவும் உடனே விரைந்து ஸ்ரீ ஸ்வாமிகளைக் கண்டு பதறி அவரை அவசர சிகிச்சை ஊர்தியின் மூலம் சென்னை பொது மருத்துவ மனைக்கு உடனே அழைத்து வந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளை பரிசோதித்த மருத்துவர்கள், மகான்களின் இந்நிலைமை சாதாரண மனிதனுக்கு அப்பாற்பட்டது என்றும் சிகிச்சைக்கு உட்படாதது என்றும் கூறி அனுமதிக்க மறுத்து விட்டார்கள். அவரை திரும்பவும் அதே ஊர்தியில் அழைத்து வரும் வழியி லேயே அவர் பூத உடலை நீத்ததனை அறிந்து செம்பியத்தில் வசித்த திருமதி சுந்தரியம்மாள் என்ற பக்தையின் இல்லத்தில் பக்தர்களின் இறுதி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். இரவு முழுவதும் பல்வேறு விசேஷ அபிஷேகங்கள், பூஜைகள் நடைபெற்றன. பக்தர்களும், அன்பர்களும் கனத்த மனத்துடனும், நனைந்த கண்களுட னும் தங்களின் புகலிடமாகவும், லோக ரட்சகராகவும் விளங்கிய திருவுருவை இனியெப்போதும் காண முடியாதென்கிற துக்கத்தினால் இறுதி பூஜைகளை சிரத்தையாக முறைப்படிச் செய்தனர்.

நம் வாழ்வில் ஓர் உன்னத குருவை ஸ்தூல தேகத்தில் இழப்பதென்பது ஒரு உண்மையான சீடனுக்கு துயரத்தை அப்போது தந்தாலும் மனத்தளவில் மிகப் பெரிய பாதிப்பினை தராது. ஏனெனில் குரு அவனின் ஆன்மாவில் கலந்து அவன் செய்யும் செயல்களனைத்திலும் பிரதிபலிக்கிறார். குருவின்

பிரிவென்பதை அவன் உணர்வதே இல்லை. ஆயின் கண்முன் குருவின் இயக்கமற்ற தேகம், மிகுந்த வருத்தத்தினையும் சொல்லொணா துயரத்தையும் அளிக்குமென்பதற்கிணங்க சிறு வயதானாலும் அந்நாளின் தாக்கத்தினை உணர்ந்தேன். வாழ் வில் பல்வேறு கட்டங்களைக் கடந்து வந்த என்னுள் அன்று ஐக்கியமான அவர் நினைவு ஒவ்வொரு பிராண வாயுவுடனும் கொழுந்து விட்டெரிகிறதோடல்லாமல் இப்பிறவியில் ஸ்ரீ ஸ்வாமிகள் சத்குருவாக அருளியதை எண்ணியெண்ணி தலையால் வணங்குகிறேன். குரு கிருபை என்ற அணையா ஜோதி அனைவரது இல்லங்களிலும் பிரகாசித்து அஞ்ஞான இருளகற்ற எல்லாம் வல்ல சத்குருவையே சரணடைகிறேன்.

ஸ்ரீ ஸ்வாமிகள் தான் இயற்றிய கற்பக விநாயகர் திருப்பதிகத்தில்

*அனவரத வேங்கடவனருள் பொழியு மருமகனே*
*கனமிகுந்த கணபதியே காருண்யரூப மறை*
*அனவரத வினாயகனே அழியாத பரம்பொருளே*
*நினையறியும் மேல்மாயில் நீள்காலம் முயல்வேனே.*

**"நினையறியும் மேல் மாயில் நீள்காலம் முயல்வேனே"** என்ற கூற்று உண்மையானதைப் போல் அவருடைய சமாதி கோயில் மேல் மாயிலில் அருள்மிகு கற்பக விநாயகரின் அருகிலேயே எழுப்பப்பட்டு இன்றளவும் பக்தர்களின் புகலிட மாக விளங்கி வருகின்றது.

## மண்டலாபிஷேகம் - மேல் மாயில்

சமாதி தினத்தின் மறுநாளிலிருந்து மண்டலாபிஷேக பூஜைகள் தொடங்கின. தினமும் காலையில் ஸ்ரீ ஸ்வாமி களுடைய ஸ்ரீ பாதுகைகள் மற்றும் ப்ரத்யேக உபகரணங் களான தண்டம், கமண்டலம், சித்திர படம் இவைகளை பக்தர்கள் மேளதாளத்துடன் மேல் மாயில் கிராம தெருக்களில்



ஊர்வலமாக சுற்றி வருவர். தொடர்ந்து அபிஷேக, அர்ச்சனை, ஆராதனைகளுக்குப் பின் பிரசாதம் வழங்கப்படும். பின் மாலையில் பக்தர்களும் அறிஞர்களும் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி சொற்பொழிவாற்றுவார்கள். பஜனை குழுக்களும் சங்கீர்த்தனம் இசைப்பதுண்டு. முதல் மண்டலாபிஷேகத்தின் பத்திரிகையினை இங்கே காணலாம்

ஓம்

தத்:  ஸத்:

ஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மனே நம:

பிரம்மஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்களின்

**மண்டலாபிஷேகப் பத்திரிகை.**

*தலத்து வடபத்திரமுந் தூயதிருப்பாற்கடலுந் துறந்தேயன்பர்*
*கலக்குமுள வஞ்ஞான விருளகற்ற ஞானநிலாகாலுந் தோற்றித்*
*தலக்குளிருந் திருமாலாம் விலக்ஷணாநந்த நிருசலசமேபோல்*
*...வுக திருவடியைச்சாஷ்டாங்கமாய்ப் பணிந்து காலுய்ந்தேனே.*

பிரம்மஸ்ரீ விலக்ஷணாநந்த பரமாத்மாஜீ அவர்கள் காளது பார்த்திப வருஷம் கார்த்திகைமீ 1௳ (16—11—45) வெள்ளிக்கிழமை சுக்லபக்ஷம் ஏகாதசி திதி உத்திரட்டாதி நக்ஷத்திரக்கூடிய சுபதினத்தில் காலை 7-20-மணிக்கு (சென்னையில்) விதேகமுக்தியடைந்தார்கள். அவரது திவ்ய திருமேனியை மறுநாள் 2௳ (17—11—45) சனிக்கிழமை விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு சமீபமுள்ள மேல்மாயில் கிராமத்தில் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தில் சாஸ்த்ரோக்தமாக சமாதி செய்விக்கப்பட்டது அன்று முதல் நித்திய பூஜா விதிகளும் முறைப்படி நடந்து வருகின்றன 48-ம் நாளாகிய காளது பார்த்திப வருஷம் மார்கழிமீ 21௳ (4—1—1946) வெள்ளிக்கிழமை மண்டலாபிஷேகப் பூர்த்தி வைபவமும் மஹேஸ்வர பூஜையும் ஏழைகளுக்கு உணவளித்தலும் நடத்த இறைவன் திருவருளை முன்னிட்டு நிச்சயித்திருக்கிறபடியால் அன்பர்கள் அனைவரும் விஜயம்செய்து இத் தெய்வீக வைபவத்தை சிறப்பாக நடத்தி ஸ்ரீபரமாத்மாஜீயின் பேரருளுக்குப் பாத்திரர்களாக வேண்டுமென கேட்டு கொள்ளுகிறோம்.

மேல்மாயில், 25-11—1945.

இங்ஙனம்,
ஸ்ரீ நித்யானந்த ஆஸ்ரம ஸ்ரீ விலக்ஷணாநந்த சாது சங்க சபையார்.

மேல்மாயில் கிராமம்:—காட்பாடிக்கு மேற்கு விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து 3-மைல் தூரத்திலுள்ளது. காட்பாடியிலிருந்து விரிஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு பஸ் வசதியும் உண்டு

ஸ்ரீ நளாக ஸ்வாமிஜீ அவர்களுக்குத் தொண்டாற்றிவந்த சாது ஸ்ரீ ராமாநுஜ ஸ்வாமி திருவள்ளூரில் 29—10—45-ல் பரமஜோதி கண்டறக்கலந்தார்.

ஸ்ரீ சாரதா அச்சக்கூடம்,—வேலூர்.


## மேல் மாயிலில் நடைபெறும் பூஜை விவரங்கள்

மேல் மாயிலில் ஸ்ரீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தில் நடைபெறும் தினசரி பூஜைகள் மற்றும் வருடாந்தர விழாக்களின் விவரம் :


1. தினமும் காலையில் அதிஷ்டானத்தில் அபிஷேகமும் அர்ச்சனையும் அலங்காரமும் நடைபெறும். மஹா நைவேத்யத்துடன் மங்களாரத்தி செய்யப்படும். உச்சிக் காலத்தில் நைவேத்யமும், தீபாராதனையும் நடைபெறும். மாலையில் ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷ உபநிஷத், கவசம் மற்றும் ஸ்ரீமத் இராமாயண பாராயணம் நடைபெற்று பிரசாதம் விநியோகிக்கப்படும்.

2. வருடந்தோறும் நடக்கும் விசேஷ பூஜைகள் இரண்டாகும். 1. கார்த்திகை மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத் தன்று விமரிசையாக நடத்தப்படும் குரு பூஜை. ஸ்ரீ ஸ்வாமிகளின் விதேக முக்தி அடைந்த தினம். அன்று காலை 8 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகளின் சித்திரபடம், ஸ்ரீ வேங்கடேஸ்வரரின் சித்திரபடம் மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகள் உபயோகித்த தண்டம், கமண்டலம், திருவோடு முதலியவை களை பக்தர்கள் மேல் மாயில் கிராமத்தின் நான்கு பிரதான வீதிகளிலும் ஊர்வலமாக மேளதாளத்துடன் எடுத்துச் செல்வர். பிறகு அதிஷ்டானத்தில் உபநிஷத் பாராயணத்துடன் அனைத்துவித அபிஷேகங்களும் செய்து புதிய காவி வஸ்திரம் அணிவிக்கப்படும். விசேஷ மலர் அலங்காரம் செய்தபிறகு ஸ்ரீ விலக்ஷணானந்த அஷ்டோத்ரம் வாசிக்கப் பட்டு அர்ச்சனை செய்யப்படும். அதிஷ்டானத்தின் வலப்புறம் உள்ள ஸ்ரீ கற்பக விநாயகருக்கும் இடப்புறம் உள்ள ஸ்ரீ வேங்கடேஸ்வரருக்கும் சிறப்பு அபிஷேக ஆராதனை செய்யப்படும். இதனைத் தொடர்ந்து ஸ்ரீ ஸ்வாமிகள் எழுதிய இராமாயணம் மற்றும் பரம்பொருள் வாசிக்கப்படும். விசேஷ நைவேத்யம் மற்றும் மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டு






ஸ்ரீ விலக்ஷணானந்த ஆசிரமம், மேல்மாயில் - முகப்புத் தோற்றம்




ஸ்ரீ வேங்கடேஸ்வரர்



ஸ்ரீ கற்பக விநாயகர்





ஆலய விமானம்



ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஸமாதி

ஸ்ரீ வேங்கடேஸ்வரர் மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளின் வாழ்த்துப்பா இசைக்கப்படும். பூர்த்தியாக "ஓம் நமோ நராயணாய மந்திரம்" என்ற பாடல் அனைவராலும் இசைக்கப்பட்டு பூஜா ப்ரசாதம் எல்லோருக்கும் வயிறார வழங்கப்படும்.

குரு பூஜையின் போது மேல் மாயிலில் உள்ள அனைத்து இல்லங்களும் விழாக் கோலம் பூண்டு, வந்திருப் பவர்கள், உறவினர்கள், அறிஞர்கள், பார்வையாளர்கள் என அனைவருக்கும் மூன்று நாட்களுக்கும் விசேஷ விருந்து அளிக்கப்படும்.

2. மார்கழி மாதம் சதய நட்சத்திரத்தன்று ஸ்ரீ ஸ்வாமி களின் ஜயந்தி (பிறந்த நாள்) பூஜை கோலாகலமாக நடை பெறும். மேற்கூறிய குரு பூஜையின் நிகழ்வுகளுடன் 108 சங்காபிஷேகம் மற்றம் ஸ்ரீ விலக்ஷணானந்த யக்ஞம் நடைபெறும்.

தற்போது 2015 மார்ச் மாதம் முதல் ஸ்ரீ வாசுதேவானந்த ஸரஸ்வதி என்னும் இளந்துறவி மேல்மாயில் ஆசிரமத்தின் பொறுப்பேற்று விசேஷமாக ஸேவை செய்து வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.



## ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளுக்கு ஸ்ரீ வேங்கடேஸ்வரர் சாக்ஷாத்காரம்

ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளுக்கு கண்கண்ட கலியுக தெய்வமாம் ஸ்ரீ வேங்கடேஸ்வர பெருமாள் பிரத்யக்ஷமாக காட்சி அளித்து அவரின் மகிமை பொருந்திய நிலையை காட்டுவதோடு அல்லாமல் அனைவரும் உய்வடைய அதனை புகைப்படமாகவும் எடுக்கச் செய்தது அவரது கருணை உள்ளத்துக்கு ஓர் சான்று. கொடிய கலிதோஷத்தினை நீக்கும் ஓர் உபாயமாக அனைவருக்கும் அப்படத்தினை பிரசாதமாக வினியோகித்து அனைத்து இல்லங்களிலும் பீடமிட்டு விளங்கி தர்மநெறியினை காக்கும் ஓர் ரக்ஷையாக பிரகாசிக்கச் செய்ததை நினைக்கையில் மனம் இறும்பூதடைகிறது. கலியுக தெய்வமாம் ஸ்ரீ ஸ்ரீனிவாச வேங்கடேஸ்வரர் அவருக்கு தரிசனம் வழங்கிய நிகழ்ச்சியின் விவரத்தினை இவ்வறிக்கையின் மூலமாக விவரிக்கப்படு கின்றது.

ஓம் தத் ஸத்.



விலக்ஷணானந்தர்

வெங்கடேஸ்வரர்

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ

திருவேங்கட பருவதவாசமும் அங்கு நடந்த வைபவங்களும்

இப்படிக்கு

ஸ்ரீ விலக்ஷணானந்த அகில பக்த சேவா சங்கத்தார்.

பெங்களூர்.




ஓம் தத் ஸத்

விலக்ஷணானந்தர் வெங்கடேஸ்வரர்

## ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீ திருவேங்கட பருவதவாசமும் அங்கு நடந்த வைபவங்களும்

பரமாத்மாஜீ 11-6-41ல் ஓர் அந்தரங்க சிஷ்யனோடு சென்னை மாநகரைவிட்டுப் பிரயாணமாகி அங்கு சென்று ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் திருச்சன்னிதிக்குப் பின்புறம் மேலவீதியிலுள்ள வசந்தோத்ஸவ பங்களாத் தோட்டத்திலுள்ள மஹந்து மடத்திற் றங்கினார். ஸ்ரீநிவாசஸருடைய உத்தரவின்படி 50 தினங்கள் அங்கு தங்கியிருந்தனர். அதற்குள் குமாரதாரா வனத்திற்கும் தீர்த்தத்திற்கும் மூன்றுதரம் எழுந்தருளினார். பற்பல துறவிக் கூட்டங்களும், சந்நியாசிகளும், பிரம்மசாரிகளும், கிருஹஸ்தர்களும் பரமாத்மாஜீயை தரிசனம் செய்தார்கள். சென்னை, கீழத்திருப்பதி, சித்தூர், வேலூர், மேல்மாயில், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, திருப்பாப்புலியூர், சேலம், பெங்களூர், மதுரை, லாலாபேட்டை முதலிய இடங்களி லிருந்து பல பெரிய உத்தியோகஸ்தர்கள், பிரபுக்கள், வித்வான்கள், பக்தர்கள், கிருஹஸ்தர்கள் இவர்கள் திருமலை வந்த பரமாத்மாஜீ தரிசனம் செய்து திரும்பினார்கள். சிற்சிலர் உபதேசமும் பெற்றுக் கொண்டனர்.

ஸ்வாமீஜீ சேஷாத்ரி பருவதத்தை விட்டுப் புறப்படப் பத்து நாளைக்கு முன் ஸ்ரீ வேங்கடேஸ்வரர் உத்தரவுபடி ஸ்ரீநிவாசர் சன்னிதிக்கு மேற்புறம் இரண்டு மைல் தூரத்திலுள்ள நாராயண கிரியில் ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாள் திருவடியமைந்துள்ள சிகரத்தில் மூன்று தினங்கள் ஏகாந்தமாகத் தங்கினார். மூன்றாவது நாள் மாலை 5 மணிக்கு ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமான் பரமாத்மாஜீ அவர்களுக்குத் தரிசனமளிப்பதாக வாக்களித்திருந்த படியால் அதை முன்னிட்டுத் கீழத்திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வர போட்டோ கம்பெனி புரொப்ரைட்டர் வெங்கட்டராமனைப் போட்டோ சாமான்களுடன் வரும்படியாகச் சொல்லியனுப்பி யிருந்தபடி வந்தான்.



மூன்றாநாள் மாலை 5 மணி ஆனவுடன் பரமாத்மாஜீ செடி களடர்ந்த அழகிய கற்பாறைமீது எழுநதருளியிருந்து கொண்டு போட்டோ வெங்கட்டறாமனை நோக்கித் தானுட்கார்ந் திருக்கிற இடத்தினின்று ஓரளவு காட்டி அதுவரை படம் பிடிக்க வேண்டு மென்றும் ஸ்ரீ வெங்கடேசப் பெருமான் உன் திருஷ்டிக்கப் புலப்பட மாட்டாரென்றும் போட்டோக் கண்ணாடியில் பின்னால் பார்க்கலாமென்றும் சொல்லிவிட்டு இரு கண்களையும் மூடி மனோ ந்திரியங்களையடக்கி நிஷ்டையிலெழுந் தருளினார். அவன் அவ்வாறே படம் படித்துக் கொண்டு சென்று விட்டான்.



அபபால் மறுநாள் ஸ்வாமீஜீ திருமலை வி3யமாகி ஓர் வாரமிருந்து ஸ்ரீநிவாச எம்பெருமான் திவ்ய தரிசனமும் திருமஞ்சன தரிசனமும் செய்து விடைபெற்றுக் கொண்டு சந்திரகிரி ரோடு வழியாக மலையை விட்டிறங்கி ஸ்ரீ அலமேலு மங்கைத் தாயார் சில வருஷங்கள் வாசஞ் செய்த மங்காபுரம் என்ற இடத்திற் சென்று அங்குபூர்வீக சந்திரகிரி அரசர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஸ்ரீ வேங்கடேசப் பெருமானுடைய அழகிய உயரமுள்ள கெம்பீரமான உருவத்தைத் தரிசனம் செய்து கொண்டு 2-8-41 காலை 10 மணிக்கு கீழத்திருப்பதி வந்தார்கள். அப்புறம் ஸ்ரீ வெங்கட்ட ரமண போட்டோ கம்பெனியார் கண்ணாடியைச் சுத்தம் செய்து பார்க்கப் பரமாத்மாஜீ எதிரே ஸ்ரீ வேங்கடேசப் பெருமான் தரிசனம் கொடுத்தும் அவரது வலது கையை நீட்டி ஸ்வாமீஜீயைக் காண்பிப்பது போன்றதுமாயிருந்தன. இதைக் கண்ணுற்ற போட்டோ கம்பெனியாரும் மற்றையோர்களும் அதிக ஆச்சரிய மடைந்தனர்.

இந்தப் படம் பல பக்தர்கள் உபயோகத்திற்காக மேற்படி கம்பெனியார் சரசமான விலைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

போட்டோ கிடைக்குமிடம் : ஸ்ரீ வெங்கட்டரமணா போட்டோ ஓர்க்ஸ், பெரிய கடைத் தெரு, திருப்பதி

இப்படிக்கு

**ஸ்ரீ விலக்ஷணானந்த அகில பக்த சேவா சங்கத்தார்**

பெங்களூர்

## பாகம் 2

# பரமாத்மாஜியின்
# பக்த சிரோன்மணிகள்



**திரு. பாஷ்யம்**

1. குரங்கு : குட்டிதான் தாயை தன் பலத்தால் கட்டி பிடித்து கூடவே செல்லும்.
   பூனை : தாய்தான் குட்டியை தானே தூக்கி செல்லும்.
   நீ குரங்கு நிலைமையை அனுஷ்டித்துப் பார்.
2. உன் கடமையை குறைவற நீ செய்து முடித்து விட்டால் நான் எனது கடமையை அந்த நிமிஷமே செய்து முடித்து விடுகிறேன்.
3. பிறவிப் பிணி ஒழிவதென்பது பெரிய வேலை; அது மகத்தான ரிஷிகள் முடிவு. அது கிடைக்க வேண்டு மென்று ஸ்ரீமன் நாராயண மூர்த்தியை வேண்டிக் கொள்.
4. அண்டங்கள் அழிந்தாலும் கவலையில்லை. அனித்தியம் ஒருநாள் அழியத்தானே செய்யும்.
5. ஒரு சிஷ்யனை ஒரு குரு அங்கீகாரம் செய்து விட்டால் சகல பொறுப்பும் குருவைச் சார்ந்தது. எத்தனை ஜென்மம் எடுத்தாலும் அந்த சிஷ்யனை அந்த குரு கடைதேற்றி வைப்பார். அதுபற்றி நீ ஒன்றும் கவலைப் பட வேண்டியதில்லை.
6. நீ சாஸ்திரம் படிப்பதிலும் என்னைப் பார்ப்பதிலும் அளவு கடந்த தீவிரமாய் இருக்கிறாய் என்று தெரிகிறது. அதை கொஞ்சம் குறைத்துக் கொண்டால் ரொம்ப நல்லதென்று நினைக்கிறேன்.
7. நீ என்ன காரியம் செய்து கொண்டிருந்தாலும் பகவானை மறவாமல் செய்.
8. பகவானும் ஆசாரியரும் ஒரே தன்மை உடையவர்கள். ஆசாரியர் மூலம் பகவானை அறிதலென்பது ஆசாரியரின் உண்மை சொரூபத்தை அறிந்து கொள்வது தான். ஆசாரியரின் உண்மை சொரூபமும் பகவானுடைய எதார்த்த சொரூபமும் ஒன்றே.

*பகவானுடைய கிருபையேற்பட்டால் அவரே ஆசாரியரை காண்பிப்பார்.*

9. *தீவிரமான மோக்ஷ இச்சையோடிரு; உலக மயக்கத்தில் கட்டுப்படாதே. எந்த ஸ்திரீகளையும் மாதா சகோதரி யாக நினை. எவரிடமும் துவேஷம் கொள்ளாதே.*

10. *எல்லோரிடத்திலும் ஒரே பரமாத்மா இருப்பதாக நினை. ஸ்ரீமந் நாராயண மூர்த்தியை உபாஸனா தெய்வமாக நினைத்து வா.*

11. *பூர்வ ஜென்மாந்திர நிஷ்காம புண்ணிய மிகுந்தவ னென்பது உன் எண்ணங்களாலும் செய்கையாலும் தெரிகிறது. உன் அந்தரங்க கோரிக்கைகளை எம் பெருமான் சீக்கிரம் பூர்த்தி செய்து வைப்பார்.*

ஸ்ரீ ஸ்வாமிகளின் இந்த அறிய வேதாந்த அறிவுரைகள் அடங்கிய கடிதத்தின் உரிமையாளர் யார்? அவர் மேல் மாயில் மஹா குரு ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மா சுவாமிகள் மகா சமஸ்தானத்தில் நிர்வாகியாக இருந்தவரும் ஸ்ரீ விலக்ஷணானந்தரின் நேர் சிஷ்யருமான **ஸ்ரீ பாஷ்யம் அவர்கள்**



திரு. பாஷ்யம்



ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளைப் பற்றி எண்ணும் போதெல்லாம் உடனே தோன்றும் உருவம் அவரின் பிரதி பிம்பம் போன்று மனதில் உன்னதமான ஸ்தானத்தைப் பெற்ற ஒரு மாமனிதர் - திரு. பாஷ்யம் அவர்கள். இவர் மேல்மாயில் கிராமத்தில் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின் சித்த வைத்திய சாலையில் உதவியாளராகப் பணியாற்றியவர். இரண்டு மகள்களும் ஒரு மகனையும் கொண்ட குடும்பமாக வசித்து வந்தார். திரு.பாஷ்யம் திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி, திரு. மாணிக்க ஆச்சாரி இவர்கள் மூவரும் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க ஆரி முத்தாச்சாரி தெருவிற்கு வருவார்கள். நடுத்தர வயதான திரு. பாஷ்யம் ஆகர்ஷணமும் அச்சமுமற்ற தீரமான தோற்றம் கொண்டவர். ஆரம்பத்தில் ஸ்ரீ ஸ்வாமிகளுடன் எனக்கு புரியாத உயர்ந்த ஆன்மீக விஷயங்களை மட்டுமே பேசிக் கொண்டிருந்த இவர்மீது இளம் பிராயத்திலிருந்த எனக்கு மிகுந்த மரியாதையும், மதிப்பும் ஏற்பட்டது.

திரு.பாஷ்யம் கற்ற கல்விக்கும் அவரது கூர்மையான தெளிந்த அறிவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. குரு பக்தி, குரு சேவை என்பதற்கு ஓர் உதாரணம் என்று சொன்னால் கண்களை மூடிக் கொண்டு திரு.பாஷ்யம் என்று அகராதியில்கூட இடம் பிடிக்கும் தன்மையுள்ளவர். சொல்லப் போனால் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி நன்கு அறிந்தவர்களில் முதன்மையானவர். ஏகாக்கிரக சித்தத்துடன் குருவை மட்டுமே ஆராதித்து வந்தவர். ஸ்ரீ ஸ்வாமிகள் திரு. பாஷ்யத்துடன் சம்பாஷிக்கும் போதெல்லாம் ஆழ்ந்த வேதாந்த நுட்பங்கள் அநாயாசமாக வெளிவரும்.

மிகத் தெளிவான மனிதரான திரு. பாஷ்யம் தன் ஆன்மீக வாழ்க்கையையும், லௌகீக வாழ்க்கையையும் சேர்த்து குழப்பி கொண்டதே இல்லை. ஸ்ரீ ஸ்வாமிகளுடைய அருமை பெருமையையும், மேன்மையான தத்துவ நிலையைப் பற்றியும் அவருடைய உபன்யாசங்கள், பாடல்கள், கவிகள்

முதலிய எடுத்துக்காட்டுகளோடு மற்றவர்களுக்கு அறிவுறுத்து வது வழக்கம். ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தியடைந்த பிறகும் அவர் பீடம் கொண்டு இன்றும் ஆற்றோடு பிரபஞ்ச சக்தியை மக்களுக்கு வழங்க மேல்மாயிலில் சமாதி கோயில் எழும்புவ தற்கு திரு.பாஷ்யம் ஒருவரே காரணம் என்று உறுதியாகக் கூறலாம். ஸ்ரீ ஸ்வாமிகளின் ஞான உபதேசங்களை ஏட்டு சுரைக்காயாக அல்லாமல் தன் வாழ்க்கையில் பிரயோகப்படுத் தும் வகையில் தனக்கே பொருளுதவி தேவைப்பட்ட சமயம் ஸ்ரீ விலக்ஷணானந்தரின் அதிஷ்டானம் எழுப்ப கால் தேய பலவிடங்களுக்கும் சென்று பொருளீட்டி கோயிலை எழுப்பியவர். திரு. பாஷ்யத்தின் விடாமுயற்சியுடனான சரீர பிரயாசையினாலேயே மேல்மாயிலில் முன்பே இருந்த அருள்மிகு கற்பக விநாயகர் கோயிலில் கிராம மணியக்காரர் மற்றும் முக்கிய நபர்கள், பக்தர்களின் உதவியுடன் சமாதி கோயில் நிறுவப்பட்டது.

ஸ்ரீ ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தின் முன் தியானம் கூடும் போது ஸ்வாமிகள் மற்றும் திரு. பாஷ்யம் என்ற துவைதபதம் ஒன்றாகி ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீயின் அத்வைத சாரம் நம்முள் இறங்குவதை அனுபவத்தில் உணரலாம்.

நல்ல மனிதரான திரு. பாஷ்யம் அவர்களின் உதார குணம் எனது சொந்த வாழ்க்கையிலும் நிறைய அனுபவித் திருக்கிறேன். தன் இறுதி முச்சு வரை சமாதி கோயிலை பராமரிக்கும் பணியினையும் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸத்ஸங்கத் தினையும் திறம்பட செய்தவர். ஸ்ரீ ஸ்வாமிகளின் உபதேசங் களையும், அருள் வாக்கினையும் உலகத்தோர் உய்வடைய அவர்களிடம் பரப்புவதையே தன் கொள்கையாக வைத்திருந் தார். ஸ்ரீ ஸ்வாமிகளின் சன்னதியிலேயே தன் இறுதி காலத்தை கழிக்க வந்திருந்த திருமதி ஜெயா, திருமதி ருக்மணி பாய், திருமதி சுந்தரியம்மாள் முதலியோரை தன்னலமின்றி



பராமரித்தார். தன் உடல், பொருள், ஆவி யாவையும் குரு விற்கு அர்ப்பணம் செய்த இவர் ஒவ்வொரு குரு பூஜையிலும் தனது சொற்ப வருவாயிலும் அனைவரையும் ஆர்வத்தோடு உபசரித்து விருந்தோம்பியது நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டிய குரு பக்தியின் வெளிப்பாடு. குரு சேவையிலேயே மூழ்கியிருந்தவர் மஞ்சள் காமாலை நோயினால் நலிந்த தன் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் வைத்தியசாலை யிலும் சேராமல் குருவின் நிழலிலேயே அவர் சன்னதி யிலேயே 1986ஆம் வருடம் தன் குருவுடன் இணைந்தார்.

## திரு. இராமானுஜம்

ஆரி முத்தாச்சாரி தெருவில் சந்தித்த திரு. இராமானுஜம் வீர சைவர். கண்டத்தில் லிங்கம் அணிந்து கொண்டிருந்தார். மெலிந்த குட்டையான தேகமும் மூக்குக் கண்ணாடியும் அணிந்து எளிமையாக இருப்பார். காவி வஸ்திரம் கட்டாத துறவி. பதினான்கு பேர்களைக் கொண்ட அவர் குடும்பத்தார் அனைவரும் கொடிய ப்ளேக் நோய்க்கு பலியானபின் விதி அவர் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது. பாதையை மாற்றியது. ஆந்திராவில் அரசாங்க வேலையை உதறிவிட்டு வீட்டைத் துறந்து திருச்சிக்கு அருகில் தங்கியிருந்த ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி அறிந்து கொண்டு அவரை தரிசிக்கச் செல்லும் போது ஸ்வாமிகள் அவ்விடத்தை விட்டு புறப்பட்டு விட, திரும்பவும் அவரைப் பின் தொடர்வதும், ஸ்வாமிகள் கிளம்பி விடுவதுமாக ஒன்றரை வருடக் கண்ணாமூச்சி ஆட்டத்திற்குப் பிறகு 1943ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரி முத்தாச்சாரி தெருவில் ஸ்ரீ ஸ்வாமிகளின் திவ்ய தரிசனம் கிடைக்கப் பெற்றார். தான் சரியான இடத்திற்கு வந்து சேர்ந் ததையும் தன் வாழ்க்கையின் குறிக்கோளையும் கடைசியாக உணர்ந்து பேரமைதி அடைந்தார். திரு. இராமானுஜத்தின் உயரிய நிலையையறிந்த ஸ்வாமிகள் அவரை தன்னுடனேயே இருக்கப் பணித்தார்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் அன்றாட தேவைகளையும் பணிவிடைகளையும் குறிப்பறிந்து பணிவன்புடன் செய்வார். பக்தர்களையும் உபசரித்து, வந்திருப்பவர்களை அறிவிப்பதை யும் தன் தினசரி பணியாக கசடற செய்தார். தன்னலம் என்பது ஒரு துளியும் இன்றி பிறருக்கு பணி செய்வதை, சமயத்தி லிருந்து சமையல் வரை தன் பாக்கியமாக கருதியவர்.

அவர் மற்றவர்களுடன் பேசும்போது மூச்சு விடுவதைப் போன்று 'சிவா சிவா' என்று பதிலுறுப்பது வழக்கம். எப்போதுமே அவர் ஆன்மீகத்திலும் தெய்வீக நாட்டத்திலுமே தைல தாரையாக நனைந்து கொண்டே இருந்தார். இதனுடைய வெளித் தாக்கமே அவர் மற்றவர்களை விளிப்பதும் 'சிவா' மற்றவர்களுக்கு பதிலளிப்பதும் 'சிவா'. இதிலிருந்து 'சிவா' என்ற பரம்பொருளை அனைவரிடமும் காணும் நிலையை அடைந்தவர் என்பது உறுதியானது. ஆன்மீக நட்பின் மேன்மையை உணர வேண்டுமெனில் திரு. இராமாஜனும் மற்றும் திரு. சிவராமையா இவர்களின் நட்பையே எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு கடைசி வரை தொடர்ந்து பணிவிடை செய்த இவர் சிறிது நாட்கள் நோய்வாய்பட்டு 1945ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 29ஆம் தேதி ஸ்ரீ ஸ்வாமிகளின் சிசுருஷையோடு, இறுதி நேர அன்பான அரவணைப்போடு சிவபதம் அடைந்தார். ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸித்திக்கு சற்று முன்னரே இவர் பரமபதம் அடைந்தது இவர் பேறே.

## திரு. சிவராமையா

ஆரி முத்தாச்சாரி தெருவில் பரிச்சயமான இவர் அப்போது நடுத்தர வயது தெலுங்கு அந்தணர். இவர் சென்னை உயர்நீதி மன்றத்தில் பென்ச் கிளார்க்காக அரசாங்க பணியாற்றியவர். இவர் பிறந்த இடத்திலும் மற்றும் மனைவி



யின் உறவினர்களும் சிறந்த நீதிபதிகள். அக்காலத்தில் பிரபலமான ஜஸ்டிஸ் திரு. இராமேசன் என்ற சிறந்த நீதிபதி இவருடைய மாமனார் என்பது குறிப்பிடத்தக்கது. இத்துணை சிறந்த பாரம்பரியமும், செல்வாக்கும் பெற்றிருந்தாலும் மிக எளிமையாகவும், அடக்கத்துடனும் விளங்கிய சிறந்த பண்பாளர், இவர் தினமும் தவறாது அலுவலகத்திலிருந்து சுமார் 6 மணியளவில் ஸ்ரீ ஸ்வாமிகள் எங்கிருந்தாலும் அங்கு ஆஜராகி நிகழ்ச்சிகள் நிறைவுறும் வரையில் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றுகொண்டே வாய் பேசாது ஸ்ரீ ஸ்வாமி களை ஆர்வத்தோடு உன்னிப்பாக நோக்கிக் கொண்டே யிருப்பார்.

இவருடைய மனைவி திருமதி சுப்புலட்சுமி அம்மையார் அவ்வப்போது ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க வருவதுண்டு. இவருடைய மகன் எதிர்காலத்தில் பெரிய கணித மேதையாக உலகளவில் பேசப்பட்டதாக கேள்வி. ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு பாத ஸேவையாக கால்களை பிடித்து விடுவதை தவறாமல் செய்து வந்தார். மிக்க செல்வந்தராயினும் அவருக்கும் இராமானுஜத் திற்கும் இடையேயான உயர்ந்த நட்பு ஸ்ரீ கிருஷ்ண குசேலரின் நட்டையொத்த பவித்திரமானதாகும்.

ஸ்வாமிகளின் பூஜையில் இவருடைய முக்கிய பங்கு நாதோபாசனையாகும்.. பஜனைப் பாடல்கள், கபீர்தாஸ், துளசிதாஸ் போன்றோரின் பக்திப் பாடல்கள், கோவிந்தாஷ்டகம், பஜகோவிந்தம், ஜயதேவரின் அஷ்டபதி மற்றும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு ஆரத்தி பாடல்கள் போன்ற பாடல்களை கேட்போர் மனமுருகப் பாடுவார். ஸ்ரீ ஸ்வாமி களுடைய மூன்று ஆரத்தி பாடலை இங்கே கொடுப்பதன் மூலம் அவரையெண்ணி மிகப் பெருமையும் மகிழ்ச்சியையும் அடைகின்றேன்.

ஹாரத்தி பாட்டு

*தேதிப்யமான விக்ர கொனு தீபஹாரதீ*
*ஜீவநலனொ சங்குமிதே திவ்ய ஹாரதி*
*ஜோதிர்மயாத்ம கொனும இதே ஜோதி ஹாரதீ*
*பாதகம் சம்ஹரண இதே பஞ்ச ஹாரதீ*
*கம்பீர குணகை கொனு நக்ஷத்ர ஹாரதீ*
*சார ஹார பரண இதே சார ஹாரதீ* *(தேதி)*

மங்களம் 1

*ஆதிமுலமைன தேவ தேவ மங்களம்*
*நீதுபாத பத்மமுலகு நித்ய மங்களம்*
*ஓமஹானுபாவ கிருஷ்ண நீகு மங்களம்*
*நீதுபிந்து ரூபமுலகு நித்ய மங்களம்*
*ஆதி சக்தி சோதர சுதநாத மங்களம்*
*ஸ்வாமி தேவ தேவ கிருஷ்ண ஸ்வாமி மங்களம்* *(ஆதி)*

மங்களம் 2


*ஸ்நான ஜபநியமாதி சமஸ்துத மௌனயமனிய மாதிசகல*
*த்யான தாரண வரஸ மாலி ஞான யோக திருடௌரதா*
*ஞான வாருதீ சகல சாஸ்த்ர விசார தார்கய விஷயகா*
*ஞான திமிராதித்ய சுபரி ஞானகுரவரவே நமோ.*

*நித்ய திருப்த நிராதாரா நித்யசுத்த நிராகார*
*சத்ய நித்ய நித்யமாமவ நித்ய சம்வித்து ரூபகா*
*தத்வ நிதி தத்வார்த்தனுத ஜன முக்தி தாயக வந்திதா*
*சுத்த ஸ்ரீகுரு சங்கராஸ்ரம பரதத்வ மூர்த்தி பாஹிமாம்.*

*மங்களம் முரமர்த்தனாய*
*மங்களம் புத வர்த்தனாய*
*மங்களம் திரிபுராந்த காய*
*மங்களம் நரசாந்தராய*
*மங்களம் விருஷபத்வஜாய*
*மங்களம் கருடத்வஜாய*
*மங்களம் லக்ஷ்மிவராய*
*மங்களம் கங்காதராய*
*சங்கரா நாராயணா சிவ சங்கரா நாராயணா*
*சங்கரா நாராயணா சிவசங்கரா நாராயணா*



## திரு. கோவிந்தராஜன்



திரு. கோவிந்தராஜன்

திரு. கோவிந்தராஜன் என்ற அடுத்த அன்பர் சிறந்த நண்பர். ஸ்ரீ ஸ்வாமிகளின் மறுவுருவம் பேன்ற இவரை காணும்போதெல்லாம் ஸ்தூல சரீரத்தில் குருவை காண முடியாத ஏக்கம் நீங்கி மகிழ்ச்சியான நிறைவு உண்டாகும். உருவத்தில் மட்டுமல்ல அவரின் பிரதிபலிப்பு! அவரின் ஒழுக்கம், அடக்கம், அன்பு, பற்றற்றத் தன்மை, கருணையுள்ளம், அனைவரிடமும் காட்டும் பரிவு, பிரதிபலன் பாரா உதவுந் தன்மை இப்படியெல்லா நற்குணங்களும் ஒருங்கே அமைந்த ஓர் மனிதரை இப்பூலோகத்தில் காண்பதும் கடினம்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் தங்கை ஸ்ரீமதி கோதையம்மாளின் புதல்வரான திரு. கோவிந்தராஜன் அவர்களை நான் பள்ளி மாணவனாக ஆரி முத்தாச்சாரி தெருவில் சந்தித்தேன். ஸ்ரீ ஸ்வாமிகள் தன் சொந்த மாமா என்று யாரிடமும் வெளிப் படுத்தாது மிகவும் அடக்கமாக ஓர் ஓரத்தில் நின்று நடப்பவைகளை கவனித்துக் கொண்டு பின் விபூதி பிரசாதம் பெற்றுச் சொல்வார்.

இளமையிலேயே தனது பெற்றோர்களை இழந்த அவர் தனது தாய்மாமன் வீட்டில் இருந்து படித்து வந்தார். படிக்கும் காலத்திலிருந்தே ஆன்மீக நாட்டம் கொண்டு அதன் வெளிப் பாடாக நாட்டுப்பற்று, மக்கள் சேவையில் ஈடுபாடு உடைய வராக இருந்தார். பள்ளி படிப்பிற்குப் பின் டிவிஎஸ் நிறுவனத் தில் வேலைக்கு சேர்ந்ததோடு தனது சமூகப் பணிகளையும் தொடர்ந்தார். மாலை வேலைகளில் மருத்துவமனைகளுக்குச் சென்று நோயாளிகளுக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி, ஸ்ரீ ஸ்வாமிகள் எவ்வாறு நேர்த்தியாக விபூதியை பொட்டலமாக மடித்து அளிப்பாரோ அவ்வண்ணம் விபூதி பிரசாதம் அளித்து வருவது வழக்கம்.

வருங்கால சந்ததியினரும் பயனடையும் பொருட்டு, நல்ல கல்வியோடு நமது பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் பாதுகாக்க சில ஆர்வலர்களுடன் சேர்ந்து ஒரு உயர்நிலை பள்ளியை துவக்க உதவியது அவது சமூக அக்கறைக்கு ஓர் எடுத்துக்காட்டு. இவரது பற்றற்ற தன்மைக்கு ஓர் சான்று - திருமணமான புதிதில் இவருக்கு சேர வேண்டிய பூர்வீக சொத்தான ஓர் வண்டி நிறைய வெள்ளிப் பாத்திரங்களை ஏற்க மறுத்து ஏதேனும் தர்ம காரியங்களுக்கு அளித்து விடுமாறு கூறியது.

திரு. கோவிந்தராஜன் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அதீதமான ஈடுபாடு உடையவர். 1945ஆம் ஆண்டிற்கு பின் சொந்த அலுவல்கள் காரணமாக நான் அவரை சந்திக்க இயலவில்லை. ஆயினும் 1965இல் வெங்கடரங்கம்பிள்ளை தெருவில் அவர் என் குடும்பத்தாரை அவ்வப்போது சந்தித்து ஸ்ரீ ஸ்வாமி களைப் பற்றிய பெருமைகளை அளவளாவுவது உண்டு. அதர்வசீர்ஷ, கவச பாராயணம், ஸ்ரீ வேங்கடேஸ்வரரின் மூல மந்திர ஜபம் மற்றும் குருநாதரின் மந்திரம் இவைகளை இவர் ஜபிக்க தவறியதே இல்லை. எல்லோரிடமும் இதை தவறாது கடைப்பிடிக்கச் சொல்லி ஊக்குவிப்பார். மூல மந்திர



ஜபததினை உதடுகள் அசையாமல் நாக்கு மேலண்ணத்துடன் ஒட்டியிருக்க நாம் எங்கேயும், எப்போதும், எந்நேரமும் செய்யலாம் என்று அறிவுறுத்துவார். இவர் வெளியிட்ட ஸ்ரீ ஸ்வாமிகளின் சில நூல்கள் - ஸ்ரீ வேங்கடேஸ்வர அதர்வசீர்ஷ கவசம், முருகன் உத்வேக மங்கலம், ஸ்ரீ இராமசந்திர தெய்வம், வாழ்த்துப் பாடல்கள் போன்றவையாகும்.

1961-62ஆம் ஆண்டு ஸ்ரீ விலக்ஷணானந்த சங்கம் ஆரம்பிக்கப்பட்டு சுழற்சி முறையில் மாதமொரு முறை அங்கத்தினர் வீட்டில் பூஜைகள் நடத்தப்பட்டன. பிறகு நாளாவட்டத்தில் அவ்வழக்கம் மறைந்து அவருடைய இல்லத்திலேயே பூஜைகள் தொடர்ந்தன. 1995ஆம் ஆண்டு ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜெயந்தி பூஜை அண்ணாநகரில் திரு. கோவிந்தராஜனின் மூலம் ஜெயகோபால் கரோடியா விவேகானந்த வித்யாலயா பள்ளியில் விமரிசையாக நடந்தேறியது. அங்கு திரும்பவும் மாத பூஜையை தொடங்க அனைவரும் கலந்தாலோசித்து திரு. பாபு அவர்களின் இல்லத்தில் அடுத்த மாத பூஜை நடைபெற்றது. இதற்கடுத்த தாக எங்கு நடத்தப்போகிறோம் என இருந்தபோது அது அம்மாதம் மட்டுமின்றி பின் தொடர்சியாக என் கணவர் திரு. மூர்த்தி அவர்களுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் அனுக்ஞை வழியாக இன்றளவும் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின் மாதாந்திர பூஜை ஆதம்பாக்கத்தில் எங்கள் இல்லத்தில் ஒவ்வொரு இரண்டாவது ஞாயிறு மாலை 4 மணியிலிருந்து 6 மணிவரை அன்பர்களுடன் நடைபெற்று வருகின்றது. இந்நிகழ்ச்சியை திரு. கோவிந்தராஜன் அவர்கள் எனக்களித்த பெரும் பாக்கிய மாக கருதுகிறேன்.

திரு.கோவிந்தராஜன் ஆடி மாதம் ஸ்ரீ ஸ்வாமிகளின் உபநிஷத் பாராயண நிகழ்ச்சியினை திருமலையில் வருடா வருடம் தவறாது மிகச் சிறப்பாக நடத்தி வந்தார். ஆடி மாத பூஜை மேல்மாயிலில் குரு பூஜை மற்றும் ஜெயந்தி விழாக்



சென்னை, ஆதம்பாக்கத்தில் நடைபெறும்
ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகளின் மாதாந்திர குரு பூஜை

களை மிகுந்த சிரத்தையோடு ஒவ்வொரு சிறு விஷயத்தையும் கூட நேர்த்தியாக தன் குருநாதருக்கு சமர்ப்பண பாவத்தில் செய்து வந்தார். திருமலையில் ஸ்ரீ வேங்கடேஸ்வர தரிசனத்தை விடவும் தன் குருவினுடைய பணியை



ஆடி மாத திருப்பதி யாத்திரை : திருமலை சின்ன ஜீயர் மடத்திலிருந்து பக்தர்கள் உபநிஷத் பாராயண ஊர்வலம்



பிரதானமாக நினைத்தது தன் குருநாதரும் ஸ்ரீ வேங்கடேஸ்வரரும் ஒன்றே என்ற உயரிய தத்துவ நிலையை அவர் அடைந்ததற்கான சான்று.

திருப்பதியில் நடக்கும் ஆடி மாத உபநிஷத் பாராயணம் திருமலையெங்கும் ஒலிக்க வேண்டுமென்ற பேரவாவினால் தேவஸ்தானத்திடம் மிகவும் மன்றாடி அலைந்து கடைசியில் அனுமதிப் பெற்று பின் அதற்கான ஏற்பாடுகள் செய்து ஒலிப் பெருக்கியின் மூலம் ஆஸ்தான மண்டபம் ஈறாக எங்கெங்கும் தன் குருநாதரின் பாராயணம் எதிரொலித்ததை கேட்டு மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். அவரது பெரியதொரு விருப்பம் நிறைவேறியது. அதுவே அவர் இறுதி முறையாக ஆடி மாத பாராயணத்திற்காக திருமலை வந்ததாகும்.

இறுதி காலத்திற்கு முன் திரு. கோவிந்தராஜன் தன்னிடமிருந்த ஸ்ரீ விலக்ஷணானந்தரின் பிரத்யேக பூஜை



திருமலை திருப்பதி தேவஸ்தான ஆஸ்தான மண்டபத்தில் பக்தர்கள் உபநிஷத் பாராயணம்



குரு பாதுகைகள்

பொக்கிஷங்களான ஸ்ரீ பாதுகைகளை என்னிடம் அளிக்குமாறு அவர் மனைவியிடம் முன்னேற்பாடு செய்தது என் கண்களைப் பனிக்கச் செய்கின்றது.

## திருமதி ருக்மணி பாய்

இவர் லேடி வெலிங்டன் ஆரம்பப் பள்ளி ஆசிரியையாக பணியாற்றியவர். 'டி' பிளாக்கில் ஸ்வாமிகள் தங்கியிருந்த போது அவரை தரிசிக்க வருவார். பிறகு எங்கள் வீட்டிற்கும் அடிக்கடி வந்து போவதுண்டு. அப்போதெல்லாம் தனிப்பட்ட முறையில் என்னை அழைத்து ஸ்ரீ ஸ்வாமிகள், ஸ்ரீ வேங்கடேஸ்வரைப் பற்றி அருமையாக எடுத்துக் கூறுவார். எனக்கு சகுண தியானப் பயிற்சியை முதன் முதலாக திருமதி ருக்மணி பாய் அவர்கள்தான் கற்றுக் கொடுத்தார்கள். தெலுங்கை தாய் மொழியாகக் கொண்டவர்கள். பூனா பல்கலைக்கழகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றவர். இவர் சிறு வயதிலிருந்தே ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அளவு கடந்த பக்தியும் ஈடுபாடு கொண்டவர்கள். ஸ்ரீ ஸ்வாமிகளை அவதார புருஷனாக கண்டவர். சாதனை நிலையில் வெகு தூரம்



முன்னேறியிருந்த அவர் அதனை தன் எழுத்துக்களில் வெளிப் படுத்தியிருக்கிறார். ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி தன் சொந்த அனுபவங்களை 'மை குருதேவ்' என்று ஆங்கிலத்திலும் ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஞான பூமி மற்றும் பாத ஸஹஸ்ர நாமம் என்ற தெலுங்கிலும் புத்தகங்களாக எழுதியுள்ளார். அவைளில் சில துளிகள் இதனைத் தொடர்ந்து இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. இவர் பள்ளியிலிருந்து ஒய்வு பெற்ற பின் மேல் மாயில் ஆசிரமம் சென்று தன் உடைமைகளை ஆசிரமத்திற்கு ஒப்படைத்து அங்கேயே தன் வாழ்நாளை கழித்து தன் குருநாதரின் பாதத்தினை அடைந்தார்.

## ஸ்ரீ விலக்ஷண குரு ஞான சிகரம்

திருமதி ருக்மணிபாய்

*ஸ்ரீ விலக்ஷணானந்த ஞான சிகரம்*
*ப்ரசண்ட பாஸ்கர ஆத்மா நந்தம்*
*கோடி சூர்யசமான விலக்ஷணானந்தம்*
*ஞானபூமி ஸ்ரீ விலக்ஷணா னந்தம்*
*நமஸ்தே நமஸ்தே நமஸ்தே*

ஓம் தத் ஸத்

ஸ்ரீ குருப்யோ நம :

## ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஞானபூமி ஆரம்பம்

நம் பாரத கண்டத்தின் வடபாகத்தில் இமயமலைகள் வரிசை வரிசையாக உள்ளன. இதில்புனித நதிகளான கங்கை, ஸரஸ்வதி, யமுனை முதலியவைகள் உள்ளன. இது நம் தேசத்தின் சிரசு பாகம் ஆகும். இது ஞானிகளும் யோகிகளும் வாழும் புனித தேசமாகும். எங்கு பார்த்தாலும் ஞானிகள் நிர்வாண சந்யாசிகள், யதிகள், முனிவர்கள், ஜடாதாரிகள் முதலானவர்கள் கங்கை, ஸரஸ்வதி, யமுனா போன்ற நதிக் கரைகளில் விடியற்காலத்தில் யோகாப்யாசத்தில் அமர்ந்தி ருப்பதே கண்கொள்ளாக் காட்சியாகும். சூர்யோதயத்தில்

இதைப்பார்ப்பது மிகச் சிறந்ததாகும். சூரியன் உதயமாகும் பொழுது அவருடைய பிம்பம் சிவப்பு நிறத்துடன் தோன்றுவது அக்னியைப்போலிருக்கும். சூரியன் மேலே வரவர அவருடைய ஸஹஸ்ர கிரணங்கள் நான்கு பக்கமும் விரிந்து நம் பாரத தேசம் தங்கத்தால் செய்ததுவோ அல்லது இரண்டா வது ஸ்வர்க லோகமோ என்று தோன்றும். இது பாரத மக்களின் தாய்நாடு ஆகும்.

யோகாசனத்தில் அமர்ந்திருக்கும் யோகிகள், ஞானிகள் ஜபதபங்கள் செய்யச்செய்ய அதன் சக்தியானது அவர் களுடைய சிரசில் பிரகாசிக்கிறது. அவர்களுடைய முகமானது தாமரையைப்போல் மலரும். அவர்களுடைய பார்வையானது ப்ரம்மத்தில் இணைந்துவிடும். உச்சியில் இருக்கக் கூடிய ப்ரம்மரந்தரமானது தானே திறக்கும். சிரசில் ஸஹஸ்ரதளபத்மம் ஜ்வலிக்கும். குண்டலினி சக்தி விரிவடைந்து ஞான சூரியன் உதயமாகும். எல்லாம் ப்ரம்ம மயமாகவும், ஆனந்த மயமாகவும், ஜோதியாகவும் தெரியும். இது ஞானிகள் உச்சநிலை. ஞானி களின் சிகரம் ஞானிகளின் ப்ரம்மானந்தம் முதலானவை யாகும் இது சிறந்தது, இதற்கு ஈடு இணை ஏதுமில்லை, இது விலக்ஷணமானது.

இதன் பின்பு ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஞானபூமியைக் காண்போம். இது மிகவும் ஆழமானது; கண்களுக்கு புலப்படாதது; ரகசியமானது; கோடியில் ஒருவருக்கே கிடைக்கும். இந்த ஞான ரத்தினத்தை நம் பெரியோர்கள் மிகவும் ரகசியமாகவே வைத்திருந்தனர். சாதாரண ஜனங் களுக்கு இது இருப்பதாகவே தெரியாது. எல்லாம் மாயத்தால் மூடியுள்ளது. வெங்காயம் எவ்வாறு தோல்களினால் மூடப் பட்டு உள்ளதோ அதுபோல், ஆத்மா அல்லது ஆத்ம ஞானம் மாயை என்னும் தோல்களினால் மூடப்பட்டு உள்ளது. நாம் நம் கண்களால் ஆத்மாவை காண முடியாது. பரமாத்மா சிருஷ்டித்த ப்ரபஞ்சத்தை மட்டும் காண முடியும். ஞானக் கண்ணால் மட்டுமே ஆத்மாவைக் காண முடியும். ஞானத்தை



அடையப் பிறந்தவர்கள் ஒரு சிலரே. அநேக ஜன்மங்களின் புண்ய பலன்களினால்தான் ஆத்ம ஞானம் அடைய முடியும். ஆத்ம தரிசனமே ஈரேழு பதினான்கு லோகங்களிலும் கிடைக் காத விலக்ஷணமான பரப்பரம்மம் ஆகும். இதற்கு அப்பால் எதுவுமே இல்லை. இந்த பரப்ரம்மம் ஒன்றேயாகவும், ஆனந்த மாகவும், ப்ரகாசமாகவும், ஞானமாகவும் இருந்து எங்கும் வியாபித்து, சர்வ சாட்சியாக உள்ளது. இதுவே சர்வ பூதங்களி லும் மறைந்திருந்து அகப்பொருளாக உள்ளது. எல்லாவற்றிற் கும் மூலப் பொருளாகும். அனைத்துக்கும் சக்தியளிக்கக் கூடியது. எதுவும் நெருங்காதபடி தனித்து நிர்குணமாகி உள்ளது. இந்த ஆத்ம தரிசனம் செய்த ஸ்ரீ விலக்ஷணானந்த குரு மஹராஜ் ஒரு பெரிய ஞானி ஆவார். அவருக்கு நிஷ்டை சர்வசகஜமாக வந்துக் கொண்டிருந்தது ஸமாதியில் இருக்கும் பொழுது தோன்றக் கூடிய ஆத்ம ஸ்திதியானது, அவர் சாதாரண நிலையில் இருக்கும் பொழுது கண்ணை மூடிக் கொண்டாலே புலப்படும். அவர் சாக்ஷாத் பரப்ரம்மமே மனிதராகி பூமியில் அவதரித்தார்.

## ஸ்ரீ விலக்ஷணானந்தரின் தவக்கோலம்

ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஆண்டுக்கு ஒருமுறை சிகரங் களுக்கும் குகைகளுக்கும் சென்று தவம் செய்து, தன் சக்தி களை விருத்தி செய்தார். அவர் தவம் செய்த இடங்கள் பொதிகைமலை, தாமிரவருணி நதி தீரம், சபரிமலை, திருப்பதி மலையில் இருக்கும் குமாரதாரா முதலானவை ஆகும். குமாரதாரா என்பது இவருடைய தவபூமியாகும். ஸ்ரீ மஹா விஷ்ணு க்ஷீர சாகரத்தில் ஆதிசேஷரின்மீது பள்ளிகொண்டு நான்கு மாதங்கள் தவம் செய்ததுபோல், ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஆண்டிற்கு ஒருமுறை குமாரதாரா குகையில் தவம் செய்தார். இவருடைய கோத்ரம் விஸ்வாமித்ர கோத்ரம். இவர் விஸ்வா மித்திரரைப்போல் கோர தபஸ் செய்தவர். இவர் தபஸ்ஸில் இருக்கும்பொழுது இவரை தரிசிப்பது மிகவும் விசேஷமாகும்.

தபஸ்விகள் எவ்வாறு அன்ன ஆகாரமின்றி கடினமான தபஸ் செய்வார்களோ அதுபோலவே ஸ்ரீ விலக்ஷணானந்தரும் கடின மான தபஸ்சையே செய்தார். அவர் அவ்வாறு கடினமான தபஸ்ஸில் இருக்கும்பொழுது அந்த குமாரதாரா குகையானது இரண்டாவது இமயமலையோ என்று நினைக்கும்படியாக காட்சியளித்தது. இமயமலையில் ஆயிரம் ஆண்டுகளாக தபஸ் செய்யும் தபஸ்விகளின் உருவமானது உடல் மெலிந்து முகம் பழுத்து, கண்கள் மட்டும் எவ்வாறு ஜோதியுடன் விளங்குமோ அவ்வாறே ஸ்ரீ விலக்ஷணானந்தர் தபஸில் இருக்கும்பொழுது காண்போருக்கு உடல் மெலிந்தும், முகம் பழுத்தும், கண்கள் மட்டும் ஜோதியுடன் காட்சியளித்தது. அப்பொழுது அந்த குமாரதாரா குகையானது, இவருடைய தவசக்தியால் நிறைந் திருந்தது. அப்பொழுது கோடிய சூர்ய ஒளியுடன் பிரகாசித்துக் கொண்டிருந்தார்.

ஸ்ரீ விலக்ஷணானந்தர் தபஸில் இருக்கும்பொழுது நாம் அவரைப் பார்த்தால், நாம் செய்த பாவங்கள் தீர்ந்து புண்ணியம் ஏற்படும். நாம் அவருடன் பேச நேர்ந்தால், அது நாம் செய்த பாக்கியமாகும். அவருக்கு பால், பழம் சமர்ப்பித்தால் நம் ஜன்மம் சாபல்யமாகும். அவர் அருகில் நாம் இருக்கக் கூடு மானால் நமக்கும் சகஜமாக நிஷ்டை ஏற்பட்டு ஞானம் உண்டாகும். அந்த ஞானம் உண்டாவது எப்படி என்றால், ஸ்ரீ சங்கரர் கல்லால விருக்ஷத்தின்கீழ் வீராசனத்தில் அமர்ந்து தபஸ் செய்தபோது, அவருடைய சிஷ்யர்கள் நால்வரும் அவரையே கல்பகோடி காலம் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது இவர்களுக்கு ஞானம் உண்டாயிற்று என்று ஆன்றோர் கூறுவர். அதுபோலவே ஸ்ரீ விலக்ஷணானந்தர் அருகில் நாம் இருந்தால் நமக்கும் ஞானம் உண்டாகும். சிஷ்யர்கள் ஞானம் பெற "குரோஸ்து மௌனம் வ்யாக்யாணம் சிஷ்யாத் விச்சன்ன சம்ஷயஹ" என்ற வாக்கியத்தை அடிப்படை யாகக் கொள்ள வேண்டும். இது ஸ்ரீவிலக்ஷணரின் ஞானபூமி; இது விலக்ஷணமானது.



பாரத தேசத்தின் தெற்கு பாகம் பாதம் என்பர். அங்குள்ள ஜனங்கள் கர்ம மார்க்கத்தை அனுசரிப்பார்கள். இதன் மத்ய பாகம் ஹ்ருதய கமலம்போல் ஆகும். இங்கு பக்தி மார்க்கத்தைக் காணலாம். இதன் சிரசு பாகத்தில் ஞானிகள் உள்ளனர். இது ஞானபூமி ஆகும். அது போலவே ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஞானபூமி குமாரதாரா. இவர் ஞானிகளின் தலைவர்; ஞான சிகாமணி, இவர் ஞானச் சுடர். இதைப் படிப்போருக்கு நிச்சயம் ஓரளவேனும் ஞானம் பிறக்கும் என்பதில் ஐயமில்லை.

வாழ்க விலக்ஷணானந்தரின் சிஷ்யர்கள்!
வளர்க விலக்ஷணரின் பெருமைகள்!!

## ஸ்ரீ விலக்ஷணானந்தரின் சபை

இது ஒரு கல்ப விருக்ஷம், இதன் கீழ் நவரத்தினங்கள் பதித்த நான்கு வேதங்களும் நான்கு தூண்களைக் கொண்ட மண்டபத்தை உடையது. இந்த மண்டபத்தின் மத்தியில் சிந்தாமணி என்ற பீடத்தை உடைய சிம்ஹாசனம் உள்ளது. இப்பீடத்தின்மீது அவதார புருஷரான ஸ்ரீ விலக்ஷணானந்தர் அமர்ந்துள்ளார். இவர் மானிடர்களை ஆதரிக்க வந்த சந்நியாசி ரூபமாக வந்த பரப்பரம்மமே ஆவார். தேவலோகத்தில் சங்கரர் வீராசனத்தில் அமர்ந்து தேவர்களுக்கு உபதேசம் செய்வது போல் பூவுலகில் உள்ள மானிடர்களை முன்னேற்ற மடைய செய்வதற்காக வீராசனத்தில் அமர்ந்து தவக்கோலம் கொண்ட மஹா புருஷர் ஆவர். இவருடைய தபோ சக்தி, தேஜஸ், ஆத்ம ப்ரகாசம், நான்கு பக்கமும் வீசுகின்றது. இவருடைய தோற்றம் ஞான ஒளி வீசுகின்ற மஹா புருஷனோ என்று நினைக்கும் படியாகத் தோன்றுகிறது. இருபுறமும் நான்கு வேத புருஷர் களும், நான்கு வேதங்களை பாடுகிறார்கள். வெண்சாமரம் வீசு கிறார்கள். நாரதர், தும்புரர் முதலானவர்கள் வீணை மீட்டு கிறார்கள். மும்மூர்த்திகளும் முக்கோடி தேவர்களுடன்

சபைக்கு வந்துள்ளனர். அஷ்ட லக்ஷ்மிகள் இந்த சபையை அலங்கரிக்கின்றனர். த்வாத சாதித்தியர், பதினோரு ருத்திரர்கள், அஷ்ட வசுக்கள் சபைக்கு வந்தனர். காந்தர்வர்கள், கின்னர்கள், கிம்புருஷர்கள் முதலானவர்கள்கூட வந்தனர். ருஷிகள், முனிவர்கள், யோகிகள், ஞானிகள் முதலானவர்கள் வந்து ஜபதபங்கள் செய்து கொண்டிருந்தனர். மேள தாளத் துடன் சபை ஆரம்பமாகியது. தேவதைகள் சிலர் விமானத்தி லிருந்து புஷ்பமாரி பொழிந்தனர். 'ஆகை துந்துபி' வாத்தி யங்கள் முழங்கினர்.

இருவர் முன்னுக்கு வந்து 'ஸ்ரீ விலக்ஷணானந்த குரு மஹராஜருக்கு ஜெய்' என்று கூறினார்கள். மற்ற இருவர் 'ஜெய விஜயீபவ' என்று சொன்னார்கள். சிலர் சிம்ம கர்ஜனையாக 'பராக் பராக்' என்று கர்ஜித்தனர். பிறகு இரண்டு யானைகள் பூர்ண கலசத்துடன் வந்து, துதிக்கையால் நமஸ்கரித்து கலசங்களை வழங்கின. 1. பிரம்மா ஸரஸ்வதி ஸமேதராக வந்து வணங்கி தாமரைப் பூமாலையை சமர்ப்பித்தனர். 2 ஸ்ரீ விஷ்ணு லக்ஷ்மி சமேதராக வந்து வணங்கி துளசிதள மாலையை வழங்கினர் 3. ஸ்ரீ ஈஸ்வரர் பார்வதி ஸமேதராக வந்து வணங்கி பில்வதள மாலையை சமர்ப்பித்தனர். 4. பிருகு இந்திரன் சந்திரன் முதலான ராஜாக்கள் ரத்ன கிரீடத்துடன் வந்து இந்த உயர்ந்த மஹா புருஷரை வலம்வந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சரணம் சரணம் சரணம் என்று கூறினார்கள். அப்பொழுது ஸ்ரீ விலக்ஷணானந்தரின் பாதங்கள் இந்த ராஜாக்களின் க்ரீடத் தின் நடுவே அளித்த காட்சி ஒரு பெரிய தாமரைப்பூவின் நடுவே மொட்டு விரிவதுபோல் இருந்தது. எங்கு பார்த்தாலும் மணிகளின் காந்தஒளி மணிமய மண்டபத் தினுடைய முத்துக்கள் ரத்னங்களுடைய ஒளி தேவதைகளின் தபோ சக்தியின் ஒளி, த்வாத சாதித்யருடைய ஒளி, முனிவர்கள், ருஷிகளினுடைய தபோ சக்தி ஒளி, யோகிகள், ஞானிகளினுடைய ஒளி முதலான ஒளிகள் சேர்ந்து அனை வரின் கண்ணையும் பறித்தன. சிம்ஹாசனத்தில் வீற்றிருந்த



ஸ்ரீ விலக்ஷண குரு மஹராஜ் தேஜோமயமான உதய சூரியனைப் போல் காட்சியளிக்கிறார். எல்லா ஒளிகளும் சேர்ந்து ஞான ஒளி வீசுவதுபோல் இருந்தது. எங்கு பார்த்தா லும் மங்கள வாத்யங்களும் சுப வாத்யங்களின் கோஷத்துடன் நிறைந்திருந்தது.

1. தேவ கன்னியர்கள் : பயபக்தியுடன் நமஸ்கரித்து தேவகானம்பாடி சரணம் என்று கூறி திரும்பினர்.

2. பக்தர்கள் : பக்தி கீதங்கள் பாடினர்.

3. ஆர்த்தர்கள் : இதயகீதங்கள் பாடினர்.

அனைவரும் சேர்ந்து : ஓ பர வாசுதேவா! சுவாமி பரமபுருஷா! ஆதிமத்யாந்த ரஹிதா அகிலாண்ட கோடி ப்ரம்மாண்ட நாயகா ஜகதீஸ்வரா, பராத்பரா, உனக்குச் சரணம் சரணம் என்று கூறினர். வேத பிராம்மணர்கள் புருஷசூக்தம் கூறி ஸ்தோத்திரங்கள் பண்ணினர்.

*ஸ்ரீ விலக்ஷண குருவே உன்னையே நம்பியிருக்கிறேன்*
*ஸ்ரீ விலக்ஷண குருவே உன்னையே சரணம் என்கிறேன்*
*ஸ்ரீ விலக்ஷண குருவே உன்னையே வேண்டுகிறேன்*
*ஸ்ரீ விலக்ஷண குருவே நீயே என் ரட்சகன் என்று கூறுகிறேன்.*

*சரணம் என்று வந்தவர்களை ஆதரிக்கக் கூடிய மகிமை*
*உனக்கு இருக்கிறதல்லவா?*
*அனாதர்களுக்கு நானாதநானாக விளங்கும் தன்மை*
*உமக்கு இருக்கிறதல்லவா?*
*தீனர்களை ஆதரிக்கக்கூடிய பிரபு நீயல்லவா?*
*பதிதபாவனா என்ற பெயர் உனது அல்லவா?*
*தாய் தந்தையும் எனக்கு நீயே என்று உன்னை*
*சரணம் அடைந்தேன்*
*எல்லா உறவினர்களும் எனக்கு நீயே என்று உன்னை*
*சரணம் அடைந்தேன்*
*நீயே எனக்கு எல்லாம் என்று உன்னை*
*சரணம் அடைந்தேன்.*

*நீயே என் தெய்வம் என்று உன்னை சரணம் அடைந்தேன்*
*உன்னையே சரணம் என்றேன் ஸ்ரீ விலக்ஷண குருவே*
*நீயே கதி என்றேன் ஸ்ரீ விலக்ஷண குருவே*
*நீயே என் லட்சியம் என்றேன் ஸ்ரீ விலக்ஷண குருவே*

ப்ரபோ! அன்று சரணம் என்று வந்த திரௌபதியைக் காப்பாற்றினாய் அல்லவா?

கஜேந்திரனின் முறையைக் கேட்டு ஓடிப்போய் அவனை ரட்சிக்கவில்லையா?

விபீஷணம் சரணாகதி என்ற உடனே அவனை ஆதரிக்கவில்லையா?

ப்ரபோ அதுபோல் என்னை ரட்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறனே. உனக்கு சரணம். திரும்பத் திரும்ப உனக்குச் சரணம் என்று வேண்டுகிறேன். சரணம் சரணம் சரணம்

கண்ணீர் வடிய குரு விலக்ஷணானந்தரின் பாதங்களில் விழுந்து சரணம் சரணம் என்று கூறினேன்.

ஸ்ரீ விலக்ஷண குரு மஹராஜ் உனக்குச் சரணம்

உன்னை சரணம் அடைய வந்திருக்கிறேன்.

**சரணம்**

சபையில் பத்து நிமிஷங்கள் அமைதி நிலவின. பிறகு அனைவரும் சேர்ந்து 'ஸ்ரீவிலக்ஷண குரு மஹராஜருக்கு ஜெய்' என்று மூன்று முறை கூறினர். பிறகு ஸ்ரீ விலக்ஷணந் தரை நமஸ்கரித்து விபூதி ப்ரஸாதத்தை எல்லோரும்ம் வாங்கிக் கொண்டு வந்தவர்கள் அனைவரும் அவரவர்கள் இடத்திற்கு சென்றனர்.

மங்கள வாத்யங்கள் முழங்கிக் கொண்டிருந்தன.

சுபமஸ்து ஓம் தத் ஸத்



**ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஹ்ருதய கமலம்**

ஸ்ரீ விலக்ஷணானந்த குரு ஸ்தோத்திரம்

*நமஸ்தே ஹ்ருதயாநந்தம் ஸ்ரீ விலக்ஷண குருவே*
*நமஸ்தே ப்ரம்மானந்தம் ஸ்ரீ விலக்ஷண குருவே*
*நமஸ்தே சதானந்தம் ஸ்ரீ விலக்ஷண குருவே*
*நமஸ்தே ஆத்மானந்தம் ஸ்ரீ விலக்ஷண குருவே*
ஓம் தத் ஸத்

ஸ்ரீ விலக்ஷணானந்தரின் ஹ்ருதய கமலம் மிகவும் அற்புதமானது. இந்த ஹ்ருதயம் சரீரத்தின் நடுவில் அமைந் துள்ளது. இது எப்படி அமைந்துள்ளது என்றால் நகைகள், நாணயங்கள், நவத்திரனங்கள், தனங்கள் முதலானவை வைக்கக்கூடிய அறையைப்போல் அமைந் துள்ளது. இந்த அறையை கருவூலம் என்று கூறுவார்கள். இந்த அறை ரகசியமாகவும், பந்தோபஸ்துடனும் இருக்கும். அதுபோலவே நம் சரீரம் என்கிற கிரஹத்தில் ஹ்ருதயத்தின் நடுவே பரமாத்மா வசிக்கிறார். அவருக்கு ஹ்ருதய கமலவாசன் என்ற பெயர். அவர் எதிலும் தொடாப்பு கொள்ளாமல் இருக்கிறார். பரமாத்மா ஹ்ருதய கமலத்தில் இருப்பதால் ஹ்ருதயம் மிகவும் விசேஷமானது.

இந்த ஹ்ருதய கமலம் பக்திக்கு இடமாக உள்ளது. சிறந்தது இது எப்படியென்றால், இந்த தேசத்தை ஒரு மானிடனாக கற்பனை செய்து, அதற்கு பாரத தேசம் என்று பெயர் வைத்தனர். இதன் பாதங்களே கன்யாகுமாரி ஆகும். அங்குள்ள ஜனங்கள் அநேகமாக கர்ம மார்க்கங்களை அனுசரிப்பார்கள் என்பர்.

இந்த பாரத தேசத்தின் மத்ய பாகம் என்பது ஹ்ருதய கமலம் ஆகும். அவை பம்பாய், மஹாராஷ்டிரம், குஜராத், விந்திய மலை, ஆரவல்லிமலை முதலானவைகள். இந்த பிராந்தியத்தில் உள்ள ஜனங்கள் பக்தி மார்க்கத்தை

அனுசரித்தனர். அவர்கள் 15வது சகாப்தத்தில் பக்தியை விசேஷமாக கொண்டானார்கள். அங்கு பக்தி பாவம் பிரவாகித்தது. எங்கு பார்த்தாலும் பக்தர்கள் இருந்தனர். அவர்கள் பக்தி பாவத்தில் மூழ்கினர். பக்தி சமுத்திரம் பெருக்கெடுத்தது. தேசமனைத்தும் பக்தியில் மறைந்தது. இங்குள்ள ரத்தினங்கள், கோரா கும்பா, சாம்பா, ஞானதேவ், நாமதேவ், சோபானதேவ், முக்தாபாய், துக்காராம், ராமதாஸ், லத்தீப் முஸல்மான், ஜனாபாய், சக்குபாய், மீரா, கிருஷ்ணபாய் முதலானவர்கள். இவர்கள் பயபக்தியுடன் இருந்து பக்தி சிகரத்தை அடைந்தனர். இது பாரத தேசத்தின் ஹ்ருதயபாகம் ஆகும்.

பாரத தேசத்தின் தலைபாகம். இது வடக்கே உள்ள பிரதேசங்கள் ஆகும். ஹிமாலய பர்வதங்கள் முதலானவையும் ஆகும். இங்குள்ள ஜனங்கள் ஞானிகள் தபசிகள் யோகிகள். இந்த நாட்டிற்கு ஞானபூமி என்று பெயர். இப்பொழுதும் இங்குள்ள குகைகளிலும் சிகரங்களிலும் ஞானிகள் உள்ளனர்.

ஸ்ரீ விலக்ஷணானந்தருடைய ஹ்ருதய கமலம் அநேக இதழ்களுடன் சோபிக்கின்றன. இந்த ஹ்ருதய கமலம் முழுவதும் மலர்ந்து விகசிக்கிறது. வாத்ஸல்யத்துடன் நிரம்பியுள்ளது. தாயன்பைக் காட்டிலும் சிறந்தது. இவர் தர்ம ஸ்தாபனத்திற்காகவும், தேசத்தையும், ஜனங்களையும் ஆதரிக்க வந்த பெரிய அவதார புருஷர்; சாட்சாத் பரப்ரம்மமே. மனிதருபத்தில் வந்து பூமியில் நடமாடிக் கொண்டிருந்தார். அவர் அநேக தெய்வ சக்திகளுடன், அமானுஷ்யமான பல காரியங்கள் பண்ணினார். பூமியின்மீது நிலையான சுகத்தை உண்டு பண்ணினார். உத்தம குணங்களையும் சத்தியத்தையும் தர்மத்தையும் எங்கும் பரப்பினார். திக்கு இல்லாதவர்களுக்கு தெய்வமே துணை என்பதற்கேற்றவராக உள்ள இந்த மஹா புருஷரை வர்ணிக்க நான் தகுதி உள்ளவளா? சிறிய வாயில் பெரிய லட்டு போட்டுக் கொண்டதுபோல் உள்ளது.



இவருடைய ஹ்ருதயம் அநேக சக்திகளை உடையது. அதில் முதலானது ஆகர்ஷண சக்தி. அது எப்படியென்றால் தன் பக்தர்களை ஆகர்ஷிக்கும் அபூர்வ சக்தி. பக்தர்களின் ஹ்ருதயத்தை கயிறு போட்டு இழுப்பதுபோல் தன்வசம் இழுக்கும். இப்படிப்பட்ட மஹா புருஷரை ஒருமுறை தரிசித்தால்போதும், அவர்களுடைய ஹ்ருதயம் தானாக அவரிடம் செல்லும். பெரியோர்கள் முதல் குழந்தைகள் வரை எல்லா வயது மனிதர்களும் இவருடைய இருப்பிடத்திற்கு வந்தால், இவர் வசம் ஆகிவிடுவார்கள். இவரை அடைய நினைப்பவர்கள் தங்கள் குடும்பம் மனைவி உற்றார் உறவினர் முதலானவர்களை விட்டு தாமாகவே வந்த சேருவர். அவ்வாறு நினைப்பவர்கள் அன்ன ஆகாரம், உறக்கமின்றி, இவரை அடைவதையே குறிக்கோளாகக் கொண்டு இருப்பர்.

ஸ்ரீ கிருஷ்ணாவதாரத்தில் ஜட, அஜட வஸ்துக்கள் எல்லாம் அவருடைய ஆகர்ஷண சக்தியினால் அவருடைய பாதத்திற்கு வந்து சேர்ந்துக் கொண்டிருந்தன. அவ்வாறே இவ்விலக்ஷணானந்த குருவும் இருந்தார். இவர் தன் திருஷ்டியினால் மட்டுமே பக்தர்களை தன் வசம் அழைத்தார். இவருடைய போதனா சக்தி அபாரமானது.

சிஷ்யனை பரிசோதித்து, அவனுக்குத் தகுந்தபடி கற்பிப்பது இவருடைய விசேஷ குணங்களில் ஒன்று ஆகும். இவருக்கு ஞான சக்தி தோன்றியவிதமே ஒரு தனி கலையாகும். இவர் எல்லா வித்தைகளிலும் கரை கண்டவர். ஸ்ரீ விலக்ஷணானந்தரின் மோகனா சக்தியைப்பற்றி கூற முற்படுவது சாத்யமாகாது. இவருடைய சுந்தரவதனம் ஜனங்களை அவர்பால் பக்திக் கொள்ளச் செய்யும். ஜனங்கள் இவரிடம் காட்டுகின்ற அன்பையும், பரிவையும், அடக்கத்தையும் காணும்போது, காண்போரும் சேர்ந்து, இவர் ஏதேனும் மாய வலை வீசுகிறாரோ என்று நினைக்கும்படியாக இருக்கும். இவருடைய இன்மொழிகளும், காந்தவர்களையே, தோற்கடிக்

கும் படியான மதுரகானத்தையும், ஜனங்கள் கேட்ட அளவில், மக்களுடைய ஹ்ருதயங்கள் ஸ்ரீ விலக்ஷணானந்தருடைய பாதங்களைப்போய் சேரும். இவருடைய அபமஹதம் சிஷ்யன் களின் சிரஸில் வைத்தால் அவர்களின் ஜீவனம் புனிதம் அடையும். இவர் சிஷ்யர்கள் தன்பால் எவ்வளவு நம்பிக்கையும் பக்தியும் வைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு அவர், சிஷ்யர்களுக்கு தாய் தந்தையைப் போல் உடனிருந்து எந்த விதத்திலும் இன்னல் வராதபடி ரட்சிப்பார். இப்படிப்பட்ட அற்புதமான ஸ்ரீ விலக்ஷணானந்தருடைய ஹ்ருதய கமலம்.

அம்ஸவாகன விமானத்தில் ஸ்ரீ விலக்ஷணானந்தர் புன்சிரிப்புடன் அமர்ந்திருந்தார். அவரைச்சுற்றி முப்பத்து முக்கோடி தேவர்களும் பக்தர்களும் அவருடைய த்யானத் திலேயே ஈடுபட்டிருந்தனர். அனைவரும் ஆகாயத்தில் பறக்கக்கூடிய விமானம் என்னும்படியான ஹ்ருதய கமலத்தில் ஒன்றிப்போய் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தனர். அத்தனை ஹ்ருதயங்களின்மீதும் நிலவு வீசியதால் அவை நிலவைவிட பிரகாசமாக ஒளி வீசியது. அந்த குளிர்ந்த நிலவு பட்டதில் அவர்கள் மேலும் மெய் மறந்தனர். ஸ்ரீ விலக்ஷணானந்தருடைய ஹ்ருதய கமலம் எவ்வளவு சிறந்தது, எவ்வளவு புனிதமானது, எவ்வளவு இன்பமயமானது என்பது அன்பர்கள் அறிவார்கள்.

ஓம் தத் ஸத்

### திரு. மாணிக்கம் ஆச்சாரி

மேல்மாயிலை சார்ந்த பாமரர். தனியாக வாழ்ந்தவர். திரு. பாஷ்யத்தின் சிநேகிதர். முதன்முறையாக மேல்மாயில் வந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் பிக்ஷைக்கு உணவு சமைக்க யார் தகுதி யானவர் என்று ஊர்காரர்களும், இவரும் குழப்பத்திலிருக்க ஸ்வாமிகள் மாணிக்க ஆச்சாரியாயை அழைத்து, ''உன் பெயரை வேங்கடேசன் என்று மாற்றிக் கொள். நீயே எனக்கு எது வேண்டுமானாலும் சமைத்து எடுத்து வா'' என்று கட்டளையிட நெகிழ்ந்த மாணிக்க ஆச்சாரி அவரை தன் இதயக் கோயிலில் ஏற்றி வணங்கினார்.




### திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி



திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி

மேல் மாயிலைச் சார்ந்த இவர் ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தராவார். பாரம்பரிய சித்த வைத்தியரான இவர் ஸ்ரீ ஸ்வாமி களின் பிரத்யேக தயாரிப்பான "பரமாத்மா தைலம்" என்ற சர்வரோக நிவாரண எண்ணெயை அவருடைய வைத்திய சாலை யின் மூலம் வெளியூர்களுக்கு வழங்கி ஸ்ரீ ஸ்வாமி களின் பெருமையினை அனைவருக்கும் பறை சாற்றியவர். அதற்கான விளம்பரத்தை அடுத்தப் பக்கத்தில் காணலாம். அக்காலத்தில் மேல்மாயிலில் நடந்தேறிய ஸ்ரீ ஸ்வாமிகளின் குரு பூஜை, ஜெயந்தி போன்ற வைபவங்களில் இவர் இல்லத்தில் பக்தர்களுக்கு விருந்தோம்பல் மிகச் சிறப்பாக நடைபெற்றது.






## திருமதி சுந்தரி அம்மாள்

இவரைப்பற்றி நினைக்கையில் உயரம் குறைவான பார்வைக்கு எளிமையான தோற்றமுடையவர்கள். தெலுங்கு அந்தண ஆசார முறைப்படி ஆடை அணிந்திருப்பார். தோற்றத்தில் சிறியதாக இருந்தாலும் குரலினில் அளப்பரிய இனிமையையும் கம்பீரமும் பக்தியையும் தேக்கி வெளிப் படுத்த வல்லவர். பெரம்பூருக்கு அருகாமையில் உள்ள செம்பியம் என்ற இடத்தில் வசித்து வந்தார். ஒவ்வொரு முறை யும் தானே திரித்த பூத்திரிகளையும், விளக்கு, தாம்பாளம், எண்ணெய் முதலிய ஆரத்திக்குத் தேவையான சாமக்கிரியை களை எடுத்து வருவார். இன்று வரை நித்ய பூஜைகளிலும், குருபூஜை, ஜயந்தி விழாக்களிலும் நான் பாடும் பல பாடல்கள் அவரிடமிருந்து கற்றுக் கொண்டவைகளே. தெலுங்கில் திருமலையானை பள்ளி யெழுப்பும் பாடலும், ஸ்ரீ ஸ்வாமி களின் வரவேற்பு பாடலும் மிக அருமையானதொன்று.

**ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸ்வாகதம் பாட்டு**

*பல்லவி*

*ஜயது ஜயது முனிவரேநா*
*ஸ்வாகதம் பவாது தே*
*ஸ்வாகதம் பவாதுதே*
*புனராக தம்ச பவதுதே*

*சரணம்*

*பக்ஷிவிரஹிதா பிரசங்க*
*பவதேஜவைபவா*
*சிக்ஷிதாத்ம நியம பக்த*
*தீஷித விர தாட்யதே (ஜயது)*

*சம்சி தௌக விதளி தார்த்த*
*ஜால வாக்விலாஸதே*
*சாரதத்வ போதசீல*
*சாந்த சுகுண தேசிகதே (ஜயது)*

*வசுதராதி வர்கசதுரவாசி தாத்ம தாமதே*
*விஸத வாக்ய விபவ ஸ்ரீமான்*
*விலக்ஷணானந்த ஸ்வாமிநே* *(ஜயது)*

**வேங்கடேசரின் பள்ளி எழுச்சி**

*வெங்கடேசா நீவு வேத பூஷணுடவு*
*சங்கு சக்ரதார மேலுகோ*
*பஷினி பிந்துல தோனு பன்னிறு தெச்சினாறு*
*பங்கஜ நாப நீவு மேலுகோ*
*ரமணா தெல்லவார வச்சேனு*

*திக்கு திக்குலனுண்டி மிரக்கு செலின் சுடகு*
*தீனுல ஒச்சினாரு மேலுகோ*
*வச்சின பருஷகு வரமுலிஸ்து தண்டிரி*
*வரத வெங்கட்ரமணா மேலுகோ*
*ரமணா தெல்லவார வச்சேனு*

*நவரத்ன மைனட்டி சொம்முலு தரயிம்ப*
*நாரததும்புரு லொச்சி னாரு மேலுகோ*
*பதிவேலு சேஸே பத்ஸலபதகமு*
*மகந்து வாரம்பினாரு மேலுகோ* *(ரமணா)*

*நகரி வாருநீகு குர்ரமு கத்தியு*
*போட்டனம்பினாரு மேலுகோ*
*கோடி வேலு சேஸே கலிகதுராய நீகு*
*கோவிந்த ராஜுலு லம்பினாருமேலுகோ* *(ரமணா)*

*சக்கர பொங்கலித்த்யோ நமுதலு*
*பள்ளரமு லொச்சினாயி மேலுகோ*
*அலமேலு மங்கதோ ஆரகிந்துஸ்வாமி*
*ஐயா வேங்கடரமணா மேலுகோ* *(ரமணா)*

*மேலுகோ வய்யா மேலுகோ தண்டிரி*
*மேக ஸ்யாமள வர்ணா மேலுகோ*
*மேலுகோ நீ நித்ர கேளி கலாயனு*
*சேஷாசல சயனா மேலுகோ* *(ரமணா)*



பூஜை நடைபெறும் சமயத்தில் தேனினும் இனிய குரலினால் மதுரகவி ஸ்ரீனிவாச ஐயங்கார் எழுதிய "ஆசுர பயங்கர நிவாரணா" என்ற பாடல் மற்றும் சிலவற்றையும் பாடி முடித்தப்பின் தான் கொண்டு வந்திருக்கும் பூத்திரியினால் தாம்பாளத்தில் ஆரத்தி ஏற்றி 'க்ஷீராப்தி ஸ்ரீனிவாஸாய ஸ்ரீ வேங்கடேசாய மங்களம்' என்ற பாடலைப்பாடி பின் கற்பூர ஆரத்தியும் காண்பிக்க அச்சோதியின் ஜ்வாலையில் ஸ்ரீ ஸ்வாமிகளின் திருமுகம் கோடி சூரிய பிரகாசத்துடன் கருணையுடன் திகழ, பெறற்கரிய அத்திவ்விய காட்சி இன்றும் கண்முன் நிற்கின்றது.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஸித்தியடைந்த பிறகு ஸன்னியாசி களுக்கு பிரத்யேகமாக செய்யப்படும் அனைத்து அபிஷேக ஆராதனை முதலிய சாங்கிய கிரியைகளும் இவருடைய இல்லத்திலேயே முறைப்படி நடைபெற்றது. வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் விசேஷமாக அன்னதானமும் செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சி இவரின் தன்னலமற்ற குரு பக்திக்கு ஸ்ரீ ஸ்வாமிகள் அளித்த சிறந்த பரிசாகும். இவரது கலப்படமற்ற பரிசுத்த பக்தியின் பிரதிபலிப்பு இவர் தம் சொத்துக்களையெல்லாம் மேல்மாயில் ஆசிரமத்திற்கு சமர்ப்பித்து திரு. பாஷ்யம் அவர்களின் பராமரிப்பில் அங்கேயே வாழ்ந்து தன் குருவின் பாதத்தையடைந்தார்.

## திருமதி ஜெயம்மா

வைஷ்ணவ அந்தண குலத்தைச் சேர்ந்த திருமதி ஜெயம்மாவும் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அத்யந்த பக்தி கொண்டவர். வெகுளித்தனமாக கபடமின்றி எதையும் பேசுபவர். வரும் போதெல்லாம் ஸ்ரீ ஸ்வாமிகளின் பூஜைக்குத் தேவையான புஷ்பங்கள், பழங்கள் எப்போதும் எடுத்து வருவார். ஆரி முத்தாச்சாரி தெருவில் ஸ்ரீ ஸ்வாமிகள் இருந்தபோது அவ்வப் போது இரண்டு மூன்று நாட்கள் தங்கி வந்திருக்கும் அன்பர் களின் தேவைகளை கவனித்துக் கொள்வார். செல்வந்தரான



திருமதி ஜெயம்மா

இவர் தன் உடைமைகளையெல்லாம் சமாதி கோயில் எழுப்பு வதற்காகவே தானம் செய்தார். தன் இறுதிகாலம் வரை மேல் மாயில் ஆசிரமத்தில் திரு. பாஷ்யம் அவர்களின் பராமரிப்பில் தங்கியிருந்து ஸ்ரீ ஸ்வாமிகளின் சன்னதியிலேயே இறையடி சேர்ந்தார். ஆத்மார்த்தமும், பணிவும் கொண்ட குரு பக்திக்கு இவரொரு எடுத்துக்காட்டு.

## திருமதி ருக்மணி அம்மாள்



திருமதி ருக்மணி அம்மாள்



திருமதி ஜெயம்மாவின் இளைய சகோதரியான திருமதி ருக்மணியம்மா தன் அக்காவின் மூலம் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் பரிச்சயம் ஆனவர். குடும்பத்தின் சூழ்நிலை காரணமாக அடிக்கடி தரிசிக்க இயலாவிட்டாலும் எந்நேரமும் தியானத் திலேயே தன் இதயக் கோயிலில் ஸ்ரீ ஸ்வாமிகளை பூஜிப்பார். இந்த உன்னதமான அந்தர்முக பக்திக்கு பரிசாக ஸ்ரீ ஸ்வாமிகள் தானும், தன் குஹ்யாவதாரமான ஸ்ரீ வேங்கடேஸ்வர பரப் பிரும்ம தரிசனத்தையும் மாறி மாறி காட்சி தரும் அற்புதத் தினை திருமதி ருக்மணியம்மாளின் வாயிலாகவே கேட்ட றிந்ததுண்டு.

## திரு. பாபு



திரு. பாபு

திருமதி ருக்மணியம்மாவின் மகனான திரு.பாபு அவர் களும் தாயைப்போல் பிள்ளை; நூலைப்போல் சேலை என்பதற்கிணங்க ஸ்ரீ ஸ்வாமிகளை நேரில் சந்திக்காவிடினும் அவரிடம் அதிதீவிரமான ஈடுபாடு கொண்டவராவார். ஸ்ரீ ஸ்வாமிகளையும் ஸ்ரீ வேங்கடேஸ்வரரையும் எவ்வித பாகுபாடு மின்றி ஒரே கோணத்தில் தரிசித்து ஸேவை ஸாதித்து வந்தார்.

இவர் பெரியாழ்வாரை ஒத்து ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு மலர் கைங்கர்யம் செய்வதில் மிகுந்த விருப்பம் கொண்டவர். ஸ்ரீ ஸ்வாமிகளின் குரு பூஜைக்கும் ஜெயந்தி விழாவுக்கும் வெகு விமரிசையாக விசேஷ முறையில் பிரத்யேக மலர் அலங்காரம் செய்வதற்கு வேண்டிய தண்டு மாலைகள், துளசி மாலைகள், சரங்கள், உதிரிப் பூக்கள் போன்றவற்றை ஏராளமாக தருவித்து, தானே அதனை நேர்த்தியாக பார்த்து பார்த்து அலங்கரிப்பார்.

சென்னை விலக்ஷணானந்த சங்கத்தின் சார்பில் எங்கள் இல்லத்தில் நடைபெறும் பூஜையில் வைத்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமிகளின் குமாரதாரா தவத்தின் பெரிய அளவிலான படம் அவர் அளித்ததுதான். தினமும் அதற்கு மலர் சாற்றும்போது திரு. பாபுவின் ஞாபகம் எழுந்து அவர் தம் பிரிய குரு நாதருடன் இணைந்ததை உறுதிப்படுத்துகின்றது.

மாதந்தோறும் தவறாது திருப்பதிக்கு சென்று ஸ்ரீ வேங்கடேஸ்வரரது உத்ஸவங்களிலும், ஆர்ஜித ஸேவை களிலும் மிகவும் ஈடுபாட்டோடு கலந்து கொள்வார். ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆடி மாத திருப்பதி உபநிஷத் பாராயண பிரதக்ஷிண விழாவிற்கு தேவையான எல்லாவிதமான ஏற்பாடுகளையும் சிரத்தையாக திரு. கோவிந்தராஜனுக்குப் பிறகு தானொருவராகவே செய்து விடுவார். 2013 வருடம் ஜுலை மாதம் ஆடி மாத பூஜைக்கு அவருடன் நாங்களும் கலந்து கொண்டு அனுபவித்த தெய்வீக மனநிறைவு சொல்லில் வடிக்க இயலாது. அதுவே அவருடைய கடைசி பூஜையாக அமைந்ததை எண்ணும்போது மனம் அதனை ஏற்க மறுக்கின்றது. அந்த வருடம் மேல்மாயிலில் நடந்த குரு பூஜையில் பங்கேற்க முடியாமல் போனாலும் அவர் சார்பாக புஷ்ப கைங்கர்யங்களை ஒரு குறைவில்லாமல் கொடுத் தனுப்பிய மகா பக்தர்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஒவ்வொரு பூஜைக்கும் விழாவிற்கும் ஸ்ரீ கோவிந்தராஜன் மற்றும் ஸ்ரீ பாபுவை நினைக்காமல்



இருக்கவே முடியாது. ஆழ்ந்த, உறுதியான, அமைதியான சரீர பிரயாசையோடு செய்த குரு பக்தி திரு. கோவிந்தராஜனையும், அளப்பரிய அன்போடு, பொருட் செலவு கருதாது, புஷ்ப கைங்கர்யத்துடனான குரு ஸேவைக்கு திரு. பாபுவும் மனதில் நீக்கமற நிறைந்துள்ளனர்.

**திருமதி கோமதி**
**திருமதி சின்னமீனா**
**திருமதி பெரிய மீனா**

வத்திராயிருப்பு என்னும் இடத்திலிருந்து ஸ்ரீ ஸ்வாமி களை தரிசிக்க வந்த சகோதரிகளான திருமதி கோமதி திருமதி சின்ன மீனா மற்றும் திருமதி பெரிய மீனா என்பவர்கள் தங்களின் ஈடுபாட்டை இசை மூலமாக வெளிப்படுத்தி யவர்கள். சங்கீத ஞானம் படைத்த இவர்கள் சொந்தமாக பாடல்கள் இயற்றி அதனை ஸ்வாமிகள் முன் சமர்ப்பித்து இசைப்பர். 1942 வருட ஜெயந்தி விழாவில் இவர்களுடன் நானும் என் சகோதரியும் இணைந்து பாடியது மறக்க முடியாதது. இவர்கள் அடிக்கடி ஸ்ரீ ஸ்வாமிகளின் இருப்பிடம் வந்து அவருக்கும் அவரின் பக்தர்களுக்கும் தொண்டு புரிவார்கள். இவர்கள் எனக்குக் கற்றுத் தந்த பாடல்கள் காலத்தால் அழியாதது. அதில் சிலவற்றை கீழே தருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

பள்ளி எழுச்சி

*சேஷகிரியில் விளங்கும் ஜோதி மாதவா நீவா*
*தீதரவே துயிலும் நீங்கி சேவல் கூவின*
*மாயைநீங்கி மெய்ஞான சூர்யகலைகள் வீசவே*
*பூர்ண சுதந்திரம் பெற்று புகழும் ஓங்கவே*
*தாராவனத்தில் தனித்து முளைத்த*
*ஜோதி விருக்ஷ சுடர் மணியே (குமாரதாரா வனத்தில்)*
*பூதலம் புகழ் பரமாத்மா*
*என் ஆதியே என் அன்பே என்றழைக்க (சேஷ)*

வரவேற்பு பாட்டு

*பக்தர் மனையில் அடிசல்*
*ஊனுகரும் பரமன் வருக வருகவே.*
*பக்தர் பரிபால பரமஹம்ஸ*
*பாலன் வருக வருகவே*

*அரையில் கிங்கிணி ஹாரவடங்களுடன்*
*அமலன் வருக வருகவே*
*ஹாரகிரீட குண்டலங்களுடன்*
*அகிலன்வருக வருகவே*

*காவி வஸ்திரமும் கையில் மாலையுடன்*
*கபிலன் வருக வருகவே.*
*கஸ்தூரி வாசனை கமழும் செந்தாமரை*
*கண்ணன் வருக வருகவே*

*பக்தருக்காகவே பாண்டிய நாட்டினிலே*
*பரிவுடன் வந்தவா வருகவே*
*பங்கஜ பாதனே பாலையைக் காத்திட*
*பாரினில் வந்தவா வருகவே.*

தாலாட்டு

*பல்லவி*

*ஆயர் குல தவமணியே*
*ஆனந்த நித்திரை செய் (ஆயர்)*

*அனு பல்லவி*

*யதுவீர சுகுமாரா அற்புதானந்த லீலா (ஆயர்)*

*சரணம்*

*மகிழ்வதனா ஜகன் மோகனா*
*மாலை ரமணா தேவா தேவா*
*அரவணையில் துயிலும் ரூபா*
*மனமகிழ் பரமாத்ம நாதா (ஆயர்)*



## திரு. சங்கரன், திரு. வேங்கடராமன்



திரு. வேங்கடராமன்

வத்திராயிருப்பு என்ற ஊரைச் சேர்ந்த திரு. சங்கரன் மற்றும் அவர் மனைவி திருமதி மீனாட்சி என்பவர்கள் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அதீத பக்தி பூண்டவர்கள். ஸ்வாமிகளின் ப்ரத்யேகமான கவனிப்பிற்கு உரியவர்கள் என்பதற்கு சான்றாக திருமதி மீனாட்சி கூறிய ஓர் சம்பவம் நினைவுக்கு வருகின்றது. திரு. சங்கரனின் முடிவு காலம் நெருங்கி விட்டதை சூசகமாக அவரது குடும்பத்தாருக்கு உணர்த்தும் வகையில், சங்கரன் சௌக்யமா? என்ற ஒரு தந்தியை ஸ்ரீ ஸ்வாமிகள் அனுப்பினார். விநோதமான இந்த தந்திக்கு, நலமாக உள்ளார் என பதில் தந்தி அனுப்ப, அடுத்த இரண்டு மணி நேரத்தில் திரு. சங்கரன் இறைவனடி சேர்ந்தார். திருமதி மீனாட்சி கள்ளங்கபடில்லாதவர். பதி பக்தியிலும், குரு பக்தியிலும் தம் வாழ்க்கையை நடத்தியவர். தன் கடைசி காலத்தில் மேல் மாயில் ஆசிரமத்தில் தங்கி திரு. பாஷ்யத்தின் உதவியுடன் இருந்து குருவடி சேர்ந்தார்.

இவர்களுடைய மகனாகிய திரு. வேங்கடராமன் என்பவரை பதினைந்து வயதில் சந்தித்ததாக நினைவு.

அப்போது விளையாட்டு வயதில் கண்டவர் பின்னாளில் ஸ்ரீ விலக்ஷணானந்த ஸத்ஸங்கத்தில் பல பேர்களை திளைக்க வைக்கும் ஓர் கிரியா ஊக்கியாக செயல்பட்டதைக் கண்டு வியப்புற்று மகிழ்ச்சியடையச் செய்தது. இதனை அவர் சாதித்தது எவ்வாறெனில் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய கருணையால் பல பேர்களின் பிரச்னைகளையும் நோய்களையும் ஒளஷதமாக அவர் அளித்த ஸ்வாமிகளின் விபூதி பிரஸாதத்தினாலும் மற்றும் ஸ்வாமிகள் சூட்சுமமாக அறிவித்த சிறு பரிகாரங் களினாலும் தீர்த்து வைத்தார்.

திருமதி குஞ்சம்மாள் என்ற இவருடைய தமக்கை தம் ஜீவித காலம் வரையில் குரு பூஜைக்குத் தேவையான திரவியங்களோ பண உதவியோ ஒவ்வோர் இல்லமாக சென்று பெற்று அதனை ஆசிரமத்திற்கு அளித்து பெரும் சரீர உபகாரம் செய்தார். இவர் தம் மகளான திருமதி மீனாட்சியை ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆசியுடன் திரு. வேங்கடராமன் மணந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. வேங்கடராமனுடைய இளைய சகோதரியாகிய திரு. பார்வதியம்மாளும் ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தர் குழாத்தில் ஒருவரே. தற்போது இவரது மகள் திருமதி சுந்தரி மேல்மாயில் ஆசிரமத்தில் தங்கியிருந்து குரு ஸேவையும் அடியார் ஸேவையும் செய்து வருவது ஒரு மகிழ்ச்சிகரமான விஷயம்.

**ஜார்ஜ் டவுன், நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு**

இங்கு ஸ்ரீ ஸ்வாமிகள் தங்கியபோது எனக்கு அறிமுக மான சிலர்

**எழும்பூர் பாட்டி**

ஒரு கண் பார்வையற்றவர். வறிய நிலையிலும் தள்ளாத நிலைமையிலும் ஸ்ரீ ஸ்வாமிகளை தவறாது காண வருவார்.



தினமும் இல்லந்தோறும் சென்று பிடி அரிசி பிக்ஷையாகப் பெற்று ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க ஆசிரமத்திற்கு வருகை தரும் பக்தர்களின் உணவிற்கு உதவுவார்கள்.

**திரு. சோம சுந்தரம்**

தெலுங்கு அந்தணர்; மனைவி மற்றும் இரண்டு மகள்களுடன் அடிக்கடி ஸ்ரீ ஸ்வாமிகளை காண வருவார்.

அம்புஜம்மாள் என்பவரும் ஸ்ரீ ஸ்வாமிகளை தரிசிக்க தவறாது வருபவர்.

**பாலம்மாள்**

ஆரிய வைஸ்ய சமூகத்தைச் சார்ந்த ஒரு பக்தை. எளிமையான மனம் படைத்த இவர் ஸ்ரீ ஸ்வாமிகளை தன் குழந்தைக்கு ஒப்ப எண்ணி தின்பண்டங்களை தன் கைப்பட செய்து எடுத்து வருவார். சங்கீத ஞானம் இல்லாமலேயே சில வித்தியாசமான நாட்டுப்புற மெட்டில் அமைந்திருக்கும் பாடல்களை ஸ்ரீ ஸ்வாமிகளின் மீதுள்ள ஈடுபாட்டின் காரணமாக இசைப்பார்.

**உறையூர் இராமசாமி செட்டியார்**
**பண்ருட்டி இராமசாமி செட்டியார்**
**பண்ருட்டி சண்முக முத்தையா**

இவர்களைப் பற்றிய தகவல்கள் திரு. அனந்தராமன் கூறியதைத் தவிர பண்ருட்டி திரு. இராமசாமி செட்டியார் ஆன்மீக ஞானம் பெற்றவர். இவரது சந்ததியினர் ஸ்ரீ ஸ்வாமி களை விக்ரஹ ஆராதனை மூலம் செய்து வருவதாக செவி வழி செய்தி. பண்ருட்டி முத்தையா ஸ்வாமிகளின் மீது பல பாடல்களையும் பதிகங்களையும் இயற்றியுள்ளார். அதீத ஆன்மிக அறிவும் ஞானமும் படைத்தவராவர்.

பண்ருட்டி ப. ஷண்முக முத்தையா அருளியது

மூலப்பிறவி மார்க்கம்

*பரை அசைய பிந்து அசையும்*
*பிந்து அசைய குண்டலினி அசையும்*
*குண்டலினி அசைய மூலம் அசையும்*
*மூலம் அசைய பிராணன் அசையும்*
*பிராணன் அசைய சித்தம் அசையும்*
*சித்தம் அசைய மனம் அசையும்*
*மனம் அசைய இந்திரியங்கள் அசையும்*
*இந்திரியங்கள் அசைய இகத்திற் பிறவியதிகமாம்.*

பிறவி அடங்கும் வழி

*இந்திரியங்கள் அடங்க கரணங்கள் அடங்கும்*
*கரணங்கள் அடங்க பிராணன் அடங்கும்*
*பிராணம் அடங்க மூலம் அடங்கும்*
*மூலம் அடங்க குண்டலினி அடங்க*
*குண்டலினி அடங்க பிந்து அடங்கம்*
*பிந்து அடங்க பரை அடங்கும்*
*பரை அடங்க பரிசுத்தப் பிரஹ்மமாவார்.*

1930

## திரு. வெங்கடரமணன்


இவரது தகப்பனார் திரு. குப்புசாமி அய்யங்கார் தாய் திருமதி செல்லம்மாள். அத்தை திருமதி இரங்கநாயகி அம்மாள். இவர்கள் அனைவருமே ஸ்ரீ ஸ்வாமிகளின் சேவையில் ஈடுபட்டவர்கள். இன்றளவும் திரு. வெங்கட ரமணன் ஸ்ரீ ஸ்வாமிகளிடம் அந்தரங்கப் பக்தி கொண்டு மேல்மாயில் சமாதி கோயில் தரிசனத்திற்கு சென்று வருபவர்; அவர் சிறுவனாக இருந்தபோது ஸ்ரீ ஸ்வாமிகள் கடிதங்கள் மூலம்





திரு. வெங்கட ரமணன்

தொடர்பு கொண்ட பெரும் பாக்கியம் பெற்றவராவார். மாதிரிக்கு ஒரு கடிதத்தின் நகல் தரப்பட்டுள்ளது.



மற்றுமொரு பெயர் தெரியாத பக்தை தன்னுடைய குஷ்டரோகம் ஸ்ரீ ஸ்வாமிகளின் அருளால் குணமடையப் பெற்றதை கண்கூடாக காணும் பாக்கியம் கிடைத்தது.

**திரு. கோவிந்தராஜுலு**





திரு. கோவிந்தராஜுலு திரு. கோபாலகிருஷ்ணன்

எளிய சுபாவம் கொண்ட தீவிரமான பக்தர். அவர் பக்திக்கு செவி சாய்ப்பதுபோல் எந்நேரமானாலும் ஸ்ரீ ஸ்வாமிகள் தன் தரிசனப் பாக்கியத்தை இவருக்கு அளிப்பார். ஸ்ரீ ஸ்வாமிகளின் பிரத்யேக பொருட்களும் புத்தகங்களும் இவர் இல்லத்தில் இன்றும் பூஜிக்கப்பட்டு வருகின்றன. இவரின் ஸேவையினை தொடர இவர் மகன் திரு. கோபால கிருஷ்ணன் ஆசிரம பூஜையிலும் மற்ற கைங்கரியங்களிலும் தவறாமல் பங்கு கொண்டு தந்தையின் வழியினை பின்பற்றி வருகின்றார்.

**திருமதி மீனாட்சி**

நகரத்தார் சமூகத்தை சேர்ந்த தனவந்தர்; மிகக் குறைவாக பேசும் இவர் குரு கைங்கர்யத்தில் மனமுவந்து பெருமளவில் உதவி புரிந்திருக்கிறார்.



**திரு. மீனாட்சிசுந்தரமூர்த்தி**

திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியின் மகனான இவர் சித்த மருத்துவர். தன் தந்தையின் பாதையை தொழிலில் மட்டுமல்லாமல் ஸ்ரீ ஸ்வாமிகளிடமுள்ள பக்தியிலும், ஈடு பாட்டிலும் அவர் வழியினை பின்பற்றுபவர். தற்போது ஆசிரம நிர்வாகத்திலும் பெரும் பொறுப்பு வகிக்கின்றார் என்பது குறிப்



திருமதி சரஸ்வதிமீனாட்சிசுந்தரமூர்த்தி - திரு. மீனாட்சிசுந்தரமூர்த்தி


பிடத்தக்கது. இவருக்கு உறுதுணையாக இவரது மனைவி திருமதி சரஸ்வதியும் மேல்மாயில் ஆசிரமத்தில் நடக்கும் எல்லா விசேஷங்களிலும் பங்கு கொண்டு பொறுப்புடன் குரு கைங்கர்யம் செய்து வருகிறார்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரி உபயோகித்த அரவை எந்திரம் மற்றும் புத்தகங்களும் இவரது இல்லத்தில் மேல்மாயிலில் காணக் கிடைக்கின்றது.

**திரு. சங்கரன் திருமதி பத்மா சங்கரன்**

வேலூரைச் சேர்ந்த இத்தம்பதிகள் விருந்தோம்பலில் மிகச் சிறந்தவர்கள். திரு. கிருஷ்ணமூர்த்தி ஆச்சாரியிடம் வேலை பார்த்த திரு. சங்கரன், ஸ்ரீ ஸ்வாமிகள் பற்றி

கேள்வியுற்று அவரின் அத்யந்த பக்தராய் மாறியவர். திருமதி பத்மா தனக்கு திருமணமான 1962 ஆண்டிலிருந்து மேல் மாயிலில் நடக்கும் குருபூஜைக்கும் ஜெயந்தி விழாவிற்கும் தவறாது கலந்து கொண்டு நைவேத்யங்களும், ப்ரஸாதங் களும் செய்து கொண்டு வருவார். ஆரம்ப காலத்தில் ஆசிரமத் தில் நடந்த குரு பூஜையில் திரு. பாஷ்யம் வெளியிலிருந்து வரும் பக்தர்களையும் அன்பர்களையும் பிரத்யேகமாக நல்ல முறையில் கவனித்துக் கொள்ளுமாறும் அதுவே குருவிற்கு உகந்த சேவை என்று தம்மிடம் கூறியதை இன்றும் நினைவு கூறுகிறார். கனிவும், அன்பும் நிறைந்த திருமதி பத்மாவின் ஆத்மார்த்த குரு பக்தியின் வெளிப்பாடு அவர் கூறிய வாக்கியத்திலிருந்து வெளியாகும். அது, "எனக்கு ஓம் நமோ பகவதே விலக்ஷணானந்தாய என்ற ஒரு மந்திரம் தவிர வேறெதுவும் தெரியாது." என்னே ஒரு ஏகாக்கிர பக்தி.

## திரு. ஜோதி. முருகாச்சாரி



திரு. ஜோதி. முருகாச்சாரி

திரு. ஜோதி. முருகாச்சாரி விசுவகரும சமூகத்தைச் சேர்ந்த வைதீகர். வேலூருக்கு அருகிலுள்ள காளி கோவிலில் பூஜாரியாக இருக்கும் இவர் ஸ்ரீ ஸ்வாமிகளின் பக்தராக



ஆகியது எவ்வாறெனில், 1979-80களில் மகாதேவ மலையி லுள்ள ஸ்ரீ மலையம்மா என்ற யோகினியின் ஜெயந்தி விழா வில் கலந்து கொண்டபோது ஸ்ரீ பாஷ்யத்தின் மூலம் ஸ்ரீ ஸ்வாமிகளைப் பற்றி கேள்வியுற்று பிறகு மேல்மாயில் ஆசிரமத்திற்கு தவறாமல் வந்து வழிபடும் அத்யந்த பக்தராக ஆகியது ஸ்ரீ குருநாதரின் கருணையே. பிறகு ஸ்ரீ பாஷ்யம் மறைந்தவுடன் மேல்மாயில் ஆசிரமத்திற்கு வருவது நின்று போனது. மறுபடியும் நான்கு வருடங்களுக்கு முன்பு இவரது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாகி, ஸ்ரீ ஸ்வாமிகளின் நினைவு தூண்டப்பெற்று தம்மை ஆபத்திலிருந்து காப்பாற்ற அவரிடம் வேண்டிக் கொண்டார். அவ்வாறே அக்கண்டத்தி லிருந்து மீண்ட அவர் ஆசிரமத்திற்கும் சமாதி கோயிலுக்கும் வெகு விமரிசையாக கும்பாபிஷேகம் நடத்தி வைத்து தன் குரு காணிக்கையைச் சமர்ப்பித்தார்.

இன்றளவும் மாதாமாதம் ஸ்ரீ ஸ்வாமிகளின் ஜன்ம நட்சத்திரமான சதயத்தன்று அவரோ அவரது உதவியாளரோ ஆசிரமத்திற்கு வந்து பூஜைகள் செய்வதில் தவறுவதில்லை. வருடந்தோறும் நடைபெறும் அனைத்து விசேஷ பூஜை களும் இவருடைய கண்காணிப்பிலேயே நடைபெற்று வருகின்றன.

## குருவாயூர் கண்ணன்


இவரை நான் திரு. முருகாச்சாரி அவர்கள் நடத்திய ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆசிரம கும்பாபிஷேக விழாவில் காண நேர்ந்தது. அதுவரை அவரைப்பற்றி அறிந்தது அவர் வெளி யிட்ட 'அருட்புனல்' என்ற சிறு சிறு நூல்கள் மூலமே. இவரைப்பற்றி மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாவின் ஸேவையில் பரிபூரண மாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டதற்கான சான்றாக இவர் ஸ்ரீ ஸ்வாமிகளின் உபதேசங்களையும், கட்டுரைகளையும்,

பாடல்களையும் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு சமயங் களில் இலவசமாக ஆன்மீக அன்பர்களின் ஞானப் பசிக்கு ஆஹூதி போல ஸ்ரீ ஸ்வாமிகளின் அனைத்து நூல்களையும் பிரசுரிக்கும் பெரும் பேறு பெற்றவர். ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தியை வெளி உலகுக்குப் பரப்பி வரும் இவர்தம் அருட் பணியை சொற்களால் விவரிக்க முடியாது.

**திரு. கோபாலகிருஷ்ணன்**

மதுரையைச் சேர்ந்த இவர் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய உறவினராவார். சென்னை வரும்போதெல்லாம் எங்கள் இல்லத் திற்கு வந்து ஸ்ரீ ஸ்வாமிகளைப்பற்றிய பெருமைகளை சிலாகித்துப் பேசியதுண்டு. இவரது மகளும் மருமகனும் இவர் வழியில் ஸ்ரீ விலக்ஷணானந்தரின் பாதையில் பயணித்து வருபவரே.

**திரு. அய்யாசாமி**



திரு. அய்யாசாமி

ஸ்ரீ ஸ்வாமிகளை நேரில் காணாதிருந்தும் அவரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்களில் குறிப்பிடத்தக்கவர் திரு. அய்யாசாமி அவர்கள் திரு. கோவிந்தராஜன் மூலமாக எனக்கு



அறிமுகமானவர். ஸ்ரீ ஸ்வாமிகளின் பூஜைகள், விழாக்களைத் தவிரவும் ஆசிரம நிர்வாகத்திலும் பொறுப்பேற்று திரு. கோவிந்தராஜனுக்கு உதவியாக செயல்பட்டவர், இன்றுவரை தனிப்பொறுப்பேற்று அதனை செவ்வனே திறம்பட நடத்தி வருகின்றார். பக்தர்களிடம் காணிக்கை வசூலித்து அதனை உரியவர்களிடம் பட்டுவாடா செய்து ஆசிரம நிர்வாகம் தொய்வடையாது நடைபெற அருந்தொண்டாற்றி வருகின்றார். தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை பெற்றவர். பேராசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். மூச்சுக்கு மூச்சு குருநாதர் குருநாதர் என ஸ்ரீ ஸ்வாமிகளையே சதா துதிக்கும் திரு. அய்யா சாமி ஆன்மீக ஏணியில் உச்சத்திற்கும் சமீபமானவர். அவர் ஸ்ரீ ஸ்வாமிகளைப் போன்ற குருநாதர் ஒருவர் அமைவது கடினம் என்றும் குருவின் துணை ஒன்றே போதும் என்றும் ஆணித்தரமாக நம்புபவர். இப்படிப்பட்ட அசையாத குருபக்தி உடைய திரு. அய்யாசாமி ஸ்ரீ விலக்ஷணானந்த ஸத்ஸங்கத் தினுள் எப்படி வந்தார் என்பதை அவர் வாயிலாகவே அறிந்து கொள்ளலாம். சிறந்த குரு பக்திக்கு எடுத்துக்காட்டாக தற்போது மேல்மாயில் ஆசிரமத்திலேயே தங்கியிருந்து குரு ஸேவை செய்து வருவதை ஒரு முத்தாய்ப்பாக எடுத்தியம் பலாம்.

குரு வாழ்க

*ராமன் என்னும் வெங்கட்ராமையர் வத்திராயிருப்பில் பிறந்தவர் தன் தகப்பனார்அரசுப் பணியில் சர்வேயராக வேலை பார்த்தவர் என்று கூறியுள்ளார். அவர் சற்குரு நாதரிடம் நெருங்கி பழகியுள்ளார். வெங்கடராமையரின் தாயாரும் சற்குருநாதருக்கு பணி செய்து மேல்மாயிலிலேயே தங்கியிருந்து அங்கேயே உயிர் நீத்தவர்.*

*எனவே அவர் சிறு பிராயத்திலேயே குருநாதரை நேரில் தரிசிக்கும் பேறுபெற்றிருந்தார். இருப்பினும் அவருடைய பெருமைகளை அந்த வயதில் முழுமையாக உணர்ந்து கொள்ள வில்லை என்றும் கூறியிருக்கிறார். இளமையில் திரைப்படத் துறையில் காலம் கழித்ததாகவும் அது அவ்வளவு பயன்தரக் கூடிய தாக இருக்கவில்லை என்றும் கூறியிருக்கிறார்.*

பின்னர் குருநாதரின் பெருங்கருணை காரணமாக அருள் வாக்குக் கூறும் பணியை எடுத்துக் கொண்டு அதனை வாழ்நாள் முழுவதும் செய்து வந்தார். மேற்கு மாம்பலத்தில் சமையலுக் கென்று சிறு தடுப்பு வைத்திருந்த ஒன்றை அறையில்தான் அவரது குரு மேடை. வலது புறச் சுவற்றில் குருநாதரின் படம் இருக்கும். அவர் கிழக்குப் பார்த்து அதற் கென்று பிரத்யேகமாகத் தயாரிக்கப் பட்ட மணையில் அமர்ந்திருப்பார்.

அவருக்குப் பின் புறத்தின் பக்கவாட்டிலும் இறைவன், இறைவியர், சித்தர்கள் படங்கள் மாட்டியிருக்கும்.

ஞாயிற்றுக்கிழமை, ஆங்கிலப் புத்தாண்டு, தமிழ்ப் புத்தாண்டு, காணும் பொங்கல் நாட்களில் நிறையப் பேர் வருவார்கள். வழக்கறிஞர் இலட்சுமணன் தம்பதியர், திருநாவுக் கரசு தம்பதியர், ராஜாமணி தம்பதியர், ரங்கநாதன் சீமைத் துறை ஆகியோர் விடாமல் வருவார்கள். சிலர் அவ்வப்போது வந்து, பிறகு நின்று விட்டார்கள்.

அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றவும் குறைகளைத் தீர்க்கவும் அவர் உத்தரவு கொடுப்பார். எல்லாம் குருநாதர் வாக்கு என்றும் நான் செய்வது ஒன்றும் இல்லை யென்றும் கூறுவார்.

விலட்சணானந்தரை வழிபடச் சொல்லுவார். மேல் மாயில் சென்று வரச் சொல்லுவார். அவர் கூறும் பரிகாரங்கள் எளிமை யாக இருக்கும். ஆனால் சொல் வதை அப்படியே எற்றுக் கடைப் பிடிக்க வேண்டும். அப்போதுதான் நினைப்பது நடக்கும் என்பதில் கண்டிப்பாக இருப்பார்.

1977ஆம் ஆண்டு நான் கவலைக்கிடமாக மருத்துமனையில் படுத்திருந்தபோது பிழைத்து விடுவேன் என்றும் அறுவை சிகிச்சை தேவைப்படாது என்றும் சொல்லி அதேபடி உயிர் பிழைத்து இதுவரை வாழ்ந்து வருகிறேன், எனக்கு இரண்டா வதாக ஒரு குழந்தை பிறக்கும் என்றும் தாயையும் சேயையும் காப்பாற்றித் தருவதாகவும் வாக்களித்தார். இரண்டும் சொன்ன படியே நடந்தது.

குருநாதர் தயவால் வேலை கிடைக்கப் பெற்றவர்கள, கல்லூரியில் சேர்ந்தவர்கள், குழந்தை பெற்றவர்கள, திருமணம் அமையப் பெற்றவர்கள் என்று பலரை அந்நாட் களில் அவரைக் கண்டு பலன் பெறப் பார்த்திருக்கிறேன். குறிப்பாக திருமணம் ஆகாத எத்தனையோ பெண்களுக்கு திருமணம் நடை பெற்றுள்ளது.



வெங்கட்ராமையரின் மனைவி மீனாட்சி அம்மாள் மகா உத்தமி. அத்தனை பேருக்கும் சுண்டல், சித்ரான்னம் என்று அன்றைய தேவைக்கேற்ப தாராளமாகப் பிரசாதம் வழங்குவார்; சிலர் அங்கேயே உணவு உட்கொள்வதும் உண்டு.

வெங்கட்ராமையருக்குப் பிறகும் சற்குருநாதரிடம் வேண்டு கோள் சமர்ப்பித்த பலர் காரியம் கைகூடப் பெறுவதைக் கண் கூடாகப் பார்த்திருக்கிறேன். சற்குரு நாதர் ஜீவசமாதியில் அமர்ந்து இடைவிடாமல் அருள்பாலித்து வருகிறார் என்பது சத்தியம்; அவரை வழிபடுவோர் அனைவரும் இதனை மனப்பூர்வ மாக உணரலாம்.

திரு. அய்யாசாமி அவர்களின் அனுபவத்தை விவரித்த பிறகு என்னுடைய இரண்டு அதிசயமான விசேஷமான அனுபவங்களை விவரிக்க விரும்புகிறேன். அதில் முதலாவ தாக திரு. விலக்ஷணானந்தர் என்பவரைப் பற்றித்தான்.

## திரு. விலக்ஷணானந்தர்

மூன்று வருடத்திற்கு முன்பு 2011ஆம் வருடம் எங்கள் இல்லத்தில் சுவாமிஜியின் ஜெயந்தி விழாவின் இரண்டு மாதத்திற்கு முன்பு ஒருநாள் தொலைபேசியில் எனக்கு ஓர் அழைப்பு வந்தது. அந்த பெயரை கேட்டு நான் அதிர்ந்து விட்டேன். தொலைபேசியில் நான், "யார் அழைப்பது" என்று வினவ, "விலக்ஷணானந்தர் பேசுகிறேன்" என்று மறுமுனையி லிருந்து வந்த பதிலைக் கேட்டு நான் பயந்து தொலை பேசியை உடனே துண்டித்து விட்டேன். மறுபடியும் மணி அடிக்க, நான் எடுத்து பேசும் முன்னே, "அம்மா பதறாதீர்கள்! நான் ஸ்வாமிஜியினுடைய பெயர் உடையவன். என்னுடைய தகப்பனார் ஸ்வாமியினுடைய இளவயதிலேயே அத்யந்த சிஷ்யர். ஆதலால் தன் குருநாதருடைய பெயரை எனக்கும் சூட்டினார்" எனக் கூறினார். அதைக் கேட்டு மகிழ்ந்த நான்

அவரை ஜெயந்தி விழாவிற்கு வரவேற்றேன். அவற்றிலிருந்து இன்று வரை அவர் வருடாவருடம் ஜெயந்தி விழாவில் பங்கு கொண்டு தன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள அவர் சிறந்த படிப்பாளர் என்றும் கவி என்றும் தெரிந்து கொண்டேன். அவர் ஸ்ரீ ஸ்வாமியைக் குறித்து எழுதியவை சில :

விலக்ஷணானந்த வையக குருவே வாழ்கவே

*யோகமே அமிழ்தனே ஈகம் வானமுது*
*நால்வேத தாரகமிதே குக் கிராமந்*
*தோறுமே வியவி பகல வாதின கரா*
*முக்தனே அருணா கருணா மூர்த்தியே*
*தர்ம ரக்ஷக மூலமே வையக லலாடமே*
*கரு விரவி தருவே குரு விலக்ஷணானந்தா*
*வாழ்கவே தேவார நகரம் மேல்மாயில் கிராமம்.*

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | கு | | | | | | |
| | | | | | வே | ரு | த | | | | | |
| | | | | க | ரு | வி | ர | வி | | | | |
| | | | மே | ட | லா | ல | க | ய | வை | | | |
| | | த | ர் | ம | ர | க்ஷ | க | மூ | ல | மே | | |
| | யே | தி | த் | ர் | மூ | ணா | ரு | க | ணா | ரு | அ | |
| வி | ப | க | ல | வா | தி | ன | க | ரா | மு | க் | த | னே |
| | ய | வி | மே | று | தோ | ந் | ம | ரா | கி | க் | கு | |
| | | நா | ல் | வே | த | தா | ர | க | மி | தே | | |
| | | | து | மு | ன | வா | ம் | க | ஈ | | | |
| | | | | அ | மி | ழ் | த | னே | | | | |
| | | | | | மே | க | யோ | | | | | |
| | | | | | | வே | | | | | | |

தேவார நகரம் 1894

மேல்மாயில் கிராமம் 1945



அகண்ட பரிபூரண சச்சிதானந்த அத்வைத அகிலோக விபகலவா
விநாயகா ஸத்குரு சுவாமி விலக்ஷணானந்த மஹாராஜ் கீ ஜெய்!
வாழ்க விலட்சணானந்த ஞால குரு
வளர்க விலட்சணானந்த அருள் ஜோதி

ஆண்டவன் துரியாதீத ஒளி வடிவப் பரம்பொருளாம். ஜாதி, வர்ணம், குல வேறுபாடின்றி யாவரும் இதை அறியலாம். மதுரை மாவட்டம் தேவாரம் நகரில் 1894ஆம் ஆண்டு விலக்ஷணானந்த சத்குரு எழுந்தருளினார்.

சுருளிமலையின் சித்தர்கள். திருமலைக் குகைகள். தமிழகமெங்கும் உள்ள கிராமங்கள், சிற்றூர்கள், பஞ்சாயத்துக் களில் அகண்ட பரிபூரண அரிய ஆத்மஞான தத்துவங்களை எளிய முறையில் உபதேசித்தருளினார். அருட்பார்வையினால் அனைவருக்கும் பேரானந்தப் பெரும் ப்ராப்தியைத் தந்தருளினார்.

ஞான வாசிஷ்டம், கைவல்யம் மற்றும் அனைத்து வேதாந்த உபநிஷத்துக்களின் சாரத்தைப் பிழிந்து எளிய முறையில் சொற்பொழிவுகள் மற்றும் சந்தேகம் நிவர்த்தி செய்தல் மேற் கொண்ட மகான். என்றும் எளிமையுடன் அருமை நிறைந்த சான்றோர் பலர் போற்றும் தமக்கென எதையும் கொள்ளாத அருட்செயல்கள் பல ஆற்றிய சித்த மகாத்மா 1945ஆம் ஆண்டு மேல் மாயில் கோவிலுள் நுழைந்தார்.

*அத்தகிரி உதயகிரி இரண்டின் காலும்*
*அகண்ட பரிபூரணமாம் மூன்றின் காலும்*
*அத்தம்உடன் சித்திரையும் காலும் ஏழும்*
*அனவரத விநாயகராய் வந்த ஆறும்*
*கட்டமுடன் சுகம் வந்துங் கலங்காய் ஞான*
*கருதரிய பெருமானே மேல்மாயின் கண்*
*இட்டமுடன் அவதரித்து பூலாம்பட்டியை*
*என்னாளு மபிவிருத்தி அடையச் செய்க.*

வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம். மேல் மாயில் விபகலவா விலட்சணானந்த ஆதி பகவனின் 69ஆம் ஆண்டு குரு பூஜை, 121ஆம் ஆண்டு ஜெயந்தி மற்றும் அகில குரு விலட்சணானந்தரின் ஆராதனை 27-12-2015 பகலவ நாளில் சென்னை-88, ஆதம்பாக்கம் 16, டேனியல் தெருவில் நடை பெறுவது குருபிரானின் பூரண கடாக்ஷத்தால் அருளாசியாலே ஓம்.

சேலம் மாவட்டம் சங்ககிரி வட்டம், பூலாம்பட்டி என்ற சிறிய கிராமத்தின் இயற்கை எழிலும், காவிரியாற்றின் கனிவும், எதிர் கரையில் நெரிஞ்சிப்பேட்டை மற்றும் ஏழுமலை மேவும் வேங்கடமலையைப் போன்ற பாலமலை சித்தேஸ்வரரும் 7 கல் தொலைவில் மேட்டூரும் மறுபக்கம் அம்மாப்பேட்டை, சிங்கம்பேட்டை, பவானி, ஈரோடு போன்ற பல இடங்களி லிருந்தும் ஆதி குருபகவான் சுவாமி விலக்ஷணானந்தரை தரிசிக்க மகா புருஷர்கள் வந்து சென்றது அவருடைய அறிவின் ஆழத்தையும் அன்பின் உருவத்தையும் எடுத்துக் காட்டும் பாங்கினதாம்.

பூலாம்பட்டியில் சுவாமி விலக்ஷணானந்தா தங்கி யிருந்த காலத்தில் அன்றாடம் சர்வாங்க ஆசனத்தை ஒக்கும் சங்வாங்கமும் சுத்தம் செய்து கொள்வாராம். அவரது உடலைத் தொட்டாலே பஞ்சு போல குழந்தையைப் போல மிகவும் மிருதுவாக இருக்குமாம். இடையில் எளிய வெண்மைக் கோவணம் மட்டும் தரித்திருந்ததாகவும் அவருடைய பிரதமச் சீடராக அமைந்த என்னுடைய தந்தை குருநாத சொக்க லிங்கம் கூறியதுடன் குருநாதரைப் போலவே சகல கலை களிலும் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காக விலட்சணா னந்தன் என்ற அரிய பொருள்மிக்க புனித நாமத்தை எனக்கும் சூட்டி மகிழ்ந்தார்.

ஹடயோக பிரதிபிகாவில் கூறப்பட்ட ஒல்லியான உடல், அருள் மிகுந்த கண்கள், இனிய முகம், நாடிகளின்



தூய்மை, முழுமையான உடல் நலம் பெற்று அறிவாற்றலுடன் அன்புள்ளமும் அருட் பேராற்றலும் பொதிந்து காணப்பட்டவர் நம்முடைய குருநாதர் சுவாமி விலக்ஷணானந்தப் பேரரசர்.

அவரவரின் உள்ளமறிந்து, அவரவரின் உண்மையறிந்து, அவரவரின் இயல்புக்கேற்றவாறு மந்திர தீட்சையளித்து மக்களை அன்பினால் கவர்ந்து மக்களை மஹான்களாக மாற்றியவர் நம்முடைய குருபிரான் ஆவார்.

சனக - சனந்தன - சனாதன - சனத்குமாரர் எனப்பட்ட பிரம்ம தேவரின் மானஸ புத்திரர்களாகிய கல்லால் விருக்ஷத்தி னடியில் மூன்றரைக் கோடி கர்ப்பகாலம் வரை பஞ்ச மௌனங் களையும் கடந்து நின்ற ஆதி ஜகதீஸ்வர என்று ஆரம்பித்து

எந்த இதிஹாசம், புராணங்களில் எவ்விடத்தில் சந்தேஹங்கள் இருந்தாலும் அதைத் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம் என்பதை மொழிந்து அதற்கான பிரமாணங் களுடன் விளக்கும் விலட்சண ஞானத்தைப் பெற்றவர் நமது குருதேவராவார்.

பால பருவத்திலேயே கௌபீனதாரியாக வெள்ளைக் கோவணந்தரித்து ஒவ்வொரு சிற்றூராகவும் நூலகங்களுக்கும் சென்று அங்குள்ள புத்தகங்கள் அனைத்தையும் அதி விரைவிலே பதின்கவனகருக்கும் மேலாக தாரகப் பிரம்மத்தின் அருளால் ஒரெழுத்தைக்கூட விடாமல் எந்தப் பக்கத்தில் எது அமைந்துள்ளது என்பதை மொழிவதுடன் அதன் பொருளை யும் மிக ஆழமாகவும் எளிமையாகவும் விளக்கும் பேறிவு படைத்தவர் நமது பாலகுருநாதர் விலக்ஷணனந்த வியஞால பகவான்.

எடுத்துக்காட்டாக, சுவாமிஜி அவர்கள் ஒரு பெரிய நூலகத்திற்குச் சென்று அங்குள்ள நூல்களையெல்லாம் வெகு விரைவில் புரட்டிக் கொண்டிருக்கும் போது அந்த நூலகருக்கு இவர்மீது நம்பிக்கையில்லாமல் சிறு பாலகனான இவர்

எப்போதும் இதேபோல பல நூற்றுக்கணக்கான புத்தகங்களை குழந்தைகள் விளையாட்டாகப் படம் பார்ப்பதைப்போல வேக மாக புரட்டுகிறாரோ என நினைத்து ஒருநாள், "நீங்கள் நூலகத் தில் அனுதினமும் நூற்றுக்கணக்கான புத்தகங்களைப் புரட்டுகிற்ரே, அதனால் நீங்கள் அடையும் உண்மையான பயன் யாதென" ஐயத்தை எழுப்பினார்.

அதற்கு சுவாமிஜி இங்குள்ள புத்தகங்களில் யாதாவது ஒரு புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள், அதிலுள்ள ஏதாவது ஒரு வார்த்தையைக் கூறுங்கள் என்று மொழிய.

நூலகர் அவ்வாறே செய்ய, சுவாமிஜி அவர்கள் எத்தனையாவது பக்கம் என்றும் அந்தப் புத்தகத்தின் பெயர் மற்றும் ஆசிரியர் பெயர் ஆகியவற்றுடன் முழு விவரங்களை யும் மிகச் சரியாகக் கூறியதுடன் அதன் உட்பொருளையும் மிக விளக்கமாகக் கூறியதைச் செவியுற்ற நூலகர் சாஷ்டாங்க மாக விழுந்து அவரை நமஸ்கரித்தார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்.

குருநாதர் சுவாமி விலக்ஷணானந்தர் சிறுவயதாக, பாலகராக இருந்த போதும், 80, 90 வயதான முதியவர்கள், வேத விற்பன்னர்கள் வந்து சுவாமிஜியிடம் பாடம் கேட்டுச் சென்ற விந்தையை நாம் போற்றியேயாக வேண்டும், இது வேங்கடேசப் பெருமானின் திருவிளையாடலேயாம்.

அக்காலப் பெரிய சத்சங்கத்தில் பூலாம்பட்டி என்று மொழியப்படும் சிறிய குக்கிராமத்தில் என்னுடைய தந்தை யாகிய குருநாத சொக்கலிங்கம் என்பவர் சுவாமிஜியிடம் இருந்து தாரகப் பிரம்மத்தைப் பெற்று அதை முறையாக 24 மணி நேரமும் உச்சாடனம் செய்வாராம்.

சுவாமி விலட்சணானந்தர் ஒவ்வொரு நாளும் சத்சங்கத்தில் ஒவ்வொரு சீடராக அழைத்து அவரவர்க்குகந்த மந்திர உபதேசம் செய்வித்து அதை எவ்வாறு முழு மூச்சாக



ஜபம் செய்ய வேண்டும் என்பதையும் மொழிந்து ஜப மாலை யையும் அளித்து அந்தக் காலத்திலேயே மந்திரக் குறிப்புகளை அனுதினமும் குறித்துவைக்க விலட்சணானந்தர் மந்திரக் குறிப்பு என்ற புத்தகத்தையும் வழங்கியது கண்கூடு.

ஒவ்வொரு சீடராக ஆய்ந்து அவரது மந்திர உச்சாடன முன்னேற்றம் பற்றிய விவரங்களை சேகரிப்பாராம். ஒருநாள் மிகப் பெரிய சத்சங்கம்.

அதில் முனிவர்கள், தவசிகள், சுவாமிஜியைப் போன்று நான்கைந்து மடங்கு வயதான வேத விற்பன்னர்கள் இருந்த கூட்டத்தில் என்னுடைய தந்தையை எழச் சொல்லி உன்னுடைய மந்திர ஜபம் பற்றி மொழிக ! எனக் கூறவும்,

நெசவு நெய்யும் பொழுதும், அன்றாடச் செயல்களை ஆற்றும் பொழுதும். மற்றும் உறங்கும் பொழுதும்கூட ஒரு கணப்பொழுதைக் கூட வீணாக்காமல் தாரகப் பிரம்மத்திலே திளைத்திருந்த நிலையை உணர்ந்து குரு, "சொக்கலிங்கம்! உமக்கொரு சோதனைக் காலம் வரும். அதில் நீ வெற்றி கண்டால் உடனே உனது இஷ்ட தெய்வத்தை நேருக்கு நேர் காணலாம்" என குருநாதர் மொழிந்தார்,

அஃதேபோல் கூடிய விரைவிலே சோதனைக் காலமும் வந்ததாம். ஒருவிதமான விஷக்காய்ச்சல்; அதற்காக என்னுடைய பாட்டி எனது தந்தையை ஊன் உண்ண வற்புறுத் தியும், அதற்கென கிராம சபையைக் கூட்டி காய்ச்சலுக்காகவும், உடல் நிலை சீரடையும் பொருட்டும் மட்டும் ஊன் உண்ணட்டும்; காய்ச்சல் சரியானவுடன் அதை விட்டொழித்து விடட்டும் என மொழிய, உயிரே போனாலும் என்னால் ஊன் உண்ண முடியாது என பலவாறாக எடுத்துக் கூறியும் சமாதான மடையாமல் பெற்ற தாய் அழுது புலம்ப, சோதனையில் கரையேற இயலாமற் போகவே ஊனுண்டு, வெற்றிலைப் போட்டு, சீட்டாட்டமாடி, புகைப் பிடித்து உடல் கெடுத்து மனங் கெட்டு சோதனையில் மீளாமல் போனதாம்.

பிற்காலத்தில் குருதேவர் கருணை மழையருளால் புகை, வெற்றிலை, சீட்டாட்டம், ஊன் விலக்கி தன்னுடைய இறுதி காலம் வரை சிறந்த கர்ம யோகியாகவும், ஹடயோகி யாகவும் விளங்கிய என்னுடைய தந்தையார், குருதேவர் விலட்சணானந்தரைப் போற்றும் விதமாக 1951ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14ஆம் நாள் பிறந்த எனக்கு 'விலட்சணானந்தா' என்ற பெயரை சூட்டியதுடன், குருநாதன் விலக்ஷணானந்தர், வடகரை சுவாமி சிவானந்தர், கடப்பை சச்சிதானந்தர், திருச்செங்கோடு ஆரூட சைதன்ய சுவாமிகள், சுவாமி வஜ்ரானந்தர், கொடுமுடி சுவாமிகள், செம்மாண்டப் பட்டி சுவாமிகள் எனப் பல சித்த புருஷர்களின் செயல்பாடு களைக் காட்டி எடுத்துரைத்து எங்கட்கு வழிகாட்டுவார்.

*காற்றே கனிவருளும் கடவுள்*
*குரு கண்காணா காயகல்பமாம்*
*நீரே நித்தமும் நினைவருளும்*
*நின்மல நித்யானந்த ரூபமாம்*
*ஒளியே உள்ளும் புறமும்*
*அருளொளி வழங்கும் வழிபாடாம்.*

*ஆதி குரு அத்வைத குரு ஆனந்த குரு*
*சுவாமி விலக்ஷணானந்த ஸத்குரு கீ ஜெய்*
*ஆதி குரு அத்வைத குரு ஆனந்த குரு*
*சிற்குரு சித்கன குரு சின்மய குரு கீ ஜெய்*

**சாதுராம் ஸ்வாமிகள்**

நங்கநல்லூரில் சாதுராம் ஸ்வாமிகள் ஆஸ்ரமம் இருக்கிறது. இவர் முருகன் உபாசகர். இவருடன்கூட நான் திருத்தணி படி உற்சவத்திற்கு ஒருமுறை சென்றிருக்கிறேன். ஒரு சமயம் நான் மேல்மாயில் ஆஸ்ரமத்திலிருந்தபோது திரு. பாஷ்யம் அவர்கள் இவருடைய தாயாரையும் தமக்கையையும் எனக்கு அறிமுகப்படுத்தியது நினைவிற்கு வந்தது. அந்த எண்ணத்தில் அவரது மூத்த சகோதரர் திரு. சுப்ரமணிய



ஐயரிடம் பேச நேரிட்டபோது அவர் தாயாரும் தமக்கையும் ஆஸ்ரமத்தில் இருந்தது உண்மைதான் என்றும் திரு. சாதுராம் ஸ்வாமிகள் ஸ்வாஜியைக் குறித்து எழுதிய பாடலையும் அனுப்பி வைத்தார். அதனை கீழே கொடுத்துள்ளேன்.

சாதுராம் ஸ்வாமிகள் எழுதிய ஸ்ரீ விலக்ஷணானந்தா துதி

*மான்மாயில் மெய்ஞ்ஞானம் வந்ததென*
*அறிவித்த வள்ளால் போற்றி!*
*நான்மாயில் மகாரம் அறில்முக்தி*
*எனச் சொன்ன நல்லாய்ப் போற்றி!!*
*ஏன்மாயில் என்கென்றே அதை உதறித்*
*தள்ளியஎம் எம்மான் போற்றி!*
*மேன்மாயில் மேவிய விலட்சண*
*நந்த குரு விமலாப் போற்றி!*

விலக்ஷணானந்த அனுபவத்தின் விசேஷங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்ட ஆனந்தத்தின் முடிவில் இப்போது மேல்மாயில் சமாதி கோயிலைப் பராமரிக்கும் ஸ்வாமி வாசுதேவானந்த சரஸ்வதியைப் பற்றி சில வார்த்தை களைக் கூறி நிறைவு செய்கிறேன்.

**திரு. வாசுதேவானந்த சரஸ்வதி**

1975ஆம் வருடம் ஆவணி மாதம் வியாழக்கிழமை ரோகிணி நட்சத்திரத்தில் பிறந்தார். இளமைப் பருவத்தில் சென்னை நகரத்தில் கல்வி கற்க நேர்ந்தது. புகழ்பெற்ற ஆகாய விமான நிறுவனமொன்றில் உயரதிகாரியாகப் பணியாற்றிய அவர் திடீரென்று தனது 32ஆம் வயதில் துறவறம் பூண்டார். ஆறு ஆண்டு காலம் ரிஷிகேசத்திலுள்ள அத்வைத வேதாந்த ராமகிருஷ்ணரை குருவாக ஏற்றார். இவரிடம் முறையாக அத்வைத வேதாந்த சித்தாங்களைக் கற்றார். பிறகு ஜம்முவில் தவத்திரு விவேகானந்த சுவாமியிடம் சந்யாச தீட்சை பெற்று அவருடன் பலகாலம் தொண்டாற்றினார். அங்கு பல தெய்வ



திரு. வாசுதேவானந்த சரஸ்வதி

வழிபாடுகளிலும் விழாக்களிலும் பெரும் பங்காற்றினார். கடந்த ஆண்டு ஸ்வாமிகள் பெங்களூரில் சத்சங்கத்திற்கு சென்ற போது அங்குள்ள மாரியம்மன் கோயிலிலுள்ள சுவாமிகளுடன் வேலூர் மகான் தோப்பாசாமிகளின் பூஜைக்கு வந்திருந்த போது திரு. முருகாச்சாரியார் மூலம் ஸ்ரீ விலக்ஷணானந்தரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவருடன் உரையாடிய பிறகு ஸ்ரீ விலக்ஷணானந்த அதிஷ்ட்டானத்தில் தொண்டு செய்ய மனமுவந்து மேல்மாயில் வந்தடைந்தார். ஸ்ரீ சுவாமிகள் இங்கு வந்தபிறகு இருவேளை பூஜைகள் வெகுச் சிறப்பாக நடை பெறுகிறது. பல விழாக்களைச் சிறப்பாக நடத்தினார். குரு பௌர்ணமியன்று வியாசர் பூஜையை முதல்முறையாக கொண்டாட ஏற்பாடு செய்தது சிறந்த அம்சமாகும். அவ்வூரி லிருக்கும் பாமரர்களுக்கும் ஆன்மிகத்தில் விழிப்புணர்வு ஏற்பட பாடுபட்டு வருகிறார். அவரது தொண்டு தொடர்ந்து விலக்ஷணானந்த ஸ்வாமிஜியின் புகழ் எங்கும் பரவும் என்பது திண்ணம்.

வாழ்க விலக்ஷணானந்தம்

# நிறைவாக...

கடவுள் இவ்வுலகைப் படைத்த போது நீதி, நேர்மை, தர்மம் என்ற நியாய பாதையில் அனைத்துயிரும் நடக்கும்படி நிச்சயித்த மார்க்கங்கள் காலகதியில் ஒவ்வொரு பிறப்பாக குறைவடைந்து தர்மங்கள் நலிவுபட்டு உயிர்களின் வாழ்க்கை க்ஷீணமடைகின்றது. இறைவனின் படைப்பில் உயரிய நிலையில் இருக்கும் மனித குலம் வகுக்கப்பட்ட இயற்கை நியதிகளை மீறும்போது பரமாத்மாவே குரு வடிவில் மகான் களாகவும், சத்புருஷர்களாகவும் அவதரிக்கின்றார்.

அவ்வாறு ஜனனம் எடுத்த மஹா புருஷர்கள் தங்கள் சுய தேவைகளையோ, சந்தோஷங்களையோ, உறவுகளையோ, பந்தங்களையோ ஒரு பொருட்டாக எண்ணாமல் இந்த பிரபஞ்சத்தினையே தன் குடும்பமாக எண்ணி, மக்களின் துயர் துடைத்து, தேவைகளை பூர்த்தி செய்து அதன் மூலமாக உலகத்தோரை தார்மீக பாதைக்கு இட்டு செல்லும் தீர்களா கின்றனர். இதற்காக அவர்கள் எந்நேரமும் ஒரு துளியும் சுயநல மின்றி தேச நலனுக்காகவும், உலக சுகத்திற்காகவும் தன்னையே உருக்கி மெழுகுவர்த்தியாக்கி உலகுக்கு ஒளி கொடுக்கும் சங்கல்பவாதிகளாகின்றனர்.

அவ்வாறாக அவதரித்த புண்ணிய புருஷராகிய ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் அயராது ஊர் உலகம் சுற்றி, ஞானோபதேசம் அளித்து, பக்தர்களின் நியாயமான தேவை களைப் பூர்த்தி செய்து, தர்ம ரக்ஷண பிரச்சாரம் செய்து உலகோரை சன்மார்க்க வழியில் பயணிக்க செய்தார்.

கடந்த சில வருடங்களாக ஸ்ரீ ஸ்வாமிகளின் பல உபதேச மொழிகளையும், அமிர்த சொற்பொழிவுகளையும் தொடர்ந்து பிரசுரித்து வந்திருக்கிறோம். அவற்றின் சாராம்சத் தினை ஸ்ரீ விலக்ஷணானந்தரின் அன்பர்கள் நன்றாக கிரகித்துக் கொண்டிருப்பார்கள் என நம்புகிறேன். உதாரணமாக

'குமணாரண்ய குஞ்சரம்' என்ற நூலின் மூலம் ஒரு சீடன் எதார்த்த உண்மையை, நாள்தோறும் நாம் காணும் இயற்கை நிகழ்ச்சிகளை முன்னுதாரணமாகக் கொண்டு உணர முடியும் என்றும், 'விலக்ஷணானந்த போதம்' மூலம் சீடனை குரு ஆரம்ப நிலையிலிருந்து சமாதி நிலைக்கு இட்டுச் செல்ல முடியும் என்பதனையும், நான்கு பாகங்களாக தொடர்ந்து பிரசுரித்த 'ஞான ரகஸ்யம்' என்ற புத்தகத்தின் மூலம் ஞானத் தின் சிறப்புகளை பலவிதமான கோட்பாடுகளுடன் உணர்த்தி யதும், கடைசியாக 'பரமாத்ம எச்சரிக்கை' என்ற உபதேசத்தின் மூலம் சீடன் குருவை அடைந்த பிறகு அது ஜன்மங்கள் தோறும் முடிவில்லாது தொடரும் என்பதனையும், அச்சீடனை தம்முடன் ஐக்கியப்படுத்துவது அவரின் நிதர்சனமான, தீர்மானமான கடமை என்பதனையும் உணர்ந்து கொணடோம்.

ஸ்ரீ ஸ்வாமிகள் ஜீவித்திருக்கும் காலத்தில் அவருக்கு இருந்த வரவேற்பும், கொண்டாடும் அன்பர்களும், பின்பற்றும் பக்தர் குழாமும் அபரிமிதமானது; சொல்லில் வடிக்க இயலாதது. ஆயின் இன்று அது அருகியிருந்தாலும் நீறுபூத்த நெருப்பாக மறைந்துள்ளது.

ஸ்ரீ விலக்ஷணானந்தர் என்ற குருநாதர் ஸ்தூல தேகத் தில் கண்ணுக்குப் புலப்படாவிடினும் அவர் விதையினுள் விருக்ஷம் மறைந்திருப்பதை போல் மேல்மாயிலின் ஜீவசமாதி யின் கண் நமக்காக, இவ்வுலகத்திற்காக, அண்ட சராசரங்களுக் காக இன்றும் வீரியமாக காத்துக் கொண்டிருக்கிறார். 'பரித்ராணாய சாதுனாம்' என்ற கீதா வாசகத்துக்கு ஒப்ப சாது ரக்ஷணத்தின் பொருட்டு அவர் அவதாரம் எடுப்பது உறுதி.

குரு, தகுதியான உண்மையான சிஷ்யனை எதிர்நோக்கி காத்திருப்பதை 'குமணாரண்ய குஞ்சரம்' என்ற நூலில் கூறி யுள்ளதைபோல் நாமும் நம்முடைய பக்தியினால், ஒழுக்கத்தினால், நேர்மையினால், நன்னெறிகளால் ஸ்ரீ விலக்ஷணானந்த பரமாத்மாஜீயின் வரவை குறித்துக் காத்திருப்போமாக!

# முடிவுரை

இந்த புத்தகத்தின் ஆசிரியர் திருமதி அனந்தகிருஷ்ணா அவர்கள் ஒரு மருத்துவர்; அனுபவம் உள்ளவர்; மூத்தவர் என்ற முறையில் முடிவில்லாத ஆனந்தத்தை (Endless Happiness) ஒவ்வொருவரும் எவ்வாறு அடையமுடியும் என்பதைத் தனது குருநாதரான ஸ்ரீ விலக்ஷணானந்தரின் வாழ்க்கையைப் பலவித பரிமாணங்கள் (dimensions) மூலமாக நமக்கு விளக்கி யுள்ளார்.

இந்த புத்தகத்தின் மூலமாக ஆசிரியர், தனது குரு நாதருடன் குறுகிய காலத்தில் ஏற்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் அவரது வாழ்க்கையைக் குறித்து விளக்கி யுள்ளார்.

- ✦ சுவாமிஜி பல கால கட்டங்களில் தங்கிய இடங்களும் சம்பவங்களும் குறிப்பாக சென்னையும் அதன் அருகி லுள்ள இடங்களும்,
- ✦ சுவாமிஜியின்பால் ஈர்க்கப்பட்ட பக்தர்களும் குடும்பங் களும்,
- ✦ சில பக்தர்கள் ஆற்றிய தொண்டும், பங்குகளும்
- ✦ சுவாமிஜியின் சீடர்கள் (அ) அவருடன் அவருடைய காலத்தில் இருந்து பழகியவர்கள் (ஆ) அவருடைய காலத்திற்குப் பின் அவரை உணர்ந்து அவருடன் தம்மை இணைத்துக் கொண்டவர்கள்.

**சுவாமிஜியின் ஆற்றலும் திறமையும்**

- ✦ பேச்சுத் திறமை ஆன்மிக உபன்யாசம் ஆகியவற்றை ஆசிரியர் பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார்.
- ✦ ஜாதி, மத, இன பேதமற்ற எல்லோருடனும் பழகும் விதம் Interacting capability with everyone without any caste, colour and creed.

- எல்லோருடைய தேவைகளையும் புரிந்து கொண்டு, உதவுதல் understand others need in all angles.
- தன்னிடம் வரும் ஒவ்வொருவரின் குடும்பத்தினருட னும் மனம் விட்டுப் பழகி, அக்குடும்பத்தின் அங்கத் தினராகவே மாறி விடுவது. குறிப்பாக, சுவாமிஜி தனது குடும்பத்தினருடன் எவ்வாறு பழகினார் என்பதை ஆசிரியர் விளக்கமாகத் தெரியப்படுத்துகிறார்.
- குழந்தைகள் முதல் முதியவர் வரை எல்லோருடனும் சமமாகப் பழகுதல் To put his qualities in management language.
- காலம் தவறாமை; அதாவது கால முறைப்படி செயல்படுதல் Excellent time management.
- திட்டமிட்டு செயல்படுதல் Planned action.
- மற்றவருடைய திறமையை மதித்தல் Recognising and respecting the talents of others.
- சிறந்த முறையில் தொடர்பு கொள்ளும் திறன் An effective communication.
- சிறந்த குரல் வளம் மிக்கவர்.
- இதிகாச, புராண கருத்துக்களைச் சிறுவர்களும், படிக்காதவர்களும் கூடப் புரிந்து கொள்ளும் வகையில் சிறப்பாகக் கூறக் கூடியவர்.
- தனது பக்தர்களுக்கு உணர்ச்சிப்பூர்வமாகவும், உற்சாக மாகவும் கருத்துக்களை அளிப்பவர் (emotional support)

அடுத்த படியாக ஆசிரியர், சுவாமிஜியுடன் தனது சிறிய வயதில் அனுபவித்த அனுபவங்களின் பசுமையான நினைவு களைக் குறிப்பிடுகிறார்.



- சுவாமிஜியிடம் தன்னையே அர்ப்பணித்த சிவராமய்யாவின் பக்தி.
- இராமானுஜத்தின் கைங்கர்யம்.
- மேல்மாயில் பாஷ்யத்தின் குரு பக்தி.
- மாணிக்க ஆச்சாரியின் தொண்டு.
- ருக்மணி பாய் ஆசிரியை உணரச் செய்தது. அதாவது ருக்மணி பாய் அளித்த விலைமதிக்க முடியாத பொருட் களை சுவாமிஜி தேவைப்பட்டவருக்கு அளித்தது.
- சிறுவன் அனந்தராமனின் திக்குவாயினை குணப் படுத்தி, அவனைப் பேச வைத்ததுடன், அவனுக்குக் கல்விக்கு ஆசி கூறியது.
- இந்திராவைப் பிடித்திருந்த கெட்ட ஆவியினை விரட்டியது.
- குமாரதாரா பயணம் - அனந்தராமனால் எழுதப் பட்டதைப் படிக்கவும்.
- எழுத்துத் திறமை - புலவர் திருமலை எழுதிய கவிதையை முடித்து அவரை உணரச் செய்தது.
- எல்லோருடனும் பகிர்ந்து உண்பது.
- திருமலை ஏழுமலையானின் ஆடை ஆபரணங்களைப் பற்றி, எல்லோருக்கும் விளக்கிக் கூறியது.
- குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வது, பரீட்சை நேரங்களில் அவர்களின் பயத்தைப் போக்குவது, அவர்களுக்கு இனிப்பு வழங்குவது.

ஆசிரியர் இந்நூலுக்கு முடிவுரை எழுத என்னைப் பணித்தார். ஆனால் நான் இதை முடியாத உரையாகவே கருதுகிறேன்.

My writing will have a magnetic effect on the readers and they will be attracted towards Swamiji. I wish my writing will attract all sections of the society towards laudable qualities of Swamiji. The book by author Dr. Anantha Krishna will be an eye opener for the present generation. May I conclude by saying Swamiji was an inspiring personality and a link for generations. The life of Swamiji as the author intended, takes us towards everlasting joy and happiness.

**- அனந்தராமன்**
ஆசிரியரின் இளைய சகோதரன்